கனி

ஜே ரமேஷ்

கனி

ஜே ரமேஷ்

ISBN: 9798885217644

முதற் பதிப்பு 2021

பதிப்பு :

சுவி. கிறிஸ்டியன் டேனியல்

இயேசு இரட்சிக்கிறார் ஊழியங்கள்

96 கிழக்குத் தெரு, பெரமனூர்,

சேலம் - 636007

அலைபேசி: 944324907

Wrapper design : Pr.Reegan Dhanasekar

என் ஆவிக்குரிய

சகோதர சகோதரிகளுக்கும்

என் அன்புக்குரிய

மனைவிக்கும் மக்களுக்கும்

சமர்ப்பணம்!

அருள்திரு பேராயர், பேராசிரியர் முனைவர்
லா. ஜோசப் மோகன் குமார்
M.A., M.phil, B.C.S., B.D, M.Th., D.D., Ph.D.
BISHOP OF TAMILNADU AND PONDICHERRY DIOCESE
ANGLICAN CHURCH OF INDIA

நற்செய்தித் திரைப்பட இயக்குநர்
திரு. ஜானி ரமேஷ்.. ஒரு ஞானி ரமேஷ்..!
இவர் ஒரு மெய்யியல் சித்தன்..
சிலுவையை போதிமரமாக்கிய கிறிஸ்தவ புத்தன்..!

இவரது.. நான் இயேசுவுக்கு கடனாளி ஊழியங்கள் மூலம்..
இந்திய மெய்யியலையும், கிறிஸ்த இறையியலையும்
ஒரே நேர்கோட்டில் இணைத்து புதிய வேதாந்தப்
புதையல்களை பூமிக்கு எடுத்து வந்து தருபவர்..!

நடிகர்களை படம்பிடித்த இவரது திரைத்துறை கேமரா
திரும்பியது.. இயேசுவை மட்டுமே விரும்பியது..!

திரு. ஜானி ரமேஷ்.. வழக்கமாக வந்து செல்லும்
வால் நட்சத்திரம் அல்ல.. மனித உருவில்
கனன்று கொண்டிருக்கும் வேதச் சூரியன்..
பல விடைகளை உள் வைத்திருக்கும் லெமூரியன்..!

ஊடக பதிவு.. உன்னத ஊழியம்.. ஆராய்ச்சி வகுப்பு..
அரிய நூல் தொகுப்பு.. அடுத்தத் தலைமுறைக்கான
ஆணவப் பகுப்பு.. என பன்முக வடிவங்களில்
பறைசாற்றிக் கொண்டிருக்கும் திரு. ஜானி ரமேஷ்..
சமகாலத்தின் சத்திய அறைகூவல்..
காலம் அறிந்து கூவும் கர்த்தரின் சேவல்..!

இந்தியச் சூழலில் அந்நியமாக்கப்பட்ட கிறிஸ்தவத்தை..
இந்திய இறையாண்மையோடு இணைத்து..
மேல்நாட்டு மின்விளக்காக அல்ல..
உள்நாட்டு ஒளிவிளக்காய் ஊழியம் செய்பவர்..!
அங்கீகாரம் எதிர்ார்க்காமல் அவதாரம் எடுப்பவர்..!

இந்தியக் குவளையில் கிறிஸ்தவத் தேநீர் கொடுப்பவர்..!
வேட்டி, சட்டை அணிந்த இயேசுவை விளக்குபவர்..!
கடற்கரையின் கலங்கரை விளக்கமாகச் சுழன்று
கொண்டிருக்கும் இவர் ஒரு.. சுவிசேஷ மகரிஷி..!
சிலுவையணிந்த ரிஷி..! வாழ்க இவர் பணி..!

சிலுவைச் சித்தர்

பேராயர். ஜோசப் மோகன் குமார்.

அணிந்துரை

கோ. செல்வின் தங்கதுரை
தொகுப்பாசிரியர்,
‘தேவனுடைய வார்த்தை’ (மாத இதழ்),
மதுரை.

இப்புத்தகத்தின் ஆசிரியர் ஜே.ரமேஷ் அவர்கள் “சத்தியத்தைத் தேடி” என்ற நற்செய்திக் குறுந்திரைப் படத்தை ஆக்கி வெளியிட்ட காலகட்டத்திலிருந்து அவரை அறிவேன். எங்களுக்குள்ளிருந்த தொலைபேசித் தொடர்பில் தான் எங்கள் நட்பு துளிர்த்தது.

ஆதாமையும் ஏவாளையும் படைத்தபின் தேவன் அவர்களோடு பேசிய முதல் வார்த்தை “கனி கொடுங்கள்” (Be fruitful) என்பதுதான் (ஆதியாகமம் 1:28). தமிழில் அதை “பலுகிப் பெருகுங்கள்” என்று சொல்லியிருந்தாலும் ஆங்கில வேதாகமத்தில் “கனி கொடுங்கள்” என்றுதான் உள்ளது. “கனிதரும்படியாக மனிதனை கடவுள் படைத்தார்” என்ற புள்ளியிலிருந்து ஆசிரியர் தொடங்கியிருப்பது சிறப்பாக உள்ளது. அடுத்து “கனி” என்பதை வேதம் எதைக் குறிப்பிடுகிறது என்ற கேள்வியை எழுப்பி பதிலை விளக்குகிறார். “கனி” கொடுப்பது என்றாலே மற்றவர்களின் நன்மைக்கானது என்பதே உண்மை. ஆகவே “கனி” என்பது நற்கிரியை. நாம் நற்கிரியைகளைச் செய்வதற்கே கிறிஸ்து இயேசுவுக்குள் தேவனால் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை வேதம் வலியுறுத்துகிறது.

“நற்கிரியை” என்பது கடவுள் நமக்குக் கற்றுக் கொடுத்ததையும் அவர் பிரியப்படும் செயல்களையும் நாம் செயல்படுத்துவதே. ஆகவே தான் “கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப் பாருங்கள்” (எபேசியர் 5:10), “அவனவன் தன்தன் சுயகிரியைகளை சோதித்துப் பார்க்கக்கடவன்” (கலாத்தியர் 6:4) என்ற வேதசத்தியங்களை எளிமையாக ஆசிரியர் தெளிவுபடுத்தும் பாங்கு சிறப்பாக உள்ளது.

கனிகள் என்பதற்கு இணையான மற்றுமொரு பொருள் பலன் அல்லது பலனளிப்பது. முப்பதும் அறுபதும் நூறுமாய் பலன் என்று வேதம் கூறுவதை "பெருக்கத்தின் விதி" (Law of increase) என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். அது கடவுளுடைய வார்த்தைகளை கேட்கும் திறனையும் அதை செயல்படுத்தும் தன்மையையும் பொறுத்திருக்கிறது என்று தெளிவுபடுத்துகிறார். கனி கொடாத அத்திரமரம் சந்தித்த சம்பவத்தையும் விவரிக்கிறார்.

யோவான் 15ம் அதிகாரத்தில் இயேசுகிறிஸ்து தம்மை திராட்சைச் செடிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். மிகுந்த கனி கொடுக்க வேண்டுமானால் அவரில் நிலைத்திருக்கவும் பிதாவாகிய தோட்டக்காரர் அதை சுத்தம் செய்ய ஒப்புக் கொடுக்க வேண்டுமென்ற பகுதியை ஆசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

மேலும் கனிதருவதற்கு இன்றியமையாத விசுவாசத்தையும் கிரியையுள்ள வாழ்வையும் உயர்த்திக்காட்டுகிறார். கடவுள் எதிர்பார்க்கும் கனிதரும் வாழ்வுக்கு நித்திய வாழ்வை பிரதிபலனாக வைத்திருக்கிறார்.

அன்பின் நிமித்தமாக செய்யும் ஜெபத்தோடு கூடிய மனுக்குல சேவையையும் ஊழியத்தையும் முக்கியப்படுத்தி விவரித்துள்ளார். மரமானது அதன் கனிகளால் அறியப்படும் என்பதற்கேற்ப நம்முடைய கனிகளே மற்றவர்களை ஈர்க்கும். அதுவே கிறிஸ்தவர்களின் அடையாளமாயிருக்க (Identity) வேண்டும். அதுவே கடவுளுடைய எதிர்பார்ப்பு. அதை அடைந்து கொள்ளும் வகையில் இப்புத்தக ஆசிரியர் நமக்கு முன்பாக வைத்திருக்கிறார். பயனடைய வேண்டியது நம்முடைய பகுதி.

அன்புடன்
கோ. செல்வின் தங்கதுரை

ஜோ. அருள்பிரகாஷ்
சொற்பொழிவாளர்

ரமேஷ் என்கிற கருத்து மரமே..!

உன் எழுத்துவளத்தால் நீ படைத்திருக்கிற
கனித்தோட்டத்தை.. ருசித்துவிட்டு, ரசித்துவிட்டு,
என் வாழ்த்துப் பூக்களை உன் வாசலுக்கு
அனுப்பி வைக்கிறேன்..!

இறையியலை அழகாகப் புரிந்து கொண்டு..
ஆன்மீகத்தைச் சரியாய்ப் பகிர்ந்தளிக்கும் உங்கள்
படைப்புத் திறனுக்காய்.. படைத்தவனுக்கு
நன்றி செலுத்துகிறேன்..!

இன்று நற்செய்திப் போர்வையில்
நடக்கும் விளம்பரங்கள்..
ஆன்மீகத்தைச் சொல்ல நடக்கும் அலங்காரங்கள்,
வருகையைச் சொல்லி நடக்கும் வியாபாரங்கள்..
இந்தப் போலிகளைப் புறந்தள்ளி,
நீ படைக்கும் புத்தகங்கள்..
சத்தியத்தைச் சத்தியமாய் சொல்லும்
முத்திரை முயற்சி..!

நீ அருளுரை மேடைகளை ஆய்வரங்கமாக்குகிறாய்..
சிலுவையை முன்னிறுத்தி சில கேள்விகள் கேட்கிறாய்,
சிக்கலைத் தீர்த்துவைக்க சில விடைகளும் கூறுகிறாய்.

கடலுக்குள் இருக்கிற மீன் தன் உடலக்குள்..
உப்பை அனுமதிக்காதது போல..
நீ கலைத்துறைக்குள்ளேயே கறைபடியாமல் வாழ்கிறாய்!

உன் இலக்கியச் செறிவும், ஊடக அறிவும்..
கிறித்தவத்தில் ஏற்பட்டிருக்கும் குறைகளுக்கு
மருத்துவம் பார்க்கட்டும்..! வாழ்த்துகள்..!

அன்புடன்,

3/8/2021

உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள் என்றுச் சொன்ன நம் கருணாமூர்த்தியான இயேசு கிறிஸ்துவின் திருநாமத்தினாலே வாசகர் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

நற்செய்தித் திரைப்படம், ஊடகம், பிரசங்கம், கருத்தரங்கம், வேத ஆராய்ச்சிக் கூடுகை என்று தொடர்ந்து வருகின்ற ஊழியப் பணியில், கடவுள் எனக்கு அளித்த மற்றுமொருப் பாதையான எழுத்துப் பணியின் மூலமாய் கனி தரும் வாழ்வைப் பற்றிய சிந்தனையை அறிவிக்கும்படி, ஆவியானவரின் ஏவுதலைப் பெற்றதில் அவருக்கு நன்றியறிதலோடு பெருமகிழ்ச்சியடைகிறேன். மீண்டும் பேனா பிடிக்க அன்பாய் அழைத்த, சகோதரர் கிறிஸ்டியன் டேனியல் (இயேசு இரட்சிக்கிறார் ஊழியங்கள்) அவர்களுக்கும் என் நன்றியை அர்ப்பணிக்கிறேன்.

கனிதரும் வாழ்வு என்பதை எண்ணிப் பார்க்கையில் நமக்கு நினைவிற்கு வர வேண்டியது, முன் நின்ற, முன் நிற்கும் முன்னுதாரணங்கள் ஆகும். அதில் முதன்மையாய், மூத்ததாய், முதிர்ந்ததாய், முன்பாய் முகிழ்த்தது, சரித்திரமாயும் சத்தியமாயும் திகழ்ந்திருக்கும் நம் இயேசு கிறிஸ்து. கனிதரும் ஒரு வாழ்விற்கு நாம் என்ன செய்ய வேண்டும்.

இயேசு கிறிஸ்து நமக்கு நுகமாய்க் கற்றுத் தந்தது, சிலுவையாய்ச் சுமக்கச் சொன்னது என்ன?

மத்தேயு 16:21-27, மாற்கு 8:26-38:

நுகம்: கிறிஸ்துவிடமிருந்து உலகில் வாழக் கற்றுக் கொள்ள ஏற்றுக் கொள்வது.

சிலுவை: கிறிஸ்துவிற்காக உலகை விட்டு விலகிச் செல்ல எடுத்துச் செல்வது.

Yoke: Learning the world from Christ.

Cross: Leaving the world for Christ.

ரோமர் 6:16-18

1. நமது மரணத்திற்கேதுவான பாவம் (சிலுவையில் அறைவது)
2. நீதிக்கேதுவான கீழ்ப்படிதல் (நுகத்தை சுமப்பது)
3. அடிமைகளாக ஒப்புக்கொடுப்பது (நுகத்தை ஏற்று கிறிஸ்துவைப் பின்பற்றுவது)
4. நமக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படிந்ததினால் (சுமை இலகுவானது)
5. பாவத்திலிருந்து விடுதலை (சிலுவை)
6. நீதிக்கு அடிமை (நுகம்)

மனிதநேயம் என்பதைத்தான் நமது ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்து நமக்கு கற்பனையாக கற்றுத் தந்தார், "உன்னை நேசிப்பது போல் பிறரை நேசி". இது கிறித்தவம் நமக்குக் கற்றுக் கொடுக்கும் தாயக மந்திரம். கிறிஸ்துவுக்குள் வாழ்வதற்கு நாம் பெற்றுக் கொண்டிருக்கும் தாரக மந்திரம். மனிதநேயம் இல்லாமல் நாம் கனி கொடுக்க முடியாது.

புத்தன் காவியணிந்தது மனித நேயத்தால், அதில் ஆசை நிறம் இழந்தது. காந்தியடிகள் அகிம்சை கண்டதும் மனித நேயத்தால், அதில் தேசம் சுகம் அடைந்தது. மதர் தெரேசா துறவு கொண்டதும் மனித நேயத்தால், அதில் மனிதகுலமே மலைத்து நின்றது.

இயேசு கிறிஸ்து சிலுவை ஏற்றதும் மனித நேயத்தால் தான். அதில் அன்பு நிஜம் ஆனது.

மனுக்குலம் பாவத்தில் இருந்து மீட்கப்பட்டது. நற்செய்திக்கு அன்பையே வித்திட்டு கட்டளையிட்டது.

மனிதநேயத்தின் மறுபெயர் மனிதாபிமானம். எந்த மனிதனுக்கு அன்பினால் அடுத்த மனிதன் மேல் அபிமானம் வருகிறதோ, அங்கே மனிதாபிமானம் பிறக்கிறது. மனிதன் மேல் அபிமானமே, மனிதாபிமானம்.

சி.எஸ்.லூயிஸ்: தேவகுமாரன் மனிதனாக அவதரித்தது மனிதர்களை தேவகுமாரராய்

ஆக்குவதற்கே. கனிகொடுக்கிறவர்கள் எல்லாரும் தேவகுமாரர்களே.

இந்த நூலை அச்சிட சரிபார்த்து, திருத்தங்கள் செய்து, நல் ஆலோசனைகள் வழங்கித் துணை நின்ற, அன்புச் சகோதரர் திரு. சாலமோன் ஏசுதாஸ் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்த நூல் உங்கள் கரங்கள் தாண்டி தாவட்டும். மனங்கள் தாண்டி மையமாய் மேவட்டும். நற்செய்தி விதைகளை செல்லுமிடமெல்லாம் தூவட்டும்.

கனிகொடுக்கக் கற்றுக் கொடுத்தவர் சிலுவை மரமேறினார், நாம் உலகில் கனிகொடுக்க. மரணத்தை வெற்றிச் சிறந்தவர் பரமேறியது எதற்கு? கனி கொடுக்கும் நமக்கு பலனை கொண்டு வர. பலனைப் பெற்றால் நாமும் பரன் சேருவோம், ஜீவவிருட்சத்தின் கனியினைப் பெற்று அவருடன் நீடித்து வாழ.

கனிதரும் வாழ்வில் கால் பதித்து, வலது புறம் இடது புறம் சாயாமல் பாவமின்றி பயணிக்க, ஊன்று கோலாகவும், தூண்டு கோலாகவும், நம் கர்த்தரின் வார்த்தைகளை நமக்கு நினைப்பூட்ட, இந்த நூல் வழித்துணையாக உடன் வரும் என்று நம்புகிறேன்.

அன்புடன் அடம்பிடிக்கும்,

ஜே ரமேஷ்

கனியின் கொடிகள்

உரமிட்ட ஓர் உரை

1. கனி 1

2. முதல் கனி 15

3. கனிகொடாத ஆதாம் 29

4. கனி கொடுப்பது 37

5. கனி தேடுவது 42

6. கனி செடி கொடி 47

7. கனிதர விசுவாசம் 52

8. கனியின் வித்து 58

9. கனியில் ஆவி 67

10. கனிதரும் கிரியை 71

11. கனியில் கர்த்தரின் எதிர்பார்ப்பு 84

12. கனியினால் நித்திய வாழ்வு 89

13. கனியின் கிரீடங்கள் 94

14. கனியெனும் திருப்பணி 108

15. கனி தரும் வாழ்க்கை 115

1. கனி

முதலில் வேதாகம வெளிச்சத்திலே கனியைக் காண்போம். கனியின்றி கிறித்தவ ஜீவியம் இல்லை. கனிகொடுக்கும் வாழ்வில்லாமல் பரலோகத்தின் நிச்சயம் இல்லை. கனிதரும் வாழ்வில் இணைந்ததே இரட்சிப்பின் அனுபவம். கனியினால் அறியப்படுவதே சாட்சியுள்ள ஜீவியம். கனியின் உண்மை உணர வேண்டியதாயின், அதன் தொடக்கமும் தொடர்ச்சியும் இவ்விதமாக இருக்க வேண்டியது அவசியமாக உள்ளது. கனி பிறருக்கானது என்றாலும், கனிகொடுப்பதற்கு நாம் தகுதியாக வேண்டும்.

மனம் திரும்புதலில், மீண்டும் பிறப்பதில் கனி:

- யோவான் 12:24 கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்து இருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். ஆவிக்குரிய வாழ்வென்பதே கனி கொடுக்கும் வாழ்வு என்பதை நாம் அறிவோம். ஆவிக்குரிய வாழ்வைப் பெறுவதற்கு நாம் இரட்சிப்பைப் பெறுதல் அவசியம். அந்த இரட்சிப்பிற்கு நாம் கிறிஸ்துவோடு மரித்தல் அவசியமாகிறது. மிகுந்த கனிகளைக் கொடுப்பதற்கு நாம் விதைக்கப்பட வேண்டும். கனி என்பது பலன்.
- அப்போஸ்தலர் 3:19 உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனம் திரும்பி குணப்படுங்கள். பாவமில்லாத வாழ்வே குணப்பட்ட இருதயத்தைக் கொண்ட வாழ்வாகும். அந்த வாழ்வே நம்மைக் கனி கொடுக்கச் செய்யும்.
- ரோமர் 6:23 பாவத்தின் சம்பளம் மரணம். மரணமும் கனி ஆனால் அது அழிவின் கனி. அழிவதற்கான கனி. பாவத்திலிருந்து விடுதலைப் பெறுவதே கனி கொடுக்கும் வாழ்வை நமக்குக் கொடுக்கும்.
- 2கொரிந்தியர் 5:17 கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கலாம். புது சிருஷ்டியாக மாறாமல் நாம் இந்த மண்ணில் கனி கொடுக்கும் ஜீவியத்தைப் பெற முடியாது. நீதியின் கனியாக நமது வாழ்வை

மாற்றிக் கொள்ள மீண்டும் பிறப்பது அவசியமாகிறது. நீதியின் கனி எவ்விதமாய் அறுக்கப்படும்?

- கலாத்தியர் 6:7-8 மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைப்பவன் ஆவியினால் நித்திய ஜீவனை அறுப்பான். கனி கொடுக்காதவருக்கு நித்திய ஜீவன் இல்லை. நித்திய ஜீவன் இல்லாமல் கனியுமில்லை.
- 2கொரிந்தியர் 9:10 விதைக்கிறவனுக்கு விதையையும் புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து அதைப் பெருகப் பண்ணி உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார். (கனி கொடுக்கக் கர்த்தரின் உதவி)
- பிலிப்பியர் 1:11 கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்கவும் வேண்டும். (கனிகொடுத்துக் காத்திருப்பது)
- கொலோசெயர் 1:10 சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, கடவுளை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ள அவருடைய வல்லமையால் பலப்படுத்தப்பட வேண்டும். (கனிதர அவரது பலம் தேவை)

ஒப்புரவாகுதலின் கனி:

ஒப்புரவாகுதல் என்பதற்கு இணையாக சொல்லப்படும் வார்த்தை கீழ்ப்படிதல். கீழ்ப்படிவது என்பது நமக்குச் சொல்லப்படுவது நமக்கு நன்மையைக் கொடுக்கும் என்று அறிந்து அதனை ஏற்றுக் கொள்வது. கர்த்தரோடு நாம் ஒப்புரவாகுதல் என்பது கனி கொடுக்கும் வாழ்விற்கான ஆரம்பமாய்த் திகழும். அதே விதமாக, நாம் நம்மைத் தாழ்த்திக் கொள்ளும்போது அது நமது பெருமையை அகற்றுவதான எண்ணத்தை நமக்குக் கொடுக்கும்.

- யாக்கோபு 4:10 கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப் படுங்கள் அப்பொழுது உங்களை உயர்த்துவார்.
- நாம் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்பட வேண்டும் என்றால் அவரிடம் மட்டுமல்ல, அவரைத் தொழுது கொள்ளுகிற அடையாளத்தை வெளிப்படுத்தும்

விதமாக நாம் மற்றவர் முன்பும் தாழ்மையாக இருப்பதே. அதுவும் கனியே.

- எபிரேயர் 12:11 எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டும் என்றும் அப்படிச் செய்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றும் மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து நமக்குக் கற்றுக் கொடுப்பதைக் காண்கிறோம். சமாதானத்தின் பலன் என்பதை நீதியென்று விளங்கிக் கொள்வதால் நாம் சமாதானத்திற்கான பலனை நீதியாகிய கனியாகவும் புரிந்து கொள்ள முடிகிறது. கர்த்தர் உலகத்தில் உள்ள தகப்பனே நாம் சீர்பொருந்த வேண்டும் என்று சிட்சிக்கிறார் என்றால் நமது பரம பிதாவானவர் நம்மை சிட்சிக்க மாட்டாரா என்று வேதம் நமக்கு அறிவிப்பதை அறிவோம். அப்படியான சிட்சை நமக்கு தற்போது துக்கமாய்த் தெரிந்தாலும் அதில் பழகியவர்களாய் நமது வாழ்விருந்தால் பின்பு பலனைக் கொடுப்பதாக இருக்கும். அது நீதியாகிய சமாதானத்தின் பலனாக, கனியாக இருக்கும்.
- யாக்கோபு 3:17-18 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும் பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும் இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்து பட்சபாதம் இல்லாததாயும் மாயமற்றதாயும் இருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களால் சாமாதானத்தில் விதைக்கப்படுகிறது. இவைகளே கடவுளுடன் நாம் ஒப்புரவாகுதலில் அடையும் நீதியின் கனி!

நற்செய்தியின் கனி:

- எபேசியர் 5:11 கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்.
- நற்செய்தி அறிவிப்பதும் கர்த்தருக்கு கனிகொடுப்பது என்பதில் சந்தேகமில்லை.
- இந்த உலகில் உள்ள அந்தகாரக் கிரியைகளுக்கு அநேகர் உடன்பட்டுப் போவதால் பாவம் பெருகுவதை நாம் அறியாமல் இல்லை. அறியாமையினால் பலர்

அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்பட்டவர்களாகவும் இருப்பதை நாம் உலகில் காண்கிறவராய் அல்லவா இருக்கிறோம். அந்தகாரம் என்றாலே இருள். இருளின் கிரியை என்றால் பாவமும் அதன் சம்பந்தமான கிரியைகளுமே.

- இப்படிப்பட்ட நிலையில் அடிமைப்பட்டிருப்பவர்களின் அறியாமை என்கிற இருளைப் போக்குவதே நம்மீது விழுந்த கடமையான சுவிசேஷம். அதனை அறிவிக்க நாம் எடுக்கும் பணி, முயற்சி, அதனை உபதேசிக்க கடிந்து கொள்ளவும் முற்படும்போது, கனியற்றவர் மனம் திரும்ப கனிகொடுக்கிறவர்களாய் நாமும் மாறுகிறோம். அதுவே நற்செய்தியின் மூலம் நாம் கொடுக்கின்ற கனி.

ஆவியின் கனி:

- எபேசியர் 5:9 ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும்.
- ஆவியின் கனியை ஒன்பது சிறப்புகளாக நாம் கண்டாலும், அவை நற்குணங்களாக, கர்த்தரின் பார்வையில் நீதியாகவும், நம்மிடம் உண்மையாகவும் விளங்கும்படியாக உள்ளது என்று இந்த வசனத்தில் நாம் அறிந்து கொள்கிறோம். நற்குணம் வெளிப்பட அது கனியாகக் கருதப்படலாம்.

உதடுகளின் கனி:

- எபிரேயர் 13:15 அவரது நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர் மூலமாய் எப்போதும் கடவுளுக்குச் செலுத்துவோம்.

வாயின் வார்த்தையாக நமது பக்தியானது இல்லாமல், நம் ஆண்டவரைத் துதிப்பது மனதளவில் இல்லாமல் வெறும் வாயளவாய் இருப்பது அது உதடுகளின் கனியென்று வேதம் சொல்கிறது.

முழு உள்ளத்தோடும் முழு ஆத்துமாவோடும் முழு இருதயத்தோடும் முழு பெலத்தோடும் கர்த்தரை நாம் தொழுது கொள்வதே இருதயத்தின் கனி. அப்படியில்லாமல் நாவின் அளவில் தொழுது கொள்வது உதடுகளின் கனி.

அறிவிக்கும் கனி:

- மத்தேயு 12:33 மரமானது அதன் கனியினால் அறியப்படும்.

வேர் இல்லாமல் மரம் இல்லை. மரம் இல்லாமல் கிளை இல்லை. கிளை இல்லாமல் கனியில்லை. ஒரு மரமானது நன்கு வளரவேண்டுமென்றால் அதன் வேர் நன்கே நல்ல நிலத்தில் ஊன்றிப் பரந்து வளர்ந்ததாக இருத்தல் அவசியம். அப்படி வளருகின்ற பொழுது அது கிளைபரப்பி செழிப்புடன் வளரும் நிலையை அடைகிறதை நாம் காண்கிறோம். அப்படி வளர்ந்த மரமானது நல்ல கனியைக் கொடுக்கிறதாகவும் இருக்கும்.

இதில் அறிந்து கொள்கிற வேர் போன்ற சத்தியம் என்ன என்றால், நாம் அந்த மரத்தின் கனியைப் புசித்துப் பார்க்கும் போது அந்த மரத்தின் வளர்ச்சியை, அது வேர் ஊன்றிய இடத்தை, நல்ல சூரிய ஒளி, மழையைப் பெறும் விதமாக வளர்க்கப்பட்ட அந்த மரத்தின் தரத்தினையும் யோசிக்க வைக்கிறதாக இருப்பதை நாம் உணர்வோம். கனியின் மூலம் அந்த மரத்தின் தரம் அறியப்படும் என்பதை விளக்குகிறது. நம்மைக் காண்கிறவர், நமது வாழ்வைக் (கனி) காண்கிறவர் நம்மை நட்டு வளர வைத்த கிறிஸ்துவைக் காணும்படியாகச் செய்யும்.

வேரும் கனியும்: கீழ்நோக்கி வேர், மேல் நோக்கி கனி.

பழைய ஏற்பாட்டில் சொல்லப்படும் வேரும் கனியும் எடுத்துக் கொண்டால் அதில் நாம் விளங்கிக் கொள்கிற மறைபொருள் என்ன?

ஏசாயா 11:1-2 ஈசாய் (தாவீதின் தகப்பன்) என்னும் அடி மரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை (தாவீதின் குமாரன் என அழைக்கப்படும் இயேசு) எழும்பிச் செழிக்கும்.

கிறிஸ்து இந்த உலகத்தில் மனிதராய் அவதரித்து வரும் காரியத்தைக் கூட வேர், மரம், கிளை, துளிர் என விளக்கப் படுவதை நாம் காண்கிறோம். எழும்பிச் செழிக்கும் என்பது எதை நினைப்பூட்டுகிறது என்றால் கனிகொடுக்கும் என்றே பொருள்படுவதாக நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது.

கனி

கிறிஸ்துவின் கனியே அன்பு, கிறிஸ்துவின் கனியே மனம் திரும்புதலுக்கான நற்செய்தி. கிறிஸ்துவின் கனியே இந்த உலகத்தின் பாவத்திற்காக சுமக்கப்பட்ட சிலுவை. கிறிஸ்து கொடுத்த கனியே நம் பாவத்திற்கான மன்னிப்பு.

அவரது கனிகளால் நாம் விடுதலையாக்கப்பட்டோம். பாவ மீட்பைப் பெற்றுக் கொண்டோம். அதின் பலனாக நாம் கனி கொடுக்கிறவர்களாக மாற்றப்படுகிறோம். அவரால் அப்படி மாறும்படி எதிர்பார்க்கப்படுகிறோம்.

ஏசாயா 27:6 யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக் காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும். மேசியாவின் வருகையைக் குறித்தக் காரியங்களைப் பற்றி உரைக்கும் போதும் அதனை வேர் பற்றி பூத்துக் காய்த்து உலகில் பலனால் நிரப்பப்படும் என்றே ஏசாயா விளக்கிப் பாடுவதை நம்மால் காணமுடிகிறது. ஏயாயா 11:10 ஈசாயின் வேருக்காக, ஜனங்களுக்குக் கொடியாக நிற்கப் போகிற மேசியாவாகிய கிறிஸ்துவின் மகிமை இந்த உலகில் தாபரஸ்தலமாக இருக்கும் என்று தீர்க்கதரிசனமாக ஏசாயா இஸ்ரவேல் ஜனங்களுக்கு அறிவிக்கிறார். மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவும் யாக்கோபிற்கு கனியாவார்.

ஏசாயா 37:31, 2ராஜாக்கள் 19:30. யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள். மேலே கனி கொடுப்பது என்பது கிறிஸ்து மீண்டும் வரப்போகிற அவரது வருகையின் நாளையே குறிக்கிறதாக அநேக வேத ஆய்வாளர்களின் கருத்து.

வேருக்கும் கனிக்கும் நிபந்தனை, அழுகினவேர், கனிதரா பூ, வேரூன்றினால் நாளை கனி:

வேருக்கு அளிக்கப்பட வேண்டியவை என்ன? கனிதர நிபந்தனைகள் என்ன? அழுகின வேராக இருந்தால் கனி தர இயலாது. வேர் அழுகாதிருக்க என்ன செய்ய வேண்டும்?

பூத்தாலும் கனியாகாமல் இருப்பது எதினால்? கனி கொடுக்க வேரூன்றி இருப்பது முக்கியம் என்பதற்கான அடிப்படை வசனங்களை நாம் தியானிக்கலாம்.

கனிகொடுக்க நாம் கற்பிக்கப்படவும் வேண்டும். கர்த்தரின் வாயின் வார்த்தையாக இருக்கையில் அது வசனமாக

உள்ளது. கர்த்தருடைய ஊழியரின் மூலமாக அளிக்கும் போது அது உபதேசமாக, பிரசங்கமாக, அறிவுரையாகவும் உள்ளது.

கனிகொடுக்கும் மரத்தின் வேர் மற்றும் கனிகளுக்காக என்ன நிபந்தனைகளை விவிலியத்தின் மூலமாக நாம் அறிய முடியும் என்று நாம் சிந்திக்கலாம்.

- 1தீமோத்தேயு 4:6 விசுவாசத்திற்குரிய வார்த்தை கொண்டு நல்ல போதகத்தில் தேறினவனாகும்போது கிறிஸ்துவிற்கு நல்ல ஊழியனாக முடியும். கனி கொடுக்கும் ஊழியனுக்கு உபதேசமாக உள்ளது.
- யூதா 1:20 பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். கனி கொடுக்க ஜெபம் அவசியம்.
- எபேசியர் 3:23 உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவி (ஆவியின்கனி) உள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.
- கொலோசெயர் 2:7 வேரூன்றி கிறிஸ்துவில் கட்டப்படு.
- கலாத்தியர் 5:22-23 ஆவியின் கனியாகிய இவைகட்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.
- கொலோசெயர் 1:10 நற்கிரியைகளின் கனிகளால் தேவனை அறிகிற அறிவில் விருத்தியடையலாம். அவருக்குப் பாத்திரராய் நடந்து கொள்ளலாம்.
- ஏசாயா 3:10 உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள். அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனை அனுபவிப்பார்கள். கனி கொடுப்பதால் நீதிமான்களாகலாம். நீதிமான்களின் கிரியைகள் பலன்தரும். அது அவர்களுக்கான கனி.
- ரோமர் 11:16 முதற்பலனாகிய மாவானது பரிசுத்தமாயிருந்தால் பிசைந்தமா முழுவதும் பரிசுத்தமாயிருக்கும். வேரானது பரிசுத்தமாயிருந்தால் கிளைகளும் பரிசுத்தமாயிருக்கும். பரிசுத்தக் கனி!

கனி என்பதில் தான் மனிதனின் வீழ்ச்சி ஆரம்பம் என்று ஆதியாகமம் தொடங்கி வேதம் நமக்கு விளக்குகிறது. கனிதரும்படியாக மனிதனைக் கடவுள் படைத்தார். அதற்கு

அவன் எந்தக் கனியைப் புசிக்கக் கூடாது என்றும் கட்டளையை வைத்தார். புசிக்கக் கூடாத ஒரு கனியைப் புசித்ததால் உலகம் பாவத்தில் தள்ளுண்டு போனது. நல்லது என்று கண்டு எல்லா சிருஷ்டிப்பையும் கர்த்தர் படைத்தார் ஆனால் முதல் மனிதன் செய்த பாவத்தினால் உலகத்தைப் பாவம் ஆட்கொண்டது.

பொதுவாக கனியின் சிறப்பு என்ன? ஒருவர் அன்பாய் பேசுவதைக் கூட கனிவாய் பேசுவதாய்ச் சொல்கிறோம். காத்திருந்து பலனை அனுபவிப்பதை, கனி தந்தது என்று நாமும் பேச்சு வழக்கில் கொண்டுள்ளோம். ஒரு காரியம் நன்மையில் முடிய, அதனைக் கனிந்தது என்று சொல்கிறோம்.

கனியைப் பற்றி உலகம் கூறும் காரியங்கள் என்ன? இந்திய இலக்கியங்கள் கூறும் செய்திகள் என்ன?

ஒரு கனி விழுந்ததை வைத்தே நீயூட்டன் புவிஈர்ப்பு சக்தியினை அறிய முடிந்தது. எடுப்பான தோற்றத்துடன் ஆண்களின் குரல்வளை இருந்தால் ஆதாமின் ஆப்பிள் என்று சொல்லப்படுவது வழக்கில் உள்ளது.

The Adam's apple or laryngeal prominence, is the lump or protrusion in the human neck formed by the angle of the thyroid cartilage surrounding the larynx seen especially in males (google).

மன்னன் அதியமானுக்கு நெல்லிக் கனியைக் கொடுத்ததாக ஔவையின் கூற்றினைத் தமிழ் இலக்கியம் விவரிக்கிறது. இதிகாசமான இராமாயணத்தில், தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த சபரி எனும் பெண் சுவைத்துப் பார்த்து வழங்கிய கனிகளை, இராமன் உண்டு அவள் வேண்டுதலை நிறைவேற்றியதாக ஒரு கதை சொல்லப்படுகிறது.

இவைகள் கற்பனையாய் புராணம் புனைந்தது. மிகைப்படுத்தியும் உயர்த்தியும் எழுதப்பட்டவையாகவும் கருதப்படுபவை. ஆனால் பரிசுத்த வேதாகமம் என்ன சொல்கிறது?

சைவ சித்தாந்தங்களின் மூல இலக்கியங்களான திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும், சிவஞானபோதமும் பின்வருமாறு கூறுவது நமது வேதாகமத்தின் சத்தியத்திற்கு ஒத்ததாக உள்ளதையும் நாம் காண முடிகிறது. அநாதியான

நமது கர்த்தர் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் படைத்த போது என்ன நடந்தது என்பதையும், இந்திய இலக்கியம் எவ்விதம் சொல்கிறது என்பதையும், நாம் ஆராய்ந்து பார்த்து அதனைப் பிறஇனத்துச் சகோதர சகோதரிகளுக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையில் இருக்கிறோம் என்பதால், இவைகளையும் நாம் அலசிப் பார்க்கலாம். ஆனால் நமது வேதத்தில் சொல்லப்பட்ட சத்தியம் முதன்மையானது!

முக்தி முதற் கொடிக்கே மோகக் கொடி படர்ந்து
அத்தி பழுத்தது என்று உந்தீபற
அப்பழம் உண்ணாதே உந்தீபற – திருவுந்தியார்

முத்தி : பாவமில்லா நிலை. முதற்கொடி : கடவுள் படைத்த முதல் மனிதன் (ஆதாம்). மோகக் கொடி படர்ந்து : பாவக் கொடி (கீழ்ப்படியாமையினால் படர்ந்தது). அத்தி : பாவப் பலனாகிய கனி. பழுத்தது : தோன்றியது. அப்பழம் உண்ணாதே : மீண்டும் அந்த பாவத்தில் தொடராதே.

முதல் பாவத்தினால் உலகம் தள்ளுண்டது. அதில் பாவம் தொடர்ந்தது. நாம் பாவத்திலிருந்து மீட்கப்பட இறைமைந்தன் நரனாய் அவதரிக்க வேண்டியிருந்தது. அந்த அவதாரப் புருஷன் நமக்குக் கனி கொடுக்கும் அவசியத்தை அறிவித்தார். அவரது நீதியினால் உலகத்திற்கு மீட்பு வந்தது.

ரோமர் 5:18,19

ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று.

ஒரே மனுஷனுடைய (ஆதாமுடைய) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டது போல ஒருவருடைய (இயேசு கிறிஸ்து) கீழ்ப்படிதலினாலே (சிலுவை ஏற்றது) அநேகர் (அவரை ஏற்றுக்கொள்கிறவர்) நீதிமான்களாக்கப்படுவார்கள்.

முக்தி முதற்கொடிக்கே மோகக்கொடி படர்ந்து
அத்தி பழுத்தது அருள் எனும் கத்தியினால்
மோகக்கொடி அறுக்க முக்தி பழம் பழுக்கும்

கனி

ஏகக்கொடி எழுங்காண் இன்று (திருக்களிற்றுப்படியார்)

பாவமற்ற நிலையில் படைக்கப்பட்ட முதல் மனிதனை பாவக்கொடி சுற்றிக் கொண்டது. அவன் முத்தி நிலை இழந்தான். அந்தப் பாவ நிலையை அவன் தொடராதிருக்க வேண்டும் என்பதற்கு அருள் எனும் கத்தியினால் மோகக் கொடி அறுக்க முத்தி பழம் பழுக்கும். ஏகக்கொடி எழும். மோகக் கொடி என்பது பாவக்கொடி. ஏகக்கொடி என்பது ஒரே கடவுள். அவர் அருள் எனும் கத்தி என்று அழைக்கப்படும் கடவுளாயிருக்கிறார்.

அந்தக் கடவள் யார் என்பதை நாம் சிந்தித்தால் அது இயேசு கிறிஸ்துவை மட்டுமே குறிப்பதாக உள்ளது. அருள் எனும் கத்தியினால் முதல் மனிதன் தொடங்கி இன்றும் இனியும் பிறக்கும் மனிதன் வரை அவனது பாவக்கொடியை அறுத்தவர் இயேசு.

நேற்றைய மனிதன், இன்றைய மனிதன், நாளைய மனிதன், இவர்கள் எல்லாருடைய பாவங்களும் ஒரேதரம் சிலுவையில் இயேசு கிறிஸ்து பலியானதால் கழுவப்பட்டதா? இது எப்படி சாத்தியம்? இன்னும் மனிதன் பாவம் செய்து கொண்டு தானே இருக்கிறான்? இதனை எப்படி புரிந்து கொள்வது. இதனை நாம் எப்படி சத்தியம் அறிந்தவர் அறியாதவருக்குப் புரியவைப்பது என்று அநேகர் என்னிடம் கேட்பதுண்டு?

ஒரு அறுவை சிகிச்சை நடந்து முடியும்போது, அதில் பூரணமாய் குணமாகிறோம். ஆனால் அதற்குப் பின்பு நாம் பழையபடி நமது வாழ்வைத் தொடர முடியாது. அதன்பின் எடுக்க வேண்டிய மருந்து, நாம் உண்ண வேண்டிய உணவு, செய்ய வேண்டிய பயிற்சி, போன்றவை நமக்கு அறிவிக்கப்படும்.
இனி அவைகளை கடைபிடிக்கும் போதே நமக்கு செய்யப்பட்ட அறுவை சிகிச்சையின் பலனை முழுமையாய் அடையவும் முடியும். இனியும் பலத்துடன், ஆரோக்கியமாய் வாழவும் முடியும்.

அவரது தழும்புகளால் குணமானோம் என்பது சத்தியம்தான். ஆனால் குணப்பட்டப் பின்பு வார்த்தையெனும் மருந்தினை உட்கொண்டே ஆகவேண்டும். வார்த்தை என்பது அவரது கற்பனை. கற்பனைகளை ஏற்காமல் கனிதர குணமடைய

முடியாது. கிறிஸ்து நமக்காக சிலுவையில் சிந்தின தமது இரத்தத்தினை நீதியாக மாற்றி மரணத்தை வென்றார்.

ரோமர் 5:21

பாவம் மரணத்துக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது போல, கிருபையானது நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆண்டு கொண்டது.

நமது வேதாகமத்தில் ஆதியாகமத்தின் முதல் மூன்று அத்தியாயங்களிலே சொல்லப்பட்ட அனைத்தையும் சாரமாக எழுதப்பட்டு சிவஞானபோத சூத்திரம் இவ்விதம் கூறுகிறது.

அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின்
தோற்றியத் திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனார் புலவர் - சிவஞானபோதம்

அவன் : மனிதன் (ஆதாம்).
அவள் : மனுஷி (ஏவாள்).
அது : உலகம் (பூமி, அதிலுள்ளவையும்).
மூவினைமையின் : மூன்றுவித செயல்களால்.
ஆதாம் : மண்ணினால் உருவானான்.
ஏவாள் : ஆதாமின் விலா எலும்பினால் உருவாக்கப்பட்டாள்.
உலகம் : ஓம்காரமாகிய வார்த்தையினால் உண்டானது.
ஒடுங்கி மலத்துளதாம் : இவை மூன்றும் பாவத்தில் விழுந்த அன்றையத் தினமே.
அந்தம் ஆதி என்மனார் புலவர் : அது பரிசுத்ததிற்கு முடிவாகவும் பாவத்திற்குத் தொடக்கமுமாக ஆனது என்று புலவர்கள் பாடியுள்ளனர்.

சைவ சித்தாந்த இலக்கியமான சிவஞானபோதம் இவ்விதம் கூறுகிறது, இருந்தாலும் அதற்கு முன்பே பரிசுத்த ஆவியினால் எழுதப்பட்ட நம் வேதம் என்ன சொல்கிறது?

ரோமர் 5:12 ஒரே மனுஷனாலே (ஆதாம்) பாவமும், பாவத்தினால் மரணமும், உலகத்திலே பிரவேசித்தது போல எல்லா மனுஷரும் பாவம் செய்து, மரணம் எல்லாருக்கும் வந்தது. பாவம் கனிகொடுக்க விடாது.

கனி

கனி கொடுக்காத மரத்திற்கு அருகில் எது வைக்கப்பட்டிருக்கிறது? விவிலியத்தின் எச்சரிப்பு என்ன? மத்தேயு 3:10

இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

எச்சரிப்பின் கோடரியானது நீங்க வேண்டுமானால் நல்ல கனி கொடுத்தே ஆக வேண்டும். நல்ல கனி கொடுக்க பரத்தின் ஞானமும் அவசியம். அதுவே நீதியின் கனி. அது எவ்விதம் யாரால் விதைக்கப்படுகிறது?

யாக்கோபு 3:17-18 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கம் உள்ளதாயும், இரக்கத்தாலும், **நற்கனிகளாலும்** நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமாய் இருக்கிறது. நீதியாகிய **கனியானது** சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப் படுகிறது.

கனிகளினால் நமக்கு இரட்டிப்பான நன்மைகள் வருமா? வரும், நாம் அதற்கு முதற்பலனாக இருந்தல் அவசியம். முதற்பலனைக் கொடுத்தல் அவசியம். அதின் இரட்டிப்புப் பலன்கள் என்ன? வேதம் என்ன சொல்கிறது?

வெளிப்படுத்தின விசேஷம் 18:6 கிரியைகளுக்குத் தக்க இரட்டிப்பான தீர்ப்பு.

உபாகமம் 21:17 வெறுக்கப்பட்டவளிடத்தில் பிறந்தாலும் இரண்டு பங்கு.

1 சாமுவேல் 1:5 அன்னாளை சிநேகித்ததினால் அவளுக்கு இரட்டிப்பான பங்கு.

2 ராஜாக்கள் 2:9 ஆவியின் வரம் எனக்கு இரட்டிப்பாய் வேண்டும் என்று எலிசா கேட்டதின் திருஷ்டாந்தம்.

முதற்பலன் என்பது ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முடிய விவரிக்கப்படுகிறது. முதற்பேறான கிறிஸ்து முதற்பலனானவர். முதற்பலனான அவரின்றி கனியில்லை.

ஆதியாகமம் 4:4 முதற்பலனைக் கொண்டு வந்த ஆபேலின் காணிக்கையை ஏற்றார்.

யாத்திராகமம் 22:29 உன் குமாரரில் முதற்பேறானவனை எனக்குக் கொடு.

வெளிப்படுத்தின விசேஷம் 14:4 மனுஷரிலிருந்து தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் முதற்பலனாக மீட்டுக் கொள்ளப்பட்டவர்கள்.

முதற்பனான கிறிஸ்து நமக்கிருந்தும் கனிகொடுப்பதில் தடையாயிருப்பது என்ன? நமது சிந்தை அதற்கு தடையாயிருக்கிறதா? நாம் எவ்விதம் எப்படி எதினால் தடைகளைக் காண்கிறோம்?

கலாத்தியர் 5:16-17 ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்ய வேண்டுமென்று இருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுக்கு ஒன்று விரோதமாயிருக்கிறது.

கலாத்தியர் 5:24 கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கின்றார்கள்.

உலக ஆசைகளை சிலுவையில் அறைந்தவர்கள் கொண்ட இடமே கடவுளின் இராஜ்யமாயிருக்கிறது.! அந்த ராஜ்யம் எத்தகையது. அதில் பிரவேசிக்கத்தானே நிக்கோதேமுவிற்கு கிறிஸ்து மீண்டும் பிறக்கப் போதித்தார்?

ரோமர் 14:17 தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியில் உண்டாகும் சந்தோஷமாயிருக்கிறது.

நல்ல கனி கொடுக்கும் நல்ல மரமாக மாற வேண்டுமானால் முதலாவது கடவுளுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேட வேண்டும். மத்தேயு 6:33

கனி

கடவுளின் ராஜ்யத்தையும் நீதியைத் தேடுகிறவர்கள் கனி கொடுப்பார்கள். கனி கொடுப்பவர்கள் இவையிரண்டையும் தேடுகிறவர்களாக இருப்பார்கள். தேடுகின்றவர்களுக்கு எவை கூடக்கொடுக்கப்படும் என்பதும் நமக்கு எழும் கேள்வி.

உங்களுக்கு இன்னது தேவையென்று கர்த்தர் அறிந்திருக்க நீங்கள் அஞ்ஞானிகளைப் போல் என்னத்தை உண்பது, குடிப்பது, உடுத்துவது என்று தேடுகிறீர்களே, அவைகளையே நீதியுடனும் ராஜ்யத்துடனும் கூடக் கொடுப்பார்.

கூடக் கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுவது ஆசீர்வாதம். அவைகள் கனிகளல்ல. அது கனிகொடுப்பவரின் பாக்கியம். கூடக் கொடுப்பவை என்பது இணைப்புப் பரிசல்ல. இருப்பது அதிகரிக்கப்படும் என்றே பொருள் விளங்கும். தற்போதுள்ள சந்தோஷம், சமாதானம், நிம்மதி, கையின் பிரயாசங்கள் போன்ற அனைத்தும் கூட கொடுக்கப்படும் என்பதாகவே பல வேத வல்லுனர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{>

<

2. முதல் கனி

கனி என்பது மனிதன் கொடுக்க வேண்டியது. இந்த உலகில் அவன் படைக்கப்பட்டதற்கு அதுவே காரணம். கடவுள் அதை எதிர்பார்க்கிறவராக இருக்கிறார். கனி கொடுக்க வேண்டிய மனிதனை திசை திருப்ப பாவம் அவனை ஆண்டு கொள்ள ஆரம்பித்தது. கர்த்தர் முதலில் மனிதனிடம் எதிர்பார்க்கும் கனியானது என்ன? முதல் மனிதனையே எதற்காக அவர் படைத்தார்?

மல்கியா 2:15 அவர் ஒருவனையல்லவா படைத்தார்? ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே, பின்னை ஏன் ஒருவனை படைத்தார்? தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே?

மனிதன் கொடுக்க வேண்டிய கனி எது? முதல் மனிதனை வீழ்த்திய கனி எது? நம்மை மீட்க வந்த கனி எது?

மனிதனுக்கு மரணம் என்ற ஒன்று இல்லாதவரையும் அவனது அழிவை தேவன் முன்குறிக்காத வரையும் அவன் (ஆதாம்) ஜீவ விருட்சத்தின் கனியை சாப்பிட வேண்டிய அவசியமுமில்லை, அதை சாப்பிட்டிருந்தாலும் அதில் பயனொன்றும் இருந்திருக்காது.

மனிதனுக்குள் பாவம் நுழைந்த பின்பே மரணம் வந்ததால் அவன் அதற்கு முன்பாகவே ஜீவ விருட்சத்தின் கனியை உண்ண வேண்டிய அவசியமும் இருந்திருக்காது.

நாக்மானைட்ஸ் எனும் வேத ஆராய்ச்சியாளர், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்திற்கு எபிரேய மொழியில் 'ஈய்ட்ஸ் ஹா காயிம்' என்று சொல்லப்பட்டிருக்கும் வார்த்தையின் சரியான மொழிபெயர்ப்பு 'இச்சையின் விருட்சம்' தான் என்று சொல்லி, அதற்கு வேதத்தில் பல இடங்களில் இந்த வார்த்தை இச்சைக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாக கூறுகிறார்.

நாக்மானைட்ஸின் விளக்கத்தின்படி, ஆதாமுக்கு எந்த ஆசாபாசமோ இச்சையோ முதலில் இருக்கவில்லை என்றும், அவனது முழு சிந்தையும் தன்னைப் படைத்தவருக்கு பணி செய்யவே இருந்ததாகவும் கூறுகிறார்.
அதுமட்டுமல்லாமல், கர்த்தர் ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்கலாம் என்ற நிபந்தனையையும் ஆதாமிடத்தில் வைக்கவில்லை என்றும் அறிவுறுத்துகிறார்.

கனி

இச்சையின் விருட்சத்தின் கனியை புசித்ததால் ஆதாமுக்கு ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கும் வாஞ்சை ஏற்படும் என்றும், இதனை அறிந்தே கடவுள் அவனை அவர் ஜீவ விருட்சத்தை விட்டு விலக்கிக் காத்திருக்க கூடும் என்றும் அறிய முடிகிறது.

ஆதாமின் உள்ளான மனிதனுக்கு கடவுளின் கட்டளையை மீற எந்த உணர்வும் இல்லையென்றாலும் சர்ப்பமானதின் வஞ்சிப்பு அவனை பாவத்திற்கு உள்ளாக்கியது. சர்ப்பமும் ஆதாமை ஜீவவிருட்சத்தை புசிக்கத் தூண்டாமல் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை மட்டுமே புசிக்கத் தூண்டியது, ஆதாமை பாவத்தில் விழவைக்கவே.

கர்த்தரும் ஆதாமை ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று எந்த கட்டளையையும் வைக்கவில்லை.

ஜீவவிருட்சத்தை குறித்து வேதத்தில் பத்து இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான்கு நீதிமொழிகளின் புத்தகத்தில் காணலாம். அவை யாவிலும் ஜீவ விருட்சத்திற்கான விளக்க ஒப்புமை வேறாகவே உள்ளது. (புத்தியாகவும் புலப்படுகிறது)

நீதிமொழிகள் 3:13,18ல் ஜீவவிருட்சத்தை ஞானத்திற்கு ஒப்பாகவும், அதனைக் கண்டடைகிறவன் பாக்கியவான் என்று விளக்கப்படுகிறது.

நீதிமொழிகள் 11:30 நீதிமானின் பலன் ஜீவ விருட்சம்.

நீதிமொழிகள் 13:12 விரும்பினது வரும்போது ஜீவ விருட்சம் போலிருக்கும்.

நீதிமொழிகள் 15:4 ஆரோக்கியமான நாவு ஜீவ விருட்சம்.

மேற்கண்ட ஒப்புமைகளின் வாயிலாக ஜீவ விருட்சமென்பது நன்மையான ஒன்றாகத் தெரிகிறது. ஜீவ விருட்சமானது முதன்முதலில் ஏதேன் தோட்டத்தில் நன்மை தீமை அறியும் விருட்சத்துடனேயே அறிமுகப்படுத்தப்படுகிறது.

ஆதியாகமம் 2:9 தேவனாகிய கர்த்தர் பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவ விருட்சத்தையும், நன்மை தீமை

அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப் பண்ணினார்.

கடவுள் மனிதனையும் மனுஷியையும் படைத்த பின்பு அவர்களை ஏதேன் தோட்டத்தில் இருக்க வைத்து சில நிபந்தனைகளை கொடுக்கிறார். அவைகளை கட்டளையாகக் கொடுத்தார் என்று வேதம் தெளிவாய்ச் சொல்கிறது.

ஆதியாகமம் 2:16-17 நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.

ஆதியாகமம் 3:22,23 இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான். இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து என்றைக்கும் உயிரோடிராதபடிச் செய்யவேண்டும் என்று, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார்.

மனிதன் ஜீவவிருட்சத்தின் கனியை புசித்து என்றும் சாகாமல் இருக்காதபடிக்கு அவர்களை ஏதேனை விட்டும் கடவுள் அனுப்பினார்.

மனிதனின் மரணம் எப்பொழுது அவனை ஆட்கொண்டது? பாவத்தில் விழுந்த அன்றே மனிதன் சாகவில்லையே?

ஆதாம் விலக்கப்பட்ட கனியை புசித்த நாளில் சாகவில்லை என்பதால் கர்த்தர் சொன்னது பொய்யென்று எண்ண முடியாது, அதே சமயம் அவர் ஆதாமின் மாம்சீக மரணத்தை சொல்லவில்லை என்றும் சொல்ல முடியாது.

அவர் சொன்னது பொய்யென்று நினைத்தால் அவர் அந்த மரத்தையே வெட்டியிருக்கலாம் ஆனால் கடவுள் அவ்விதம் செய்யாமல், அவர்களை தோட்டத்திற்குள் நுழையாத வண்ணம் வெளியே அனுப்பி காவல் வைத்தார்.

ஆதாமும் ஏவாளும் தங்களுக்கும் சர்ப்பத்திற்கும் கிடைத்த சாபத்தையும் காணும்படி செய்தார். அவர்கள் கண்கள்

திறக்கப்பட்டதில் அவர்களது பாவத்தையும் கண்டார்கள். கர்த்தர் சொன்னது நடந்தது.

ஜீவவிருட்சத்தின் கனி ஆதாமின் எல்லா குறைகளையும் நீக்குமென்றால் கர்த்தர் தமது படைப்பினைக் காக்க முயன்றிருக்கமாட்டாரா?

நிச்சயமாக கர்த்தர் தமது படைப்பை காக்க உடனடியாக திட்டமிட்ட பின்பே அவர்களை தோட்டத்தைவிட்டு வெளியே அனுப்பினார்.

மேசியாவின் வருகையை குறித்து தீர்க்கதரிசனமாகவே கொடுத்தார். ஏவாளின் (ஸ்திரீ, மனுஷியின்) வித்து (மனுஷகுமாரன்) சர்ப்பத்தை அழிப்பார் என்றும் உரைத்தார். ஆதியாகமம் 3:15

ஆதாமின் அழிவிற்கு சர்ப்பம்தான் காரணமென்றால் ஆதாம் தோட்டத்தில் ஒரு பாம்பும் இல்லாமல் அழித்திருப்பானே?

பிரச்சனை மாம்சத்திற்குரியது மட்டுமல்ல. மாம்சீக மரணத்தின் காரணம் ஆதாமின் பாவமாக இருந்தாலும் உண்மையான துயரம், மரணம் என்ன? கடவுளிடமிருந்து மனிதன் உறவை இழந்து போனது தான்.

கடவுளால் விலக்கப்பட்ட கனியை சாப்பிட்ட நாளில் ஆதாம் ஆவிக்குரிய மரணத்தையே அடைந்தான். ஆதாமின் ஆவி கடவுளை விட்டு பிரிந்தது. அதுவே ஆவிக்குரிய மரணம்.

எல்லா மனிதரும் பாவம் செய்து கடவுளின் மகிமையை அற்றவர்களானதும் ஆதாமைப் போலத்தான். மீண்டும் கடவுளுடன் ஆவிக்குரிய உறவை ஏற்படுத்திக் கொள்வது தான் இதற்கான ஒரே தீர்வாகும். இது நம்மால் மட்டுமே செய்யக் கூடிய காரியமல்ல, இது கடவுளின் செயலுமாகும்.

கடவுளிடம் ஏற்படும் ஆவிக்குரிய பிரிவு நிரந்தரப் பிரிவாக இருந்தாலும் அதை நம்மால் சரிசெய்து கொள்ள முடியும்.
இயேசுவை ஏற்றுக் கொள்ளாதவர் எவரும் கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்டு புதிய வானம் புதிய பூமி உருவாகும் முன் நியாயந்தீர்க்கப்பட வேண்டும். பாவத்தின் சம்பளம் மரணம்.

நரக ஆக்கினைக்கு தீர்ப்பானவர்களைத் தண்டிப்பதற்காக மட்டுமல்ல, மனந்திரும்பாதவர்களை அவர் தம்மிடமிருந்து நிரந்தரமாய் பிரிக்கவுமே அக்கினியான கந்தகக் கடலை கடவுள் உருவாக்கினார்.

மனிதன் மரிக்காமல் இருக்க மட்டும் ஜீவவிருட்சம் படைக்கப் படவில்லை, கடவுளுடன் அவன் இணைந்து இருக்கவும் தான். வானத்திலும் பூமியிலும், எல்லாவற்றையும் இயேசுவின் கீழ் கொண்டு வருவதே பிதாவின் சித்தம்.

நன்மை தீமை அறியத்தக்க கனியை புசித்ததால் கடவுளை விட்டு பிரிந்து விட்ட ஆதாம் ஜீவ விருட்சத்தின் கனியை புசித்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று நாம் யோசிக்க வேண்டும்.

அப்படியானால் ஆதாம் மரிக்காமல் வாழ்ந்திருக்க வேண்டும், அதே சமயம் கடவுளோடு அவன் மீண்டும் இணைய முற்பட்டிருக்கவும் வேண்டும்.

அனைவரும் பாவம் செய்தவர்களாக இருந்தாலும், இயேசு கிறிஸ்துவின் இரகசிய வருகையின் போது, விசுவாசிகள் மட்டுமே அவரோடு கூட, உயிருடனே வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது.

மனம் திரும்பிய பாவியே விசுவாசி எனப்படுகிறான். அப்படியிருந்தும் ஆதாமை ஏதேனிலிருந்து கர்த்தர் எதற்காக வெளியேற்றினார்? மனிதர் யாவரும் பாவத்தில் கர்ப்பந்தரித்து பிறப்பதற்கு ஆதாம் காரணமாகி விட்டதும் மிகப் பெரிய காரணம்.

ஆதாமுக்கு ஏற்பட்ட பிரச்சனை என்னவென்றால், ஆண்டவர் பரத்திலிருந்து உலகத்தின் சாபத்தை எடுக்க மேசியாவை அனுப்பவும், அவர் ஒரே தரம் பலியாகவும், பல ஆயிரமாண்டுகள் கடந்து போகவேண்டும்.

இறந்து போகும் மனிதனே பாவத்தில் விழுந்து தனது சொற்ப ஆயுளில் உலகத்தை எப்படி குழப்பத்தில் ஆழ்த்துகிறான் என்பதையும் நாம் யோசித்தாக வேண்டும்.

ஜீவவிருட்சத்தின் கனியை புசித்து, பாவத்தில் விழுந்த மனிதன் மரிக்காமல் வாழ்ந்து, மேலும் திருமணம் செய்து,

தனது சந்ததிகளை வேறு உருவாக்கிக் கொண்டிருந்தால் பூமி என்ன ஆகியிருக்கும்?

மிகவும் மோசமாகியிருக்கும் என்று நாம், இப்பொழுது உணருகிறோம் அல்லவா?

வெளிப்படுத்தின விசேஷம் 2:7 22:1-3 22:14

- மரணம் என்பது ஒரு சாபம். இயேசு சிலுவையில் ஆவிக்குரிய மரணத்தின் சாபத்தைத் தான் நீக்கியிருக்கிறார்.
- இன்றும் மக்கள் சரீரத்தில் மரிப்பது எதனால் என்றால், ஜீவ விருட்சத்தை நாம் அடைய முடியாததால்.
- அவரை விசுவாசிக்கிறவர்கள் மரிக்காமல் நித்திய வாழ்வை அடைவார்கள்.
- ஜீவவிருட்சத்தை அவர் நீக்கியதும் மரணமெனும் சாபத்தின் ஒரு பங்காக உள்ளது. ஆதியாகமம் 3:22

வானமும் பூமியும் ஒழிக்கப்பட்டு புதிய வானமும் புதிய பூமியும் உருவாக்கப்படும் போது தான் நாம் அந்த ஜீவ விருட்சத்தின் கனியையே புசிக்க முடியும் என்றும் கூட பொருள்படுகிறது.

- ஆதாம் நன்மை தீமை அறியத்தக்க கனியை புசியாமல் ஜீவவிருட்சத்தின் கனியை மட்டுமே புசித்திருந்தால் என்ன நடந்திருக்கும்?
- என்றென்றும் அவன் மரியாமல் வாழ்ந்திருப்பானா?
- நிச்சயமாய் சரீர மரணத்தை அடைந்திருப்பான் என்றே நம்பத் தோன்றுகிறது.
- நன்மை தீமை அறியத்தக்க கனியை புசித்ததினால் ஆதாமின் ஆவி கொல்லப்பட்டது.
- ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்காததால் அவனது சரீரம் கொல்லப்பட்டது.
- இருவேறு மரணங்கள் நிகழ்ந்தன. இது சாத்தியமா?
- ஒன்று முதல் உடன்படிக்கையில் பாவம். மற்றொன்று முழுமையாய் பரிகரிக்க முடியாத பாவம்.
- நன்மை தீமை அறியத்தக்க மரமென்று ஒன்று இல்லாது போனால், ஜீவ விருட்சத்தின் கனியை புசியாததால் அடைந்த சரீர மரணத்தை ஆதாம் காணாமல் இருந்திருப்பான்.

- ஒரு நாள் மரித்தவனாய் எழுந்திருப்பான். அவனது ஆவி கடவுளிடம் உயிருடனும், அவனது சரீரம் உயிரற்ற வெறும் கூடாகவும் இருந்திருக்கும்.

சரீர மரணம் என்பது உலகத்தில் ஒரு இயற்கையான விஷயம். எல்லா உயிரினங்களும் மரித்தே ஆக வேண்டும், ஏனென்றால் கடவுள் இதனை முன்பே தீர்மானித்தபடியால்.

- ஆதாமின் மூலம் மரணம் வந்தது என்று வேதம் ஏன் சொல்கிறது என்றால், அதற்கு முன்பாக எந்த மனிதனும் மரிக்கவில்லை.
- பாவமரணம் என்று வேதம் குறிப்பிடுவது மனித இனத்திற்கு மட்டுமே.
- மனிதனுக்கு இயற்கையான மரணத்தை உருவாக்க வேண்டும் என்பது நமது கர்த்தரின் விருப்பமாகவே இருந்திருக்க வேண்டும்,
- அதினால் தான் அவர் தாம், ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பாகவே ஜீவவிருட்சத்தின் கனியை கொடுத்தார்.
- மனிதனுக்கு மட்டுமே ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்க கொடுத்தார். ஜீவவிருட்சத்தின் நன்மையை மனிதன் மட்டுமே பெற்றுக் கொள்வதே அவர் நோக்கமாயிருந்தது. ஜீவவிருட்சத்தின் கனியை புசிக்காததால் சரீர மரணம் ஏற்பட்டது.

ஆதாமின் வீழ்ச்சிக்கு முன்பாகவே சரீர மரணம் உலகத்தில் இருந்ததற்கு இதுவே சாட்சியாகவும் தோன்றுகிறது.

- ஏதேனில் வைக்கப்பட்ட இந்தக் கனிகள் இரண்டுமே மிருகங்களுக்கு அல்ல, மனிதனுக்கு மட்டுமே, ஏனென்றால் மனிதனுக்கு மட்டுமே ஜீவாத்மாவிற்கான ஆவி யுண்டு.
- ஆதாமும் ஏவாளும் மீண்டும் ஜீவவிருட்ச கனியை புசிக்க அனுமதிக்கப்பட்டிருந்தால், இன்றும் அவர்கள் நித்தியமாய் மரணமின்றி பாவ சாபத்திற்குள்ளான உலகத்தில் வாழ்ந்திருக்க வேண்டியதாயிருக்கும்.
- ஆனால் கடவுள் மனிதனுக்காக வேறு திட்டம் வைத்து, இயேசு கிறிஸ்துவினால் மீட்பை தந்து, சாபம் இல்லாத புதிய வானம் புதிய பூமிக்கு அனுப்பவே சித்தமானார்.

கனி

2தீமோத்தேயு 1:9

அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல், தம்முடைய தீர்மானத்தினபடியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

வெளி 22:1-2

பளிங்கைப் போல் தெளிவான ஜீவத் தண்ணீருள்ள சுத்தமான நதி, தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான். நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். இதன் பொருள் அடுத்த (22:3) வசனத்தில் விளங்கும் "இனி ஒரு சாபமிராது"

எசேக்கியேல் 47:12

நதியோரமாய் அதன் இக்கரையிலும், அக்கரையிலும், புசிப்புக்கான சகல விதமான விருட்சங்களும் வளரும். அவைகளின் இலைகள் உதிர்வதுமில்லை அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்குப் பாயும் தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியினால் மாதந்தோறும் புதுக்கனிகளைக் கொடுத்துக் கொண்டேயிருக்கும்.

- கர்த்தர் ஒருவரே இரட்சகர் அவராலே மட்டுமே நாம் நித்திய ஜீவனை பெற்றுக் கொள்ள முடியும். பாவத்தினால் சபிக்கப்பட்ட உலகத்தில் மனிதன் மரணமின்றி வாழ்வதைக் கடவுள் தடுத்தார்.
- துக்கமும் உபத்திரவமும் நிறைந்த உலகத்தில் மனிதன் நிரந்தரமாக வாழ்வதை தடுத்ததின் மூலம் அவரது கிருபையை வெளிப்படுத்தினார்.
- மரணம் துக்கம் வேதனை சாபம் இப்படி ஏதும் இல்லாமல், நித்திய வாழ்வை வாழ நமக்காக ஒரு இடத்தை ஆயத்தப்படுத்தியும் கொடுத்திருக்கிறார். ஆமென்.

வெளிப்படுத்தின விசேஷம் 21:3-4 22:3

மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். அவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார். இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்து போயின. இனி சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.

ஜீவ விருட்சம் என்றால் என்ன?

- முதலில் அது ஏதேன் தோட்டத்தில் இருந்தது. அது இப்பொழுது பூமியில் இல்லை.
- ஆனால் இன்றும் இருக்கிறதா? ஆம் இருக்கிறது!
- வெளிப்படுத்தின விசேஷம் 2:7 பரதீசின் மத்தியில் இருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்.
- மனிதன் பாவத்தில் விழுந்தது முதல் பரதீசு என்பது பூமியில் இல்லை. கிறிஸ்து சிலுவையில் அந்தக் கள்ளனிடம் சொன்னதை நினைவு கூருவோம். இன்று பரதீசில் இருப்பாய்.
- பரலோகம் என்பது கர்த்தருக்கு முன்பாக இருக்கிறது. ஜீவ விருட்சத்தை எப்படி நாம் பெறுவோம் என்றால், அது கர்த்தருடைய ஈவாக உள்ளது.

அதனை எப்படி பெறுவது? யாரால் பெற முடியும்? யாருக்கெல்லாம் அதனைப் பெறும் தகுதியுண்டு? அந்தத் தகுதியைப் பெற என்ன செய்ய வேண்டும்?

- வெளிப்படுத்தல் 22:14 ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களாய் ஆவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும், அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

ஆதியாகமம் 3:19 மண்ணுக்குத் திரும்புவாய் 3:24 ஜீவ விருட்சத்திற்கு காவல் வைத்தார். இந்த இரு வசனங்களுக்கு இடைப்பட்ட எல்லா விவரங்களும் வேதத்தில் கொடுக்கப் படவில்லை என்று அர்த்தம்.

பாவிகளைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது?

- ✧ 1கொரிந்தியர் 2:14 ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ள மாட்டான்.
- ✧ ரோமர் 3:10 நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.
- ✧ ரோமர் 8:7 மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை.
- ✧ யோவான் 1:12-13 அவருடைய நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்கள் தேவனாலே பிறந்தவர்கள்.
- ✧ யோவான் 3:3 ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவருடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது.
- ✧ கலாத்தியர் 5:25 ஆவியினாலே பிழைத்திருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

"கனிகள் கொடுக்க திருஷ்டாந்தமாக, மனிதராகிய நமக்கு மூன்று மரங்கள் கொடுக்கப்பட்டன!"

1. நன்மை தீமை அறியத்தக்க மரம் 2. கொல்கொதா மரம்
3. ஜீவ விருட்ச மரம்

- ✧ ஏதேனில், முதல் மரத்தின் கனியினால், பரதீசின் மூன்றாம் மரத்தின் கனியை, மனிதன் இழக்க நேரிட்டது!
- ✧ பரதீசின் மூன்றாம் மரத்தின் கனியைத் திரும்பப் பெற கொல்கொதாவில் இரண்டாம் மரத்தினைக் கர்த்தர் நமக்கு கொடுத்தார்!
- ✧ கொல்கொதாவின் இரண்டாம் மரத்தை ஏற்றுக் கொண்டவர்கள், பரதீசில் மூன்றாம் மரத்தின் கனியை பெற்றுக் கொள்வார்கள்!
- ✧ ஏதேனின் முதல் மரம் நம் பாவத்தையும் மீட்பையும் நமக்குச் சொல்லும்!
- ✧ கொல்கொதாவின் இரண்டாம் மரம், நமது கடவுளின் ஒரேபேரான குமாரனால் மீட்பு என்பதைச் சொல்லும்!
- ✧ பரதீசின் மூன்றாம் மரம், நாம் செல்ல வேண்டிய இடத்தை எப்படி சென்று சேர முடியும் என்பதைச் சொல்லும்!

சிலுவை மரமான கொல்கொதா மரம் அவரோடு ஒப்புரவாக்க விளைந்த ஒரு மரம். காட்டொலிவ மரத்திற்கும் கருணை பொழிந்தது அந்த மரமே. ரோமர் 11:16-24

நான் செடி நீங்கள் கொடிகள் என்று சொன்னவர் அந்த மரத்தை அடைந்து, கொடிகளுக்காக மரித்து, கொடிகள் கனிகளைக் கொடுக்க என்ன செய்தார்?

- ✧ எபேசியர் 2:1-3 அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவராயிருந்த கோபாக்கினையின் பிள்ளைகளாய் இருந்த நம்மை உயிர்ப்பித்தார்.
- ✧ ரோமர் 3:25 இயேசுவினிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாக, கிறிஸ்து இயேசுவின் இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரை ஏற்படுத்தினார்
- ✧ எபிரேயர் 10:1 நியாயப்பிரமாணம் வரப்போகிற நன்மையின் பொருளாயிராமல், அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது. வருஷந்தோறும் இடைவிடாமல் ஒரேவிதமான பலிகளினாலே அவைகளைச் செலுத்த வருகிறவர்களை, ஒருக்காலும் பூரணப்படுத்தாது
- ✧ 1பேதுரு 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.
- ✧ 1யோவான் 4:10 நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி (கிருபை - ஆதாரம் - பலி) அவரே.
- ✧ வெளி 2:7 ஜீவ விருட்சத்தின் கனியைப் பெறுவதற்கு
- ✧ ஜெயம் கொள்ள வேண்டும்.

ஜெயம் கொள்ளுகிறவர் யார்?

கிறிஸ்துவை மட்டும் விசுவாசிக்கிறவர்களே. ஜீவ விருட்சம் அவர்களுக்கே! அந்தக்கனி ஈவாக வைக்கப்பட்டுள்ளது. அவர்களே விசுவாசத்தின் மூலமாக பூமியிலே நற்கனிகளைக் கொடுத்து ஜெயம் கொள்ளுவார்கள்.

கிறிஸ்துவைச் சேர்வதும் அதே போல கர்த்தரின் ஈவாகவே இருக்கிறது. எபேசியர் 2:8. கிறிஸ்துவை அடைவது ஈவாகப் பெற்று கிருபையினாலும் நமது விசுவாசத்தினாலும் அது சாத்தியமாகிறது. ஆனால் நாம் அவரைப் பற்றும் விசுவாசம் நம்மைக் கனி கொடுக்க வைக்கிறது. அது ஈவல்ல நாம் கடவுளுக்கு மகிமை செலுத்துவது.

யோவான் 6:65 ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான். நீங்கள் என்னில் என் வார்த்தை உங்களில் இருப்பது அவசியம் என்று நமக்கு உரைத்திட்ட கிறிஸ்து அவரை அடைவதற்கு நாம் பிதாவின் அருளைப் பெறவேண்டும் என்று சொல்கிறார்.

பிதாவின் அருளால் கிறிஸ்துவை நாம் அடைந்தாலும், கிறிஸ்துவின் வார்த்தையினால் நமது வாழ்வு கனிகொடுக்க மாறுவதை அறிகிறோம். கனிகொடுக்க நாம் அடைகின்ற அந்த வாழ்வு ஜெயம் கொள்ளும் வாழ்வாக கருதப்படும்.

1யோவான் 5:4-5 நாம் கடவுளிடம் கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்புகூருவதாம். கடவுளால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். கடவுளின் கற்பனைகளும் நமது விசுவாசமும் இணைகின்ற பொழுது நமது வாழ்வு ஜெயம் கொள்ளும் வாழ்வாக மாறும்.

1கொரிந்தியர் 15:44-54 ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும். மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல வானவருடைய சாயலையும் அணிந்து கொள்வோம். மரணம் ஜெயமாகும். மரணம் ஜெயமாவதை அடைகின்ற கிறித்தவ வாழ்வே கனி தரும் வாழ்வு, அதுவே ஜெயம்கொள்ளும் வாழ்வாகும்.

வெளி 22:2 நகரத்து வீதியின் மத்தியில் கனிகளைத் தரும் ஜீவவிருட்சம் இருக்கும். அது இருக்குமிடம் ஒரு நகரம். நகரமாக வெளிப்படுத்தப்படும், நாம் எதிர்நோக்கி இருக்கும் புதிய எருசலேம் விவிலியத்தில் வெவ்வெறு விதமானப் பெயர்களைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

வெளிப்படுத்தல் 21:2-4 பரிசுத்த நகரமாகிய புதிய எருசலேம்.
எபிரேயர் 12:22 நம்பிக்கையின் எருசலேம்
கலாத்தியர் 4:26 மேலான எருசலேம்

பிலிப்பியர் 3:20 நம் குடியிருப்பின் எருசலேம்

ஆதாம் ஏவாள் கண்டது உலகத்தில் ஒரு சிறிய சமூகத்தை. அவர்கள் பாவத்தில் விழுந்த பின்பே உலகம் பெரிதானது. ஆனால் இந்த புதிய எருசலேம் பாவமில்லாத பரிசுத்த நகரமாக இருக்கும் என்பதை வேதம் சொல்கிறது. அதே நேரத்தில் அதனை மணவாளனை எதிர்கொண்டு போகும் மணவாட்டியாகவும் நமக்கு விளக்கப்படுகிறதை நாம் காண முடியும். வெளிப்படுத்தின விசேஷம் 21:2 அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போலிருந்ததாக யோவான் குறிப்பிடுகிறார்.

கனி கொடுப்பவர்களே, புதிய வானம் புதிய பூமியில் நம்மை தங்க வைக்கப் போகும் புதிய எருசலேம் எனும் நகரத்தைப் பெறுவார்கள்!

கிரியைகள் நற்பலன் தரும் நற்கனியென்றால், ஜெயம் கொள்ளுகிறவர்களின் பலனாக புதிய எருசலேம் உண்டு என்றே சிந்திக்கத் தூண்டுகிறதல்லவா?

எரேமியா 17:10 பலன்களை கொடுக்க இருதயத்தை ஆராய்கிறவர் கர்த்தர்.

1பேதுரு 1:17 பட்சாதாபமில்லாமல் கிரியைகளின்படி நியாயத்தீர்ப்பு நிறைவேறும்.

பிரசங்கி 12:14 ஒவ்வொரு கிரியையும் நியாயத்தில் கொண்டு வருவார்.

2 கொரிந்தியர் 5:10 சரீரத்தில் செய்த நன்மை தீமைக்கு தக்க பலன் அவர் தருவார்.

லூக்கா 6:22-23 உலகம் பகைத்தால் பரலோகத்தில் பலன் மிகுதியாக இருக்கும்.

வெளிப்படுத்தல் 14:13 நமது கிரியைகளும் கூடப்போம்

வெளிப்படுத்தல் 22:12 நம் கிரியைகளின் பலன் அளிக்க சீக்கிரம் அவர் வருவார்.

அதுவரை கனிகொடுக்க வேண்டும். கனிகொடுப்பதும் அவர் வருகைக்கான ஆயத்தம் என்ற புரிதல் நமக்கு வேண்டும்.

கனி

பத்துக் கன்னிகைகளில் ஐந்து புத்தியுள்ள கன்னிகைகள் கர்த்தருக்கு ஆயத்தம் என்கிற கனிகளைக் கொடுத்தார்கள். கதவடைப்பை வென்றார்கள். மணவாளனுடன் விளக்குகள் அணையாமல் உட்பிரவேசித்தார்கள்.

கனிகொடுக்கும் வாழ்வும் கர்த்தரின் வருகைக்கான ஆயத்தம்.!

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

3. கனிகொடாத ஆதாம்

மனிதன் பாவம் செய்வான் என அறிந்தும் கர்த்தர் ஏன் அவனைப் படைத்தார்? கனிகொடாத ஆதாமை கர்த்தர் எதற்கு முதலில் அனுமதித்து, பின்பு ஏதேனை விட்டு வெளியேற்றினார்?

ரோமர் 11:36 சகலமும் அவராலும், அவர் மூலமாகவும், அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

ஆதியாகமம் 1-லிருந்து 2-வரை பரலோகம். ஆதியாகமம் 3-லிருந்து வெளிப்படுத்தின விசேஷம் 20-வரை பரலோகம் இழந்தது. வெளிப்படுத்தல் 20-லிருந்து 22-வரை பரலோகத்தின் மீட்பு. இதனை நாம் விளங்கிக் கொண்டால் இதன் தொடர்ச்சியாய் வரும் விளக்கங்கள் நமக்குப் புரியும்.

கடவுள் யார்? எப்படிப்பட்டவர்? எதைச் செய்வார்?

1. சங்கீதம் 139:1-6
2. நம்மை ஆராய்ந்து அறிந்திருக்கிறவர், உட்காருதலை எழுந்திருக்குதலை அறிந்திருக்கிறவர், நினைவுகளை தூரத்திலிருந்து அறிகிறவர், நடந்தாலும் படுத்தாலும் சூழ்ந்திருக்கிறவர், நம் வழிகள் எல்லாம் தெரிந்தவர், முற்புறத்திலும் பிற்புறத்திலும் (hem me before and behind) நம்மை நெருக்கி தமது கரம் வைக்கிறவர். (நம்மை விலகாமல் காக்கிறவர்)
3. ஏசாயா 46:10 அவருக்குச் சித்தமானவைகளை எல்லாம் செய்வார்.
4. யாக்கோபு 1:13 பொல்லாங்கினால் சோதிக்கிறவரும் அல்ல. பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவருமல்ல.
5. அப்போஸ்தலர் 2:23 கடவுள் நிர்ணயித்து இருந்த ஆலோசனை, தமது முன் அறிவின்படி இயேசுவை சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார்.
6. வெளிப்படுத்தல் 13:8 உலகத்தோற்றமுதல் பூமியின் குடிகள் வணங்கும்படிச் செய்வார்.
7. சங்கீதம் 86:9 அவர் உண்டாக்கின அனைவரும் வந்து பணிவார்கள்.
8. எபேசியர் 1:10 எல்லாம் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட வேண்டும் என்பது, தமக்குள் தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தம் கொண்டவர்.

9. தீத்து 2:14 நற்கிரியைகளைச் செய்ய நம்மை சுத்திகரிக்கும்படி தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தவர்.
10. வெளிப்படுத்தல் 20:7-10 ஜீவ புஸ்தகத்திலே காணப்படா விட்டால் அக்கினிக் கடலில் தள்ளப் படும்படி செய்வார்.
11. எபேசியர் 2:8-9 கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பை அளித்தார். அது அவரது ஈவு.
12. 1யோவான் 4:9 அவர் நம்மீது வைத்த அன்பினாலே அவரது குமாரனாலே நமக்குப் பிழைப்பு தந்தவர்.
13. 1யோவான் 4:16 அன்பில் நிலைத்திருந்தால் நம்மில் நிலைத்திருப்பவர்.
14. யோவான் 5:27 அவர் மனுஷ குமாரனாய் இருக்கிறபடியால் நியாயம் தீர்க்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்.

சங்கீதம் 7:11 கர்த்தர் நீதியுள்ள நியாயாதிபதி
ஏசாயா 6:3 கர்த்தர் பரிசுத்தர்
உபாகமம் 32:4 கர்த்தர் நீதியும் செம்மையுமானவர்
தானியேல் 4:17 கர்த்தர் உன்னதமானவர்.

பின்பு ஏன் மனிதனை பாவத்திற்கு ஒப்புக் கொடுத்தார்?

மனிதன் பாவம் செய்யாதபடி, மனிதர் அனைவரையும் ஒரே நொடியில் பாவமில்லாதவராக கடவுளால் மாற்ற முடியும். ஆனால் அப்படிச் செய்தால் மனிதரை அவர் தமது சாயலாக படைக்க வேண்டிய அவசியமில்லை. மிருகங்களுக்கும் மனிதருக்கும் வித்தியாசம் இல்லாமல் படைத்துவிட்டுப் போயிருக்கலாம். மனிதரை ரோபோக்கள் போல படைத்து விட்டிருக்கலாம்.

நன்மை எது தீமை எது என்று அறிய முடியாதபடி, பகுத்தறியும் திராணியை பெறாமல் நன்மை ஒன்றையே செய்யும் இயந்திரமான இருதயத்துடன் மனிதர்களை படைத்திருப்பார். அப்படிப் படைத்திருந்தால் கடவுளுக்கும் அவரது படைப்புகளுக்கும் இடையில் ஒரு அர்த்தமில்லாத உறவே இருந்திருக்கும்.

கடவுள் ஆதாமையும் ஏவாளையும் பத்தாம்பசலிகளாக (ஒன்றும் அறியாதவர்களாக - innocent) படைத்தாலும், அவர்களுக்கு நன்மை தீமையை தெரிவு செய்யும் அளவிற்கான பகுத்தறிவையும் சேர்த்தே படைத்தார்.

அதினால் அவர்கள் தேவனின் அன்பையும் அவர்மேல் நம்பிக்கையையும் வைக்கவோ அல்லது அவருக்கு கீழ்ப்படியும் முடிவையோ எடுக்க முடியும். அதினால் தான் அவர்கள் செய்த தவறினால் அந்தப் பாவம் அவர்களுக்குப் பின் வந்த நம்மையும் பாதித்தது. நாம் செய்யும் பாவங்கள் நமக்குப்பின் வருபவரை பாதிக்கும் அல்லது தொடரும். நாம் வாழ்கிற உலகத்தில் நாம் செய்கிற செயல்களைத் தான் நாம் தேர்வு செய்ய முடியுமே தவிர அதன் விளைவுகளை நம்மால் தேர்ந்தெடுக்க முடியாது.

கடவுள் தமது சித்தத்தின்படி, தமது வேளையில் நமக்கு வரும் பெரிதான துர்சம்பவங்களிலிருந்து நம்மை நூறு சதவிகிதம் அற்புதமாக விலக்கி மீட்பார். ஒரு குடிகார ஓட்டுனரிடமிருந்து ஒரு பேருந்தில் இருக்கின்ற பயணிகள் அனைவரையும் விபத்திலிருந்து காப்பாற்றுவார். ஒரு திருடனிடமிருந்து நமது பொருட்கள் களவு போகாதபடி நம்மைக் காத்துக்கொள்வார். வன்முறையில் ஈடுபடும் ஒரு தீவிரவாதியின் பிடியிலிருந்து நம்மைக் காப்பாற்றுவார்.

ஒரு தவறான கட்டிடத் தொழிலாளியின் பொறுப்பின்மையில் பின்னால் அந்தக் கட்டிடத்தில் வாழப் போகிற குடும்பத்தைக் காப்பாற்றுவார். உலகில் போட்டி மற்றும் பொறாமையினால் பிரிந்துவிடும் குடும்பங்களை ஒன்று சேர்த்து வைப்பார். சாதி மற்றும் தீண்டாமையினால் ஏற்படும் பிரச்சனையிலிருந்து சபை மக்களைக் கூடக் காப்பாற்றுவார். வட்டிக் கடனால் பாதிப்படைந்து தவிக்கும் விசுவாசிகளைக் காப்பாற்றுவார்.

கடவுள் இவ்விதமாக நமக்குச் செய்யும் நன்மைகள் மற்றும் அற்புதங்கள் எல்லாம் நமக்குப் மிகவும் பிரியமாகவும், சந்தோஷத்தைக் கொடுக்கும் வகையிலும் உள்ளது. இவைகளில் உள்ள உண்மை அனைத்தையும் நம்மால் ஏற்றுக் கொள்ளவும் முடிகிறது. ஆனால் இதுபோன்ற எதிர்ப்பார்ப்புகள் மற்றும் கிருபைகள் எதிர்மறையாகும்போது, நமக்கு கிறிஸ்தவமும், பக்தியும், நமது விசுவாசமும் கேள்விக்குறியாகி விடுகிறது!

நமக்கு நேரிடும் பெரிதான பிரச்சனைகள் எதுவும், ஒரு சிறிய அல்லது தனிப்பட்ட பாவத்தின் விளைவால் ஏற்படுகிறது என்பதை நாம் ஏற்பதில்லை. அதோடு அதன் உண்மையை மறுக்கவும் செய்கிறோம். யாருடைய பாவமோ யாரையோ பாதிப்பதை நாம் காண்கிறோம். மூதாதையர் செய்த

கனி

பாவத்தின் விளைவால் சில இழப்புகளை நாம் அடைவதைப் பாா்க்கிறோம்.

ஆனால் பிரச்சனை மற்றும் சோதனை வரும் நேரத்தில் கடவுளின் அன்பை மறந்து, அவரை நிந்திக்கவும், முறுமுறுக்கவும், அவரைக் குற்றப்படுத்தவும் முற்படுகிறோம்.

சற்று யோசித்துப் பாா்ப்போம். விபத்திலிருந்து பயணிகளைக் காப்பாற்ற முற்படாமல் குடிகார ஓட்டுனரை குடியிலிருந்து காப்பாற்றுவதா அவா் வேலை? திருடனிடமிருந்து மற்றும் கொள்ளைக்காரரிடமிருந்து தமது மக்களைக் காப்பாற்றுவாரா இல்லை திருட்டில் ஈடுபடும் தனிப்பட்ட மனிதனை திருத்திக் கொண்டிருப்பாரா?

வருமானத்தை பெருக்குவது அவா் வேலையா? வருமான வரிகட்டாத கிறிஸ்தவனை மனம் திருந்த வைப்பது அவா் வேலையா? தீவிரவாதத்திலிருந்து மக்களை காப்பாற்றுவாரா இல்லை தீவிரவாதத்தை தூண்டுகிறவனை கூப்பிட்டு புத்தி சொல்லிக் கொண்டிருப்பாரா?

பிரிந்த குடும்பத்தை ஒன்று சோ்க்க பிரயாசப் படுவாரா, போட்டிப் பொறாமையினால் குடும்பத்தை பிரித்தவா்களைத் திருத்திக் கொண்டிருப்பாரா? தீண்டாமையினால் சாதிப் பிரிவெனும் ஏற்றத்தாழ்வினால் பாதிக்கப்படுகிறவா்களை ஆதரிப்பாரா இல்லை சாதிபாா்க்கும் கிறிஸ்தவனை மாற்ற முயன்று கொண்டிருப்பாரா? கடனில் மூழ்கிய ஏழைகளுக்கு உதவுவாரா இல்லை வட்டிவாங்கும் விசுவாசியை மனம்மாற அழைத்துக் கொண்டிருப்பாரா?

நம்மைத் திருத்துகிற வேலையையும், மனம் திருந்த வைக்கும் வேலையையும் கா்த்தா் செய்வாா் என்று நாம் எதிா்பாா்க்கலாமா? அப்படி அவா் அந்தப் பணியையையும் செய்வாா் என்றால் எப்போது செய்யக் கூடும் என்று நாம் சற்றுக் கற்பனை செய்து பாா்ப்போமா?

பரிசுத்த ஆவியானவரான தேற்றரவாளனை, நமக்கு அவா் தந்திராவிட்டால் அந்தப் பணியைச் செய்வாா். அநீதியை, துன்மாா்க்கத்தை, பாவிகளை, மாறும்படிச் செய்வாா், ஆனால் அது நியாத்தீா்ப்பு என்ற ஒன்று இல்லாமலிருந்தால்.

சிறிய பாவத்திலிருந்து தான் நமக்குப் பெரிய பாவங்கள் தோன்றுகிறது என்பதை அவர் அறியாதவர் அல்ல. அப்படியிருந்தும் பாவம் செய்வான் என்று தெரிந்தே மனிதனை மண்ணில் தோன்றப் பண்ணாமல் இருக்கச் செய்வார், அது எப்பொழுது?

இயேசு கிறிஸ்து எனும் சொந்தக் குமாரனை, மனுஷ குமாரனாக, உலக இரட்சகராக இந்த உலகிற்கு அனுப்பி, அவரை நமது பாவங்களுக்காக பலியாக்கும் தமது அநாதி தீர்மானத்தை நிறைவேற்றாமல் இருந்தால். யோவான் 3:16, கலாத்தியர் 1:4.

பாவமே உலகத்தில் இல்லாமலும் செய்வார், உலகத்தில் ஜெயம் கொள்ளுகிறவருக்காக அவரது பிதாவின் வீட்டில் ஒரு ஸ்தலத்தை ஆயத்தப்படுத்தாமல் இருந்தால்.

யோவான் 14:2 என்பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், என்று சொல்லாமலிருந்தால்.

எல்லாவற்றிற்கும் மேலாக, அவரவரது கிரியைகளின்படி அவரவர்க்கு அவர் அளிக்கும் பலன் அவருடன் கூட வருகிறது என்று அவர் நமக்குச் சொல்லிச் செல்லாமல் இருந்தால். வெளிப்படுத்தல் 22:12

பாவச்செயல் புரிகிறவர்களை உடனுக்குடன் கர்த்தர் அழித்துவிடலாமே என்று நாம் எண்ணினால், அதிலும் ஒரு சிக்கல் இருக்கிறது. கடவுள் அப்படி செய்ய நினைத்தால், உலகத்தில் ஒரு மனிதனும் வாழமுடியாது. பிரசங்கி 7:20 ஒருபாவமும் செய்யாமல் நன்மையே செய்யத்தக்க நீதிமான் ஒருவனும் இல்லை.

ஒவ்வொரு மனிதனின் பாவ வாழ்க்கையும், வித்தியாசமான நிலையிலும், வெவ்வேறு அளவிலும் உள்ளது. கடவுள் அவர்களை எந்த அளவுகோலால் பிரித்துப் பார்க்க முடியும்? ஒரு விதத்தில் எல்லா பாவமும் மற்றவர்களை அல்லது குறிப்பாக யாரையேனும் பாதிக்கும்படியே உள்ளது.

ஆதாம் எடுத்த முடிவினால் பாவம் உலகத்தில் வந்தது. அந்தப் பாவத்தின் சாபம் நம்மைத் தொடருகிறது. அதினால் நாம் பாவத்தில் பிறக்கிறவர்களாக ஆனோம். ரோமர் 5:12.

கர்த்தரின் வருகையிலே உலகத்தின் பாவத்திற்கு நியாயத்தீர்ப்பு உண்டாகும். ஆனால் அவரது வருகை தாமதமாகிறது. அந்த தாமதம் எதினால் என்பதை நாம் 1பேதுரு 3:9ல் அறிந்து கொள்ளலாம். அதுவரை பாவத்தைக் குறித்தும் தீமையைக் குறித்தும் கடவுள் அக்கறை கொண்டவராகத்தான் இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

பழைய ஏற்பாட்டின் காலத்தில், நியாயப்பிரமாணத்தின் மூலமாக, கடவுள் தீமைகளை ஒடுக்கவும் அதற்காய் தண்டிக்கவுமே முற்பட்டார். அப்போது தேசத்தையும், இராஜாக்களையும் நியாயம் தீர்த்தார் என்பதை வேதத்தில் காண்கிறோம். புதிய ஏற்பாட்டின் காலத்தில், எளியவரை நீதி விசாரிப்பதும், அவர்களின் நீதியை நிலை நாட்டுவதும் அரசாங்கத்தின் கடமை என்றே வலியுறுத்தினார். ரோமர் 13:7. எளியவர்க்கு இடறல் உண்டாக்குகிறவன் தண்டிக்கப்பட வேண்டும் என்றே இயேசு கூறினார். மாற்கு 9:42.

நமது பாவங்களினால் நம் மீதோ, நம்மைச் சுற்றியிருப்பவர் மீதோ, நேரிடையாகவோ இல்லை மறைமுகமாகவோ ஏற்படுகிற விளைவுகளை இந்த உலகத்தில் இன்று நாம் காண்கிறவர்களாக இருக்கிறோம்.

ஆனால் கர்த்தரின் விருப்பமும் எதிர்பார்ப்பும் எவ்விதமாக இருக்கிறது என்பதை உபாகமம் 5:29ல் நாம் காணலாம். நாம் நன்றாயிருப்பதற்கு, கர்த்தருக்கு பயப்படுதலும், அவரது கற்பனைகளை கைக்கொள்ள கீழ்ப்படிதலும் அவசியம்.

கர்த்தர் தீமைகளை, பாவங்களை கட்டுப்படுத்திக் கொண்டு தான் இருக்கிறார். அப்படி இல்லை என்றால் உலகம் இன்னும் மோசமானதாக, நாம் கற்பனை செய்யமுடியாத பயங்கரமான நிலைக்குத் தள்ளப்பட்டதாக இருந்திருக்கும். நாம் தெரிவு செய்யும் எந்த முடிவிலும், பகுத்தறியும் ஆவியினைப் பெற்றவர்களாக இருக்கிறோம், இருக்க வேண்டும்.

ரோமர் 12:1-2. நமது சுயத்தின் அடிப்படையில், தவறான முடிவுகளை நாம் எடுத்துவிட்டு, கடவுளை குறை கூறுகிறவர்களாக இருக்கிறோம். இது பாவப்பட்ட மனித இருதயத்தின் சிந்தனை.

2கொரிந்தியர் 3:17 கர்த்தருடைய ஆவி எங்கே உண்டோ அங்கே விடுதலை உண்டு. அது பாவத்திலிருந்து விடுதலை. கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்களை செய்வதிலிருந்து விடுதலை. 2கொரிந்தியர் 5:17 கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டி. அந்தப் புது சிருஷ்டியில் கர்த்தருடைய ஆவி நிச்சயமாய் இருக்கும். இருத்தல் வேண்டும்.

எபேசியர் 4:22-24 முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் கடவுளின் சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்.

ஆதாமினால் பாவம் நுழைந்தது. ஆதாம் தான் உலகம் பாவத்தில் விழுந்ததற்கான காரணம் என்று மூலக்காரணம் பற்றியே பேசிக் கொண்டிருக்காமல், நாம் முந்தின நடக்கை என்னவென்றும், மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போன பழைய மனுஷனை களைந்து போட்டு விட்டால் புதிதான ஆவி உள்ளத்தில் உண்டாகும். பாவத்தினால் இழந்த கடவுளின் சாயலை தரித்துக் கொள்ள புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள வேண்டும்.

தீத்து 3:5-7 தமது இரக்கத்தின்படி மறுஜென்ம முழுக்கினால் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலே நம்மை இரட்சித்தார். நம்முடைய இரட்சிப்பே மறுஜென்ம முழுக்கு என்பதும் அதனை பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலில் பெறுகிறோம் என்பதை உணர்ந்தால் நிச்சயமாகவே கனி கொடுக்கும் வாழ்வினை பெற்றுக் கொள்வோம்.

எபிரேயர் 4:12-16 இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம். கனி கொடுக்கும் வாழ்வில் நமக்கு ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை நாம் அடைவோம்.
ஆனால் கிருபாசனத்தண்டை சேருவதற்கு தைரியம் வேண்டும். தைரியம் என்பது சுத்த இருதயமான பாவமில்லா இருதயத்துடன் என்று பொருள். அவர் மன்னிக்க தயை பெருத்தவர் என்ற் நம்பிக்கையினால் வரும் தைரியம் என்றும் பொருள்படும்.

கனி

யாக்கோபு 4:8 தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். சுத்த இருதயத்துடன் அல்லாமல் கடவுளிடம் சேருவது என்பது முடியாத காரியம்.

எபிரேயர் 11:6 விசுவாசம் இல்லாமல் தேவனிடத்தில் பிரியமாய் இருப்பது கூடாத காரியம் என்று சொல்லப்படுவது போல், அவரைச் சேரவும் நாம் சுத்த இருதயத்துடன் நெருங்குதல் அவசியமாகிறது.

எபிரேயர் 12:14 பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. கனி கொடுப்பது தரிசனமில்லை அது கடமை. ஆனால் கனி கொடுக்க கடவுளின் தரிசனம் தேவை. அதற்கு பரிசுத்தமான இருதயம் தேவை.

கடவுள் காளானை 6 மணி நேரத்தில் உருவாக்குகிறார். கர்வாலிமரத்தை 60 வருடங்களில் உருவாக்குகிறார். நாம் என்னவாக விருப்பம்?

கனிகொடுக்கும் முயற்சியே ஆவிக்குரிய வளர்ச்சி!

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

4. கனி கொடுப்பது

கனி கொடுப்பது என்ன என்பது விவிலிய நோக்கில் ஆராயப்பட வேண்டிய ஒரு சத்தியமாக உள்ளது. மரத்தின் கனி அதற்குப் பயன்படுகிறதோ இல்லையோ, அது நிச்சயம் மற்றவர்களுக்கு பயன்படுகிறது. கனிகொடுப்பது என்றாலே அடுத்தவர் நன்மைக்கான ஒன்று என்பதே நிதர்சனமான உண்மை.

கனிகொடுப்பதைக் குறித்து நம் கர்த்தர் வலியுறுத்துவது எப்படி உள்ளது? விவிலியம் சொல்வது என்ன? நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுக்க வேண்டும் என்று கிறிஸ்து சொல்கிறார்.

கனிகள் என்பது நற்கிரியைகள். கனி என்பது நற்கிரியை. கடவுள் கற்றுக் கொடுத்ததை செயல்படுத்துவது. கடவுள் பிரியப்படும் செயல்களை நாம் செய்ய முற்படுவது. அந்தக் கனிகளைக் கொடுப்பது யாருக்கு? கனிகளை நம்மிடம் எதிர்பார்ப்பவர் கர்த்தர் என்றால் அந்தக் கனிகளை நாம் கர்த்தருக்கே கொடுக்க வேண்டும்.

கனிகள் என்பதற்கு இணையான பொருள் பலன் அல்லது பலனளிப்பது. முப்பதும் அறுபதும் நூறுமாய் பலன் என்று நம் வேதத்தில் வாசிக்கிறோம்.

மாற்கு 4:20

இந்தப் பகுதியினை ஆய்வின் அடிப்படையில் அறிந்து கொள்ள முற்படுவோம். வேத ஆராய்ச்சி வல்லுனர்கள் கூறுகின்ற ஆய்வுக் கருத்துகள் என்ன?

100 மடங்கு அதிகம் என்று அர்த்தம் அல்ல. That means that the seed has produced to its "fullest potential". விதையின் முழுமையான பலனையே குறிக்கிறது. 30 மடங்கு பலன் தந்த அதே நிலம் தான் 100 மடங்கான பலனையும் தருகிறது எப்படி?

அப்படியென்றால் 30 மடங்கு பலன் தந்த நிலம் கெட்ட நிலம் என்று எண்ணத் தோன்றும். அது உண்மை அல்ல.

கனி

இந்த உவமையின் பொருள் நிலத்தைக் குறித்தது அல்ல. இந்த உவமையின் பொருள் தேவனுடைய வார்த்தையை குறித்ததும், அதன் விளக்கம் தேவனுடைய வார்த்தையின் முழுமையான பலனைக் குறிப்பதாகவும் இருக்கிறது, அதாவது 100 மடங்கு பலன்.

வார்த்தையினை கேட்பவர் 30 மடங்கு பலனை 100 மடங்காக பெருக்குவதன் கடமை அல்லது பொறுப்பினை குறிப்பிடுகிறது. This teaching shows the law of increase. இந்த பாடத்தின் போதனையை 'பெருக்கத்தின் விதி'' என்றே கொள்ளலாம்.

நாம் கேள்விப்படுகிற, கவனிக்கிற எல்லாவற்றையும் அளந்து பார்க்கிறவர்களாக இருக்கிறோம். கடவுளின் வார்த்தை எனது கேட்கும் திறனுக்கு பதிலளிக்கிறதாக இருக்கிறது.

ஆங்கில வேதாகமத்தில்: Mark 4:24 "The way "you" hear it, the way "you" measure and respond to it is the measure that it works in your life.

எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கு அளக்கப்படும் என்பதிலிருந்தே நமது கேட்கும் அளவிலேயே நமது வாழ்வில் அது கிரியை செய்யும் என்பது புரியும். கடவுள் நமக்கு அளந்து கொடுப்பதல்ல. முப்பதாய் பலன் தந்தது என்றால் அவனது கேட்கும் அளவிற்கு ஏற்ப கிரியையின் மூலம் பலன் தந்தது என்று அர்த்தம். இன்னொருவனுக்கு அறுபதாய் பலன் தந்ததும், அவனது கேட்கும் அளவிற்கேற்ற கிரியை மூலம் பெற்ற பலன் என்றே அர்த்தம்.

இந்த வருடம் நீ ஒரு லட்சாதிபதியாவாய் என்று யாராவது சொன்னால் நாம் அந்த வார்த்தையை அளந்து பார்க்கும் விதத்தில் அதனை ஏற்புதும் மறுப்பதும் விளங்கும். சந்தேகிப்பதும் ஒரு அளவு. அதனை நம்புவது என்பதும் ஒரு அளவே. நம் வாழ்வில் கேள்விப்படுகிறதெல்லாம் நம்மால் அளக்கப்படுகிறது. அந்த அளவின்படியே நாம் அதை ஏற்பதும் அதனை மறுப்பதும் திகழ்கிறது.

பெரும்பாடுள்ள ஸ்திரி, அவரது வஸ்திரத்தை தொட்டால் சுகமாவேன் என்று உள்ளுக்குள் நினைத்தாள். அவளது விசுவாசம் அந்த அளவிற்கு அளக்கப்பட்டது. இயேசுவும் அவளது விசுவாசத்தின் அளவின்படியே அவளை சுகமாக்கினார்.

நமது சூழ்நிலைகள் நம்மை எவ்விதமாக அளக்கச் செய்கிறதோ அதன்படியே கிரியையை நடப்பிக்கிறது.

ஒரு வார்த்தை சொல்லும் என்று நூற்றுக்கு அதிபதி சொன்னான். அவன் கிறிஸ்துவின் வஸ்திரத்தைத் தொட முன்வரவில்லை. அவன் வேறுவிதமாக அளந்தான்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபின்பு பன்னிரண்டு பேர் வேவு பார்க்க கானான் தேசத்திற்குள் அனுப்பப்பட்டதை உதாரணமாகச் சொல்லலாம். பத்துபேர் அதனை முடியாத காரியமாய் அளந்தார்கள். இரண்டுபேர் வேறு விதமாக அளந்தார்கள். நாம் இந்த தேசத்தை சுதந்தரிக்க முடியும் என்று சொன்னார்கள். பத்து பேர், அங்கு திராட்சைக் குலைகள் இருக்கிறது தெரியும் ஆனால் அங்கிருக்கும் இராட்சத மனிதர்களின் உருவத்தைப் பார்த்தீர்களா என்று கேட்டார்கள். ஆனால் காலேபும் யோசுவாவும், அங்கே இராட்சதர்கள் இருக்கிறார்கள் என்பது தெரியும், ஆனால் அங்கிருக்கும் திராட்ச குலைகளின் அளவைப் பார்த்தீர்களா என்று கேட்டார்கள்.

இரண்டு பிரிவினரும் ஒருவிதமான எதிர்ப்பினைதான் பார்த்தார்கள், ஆனால் வேறு வேறு விதமாக அளந்தார்கள். எண்ணாகமம் 13:30-32 எந்த அளவினால் அளக்கிறோமோ அந்த அளவே நமக்கு கிடைக்கப் பெறும்.

Honest and good heart" (Luke 8:15), which "keeps," that is, "retains" the seed of the word, and bears fruit just in proportion as it is such a heart.

நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மிகவும் பொறுமையுடன் கனிகொடுக்கிறார்கள்.

கனி

முப்பது என்பது சிறிய அளவில் பலன் கொடுக்கிறவர்கள், அறுபது என்பது நடுமயமாய் பலன் கொடுக்கிறவர்கள், நூறு என்பது உயர்ந்த அல்லது முழுமையான பலன் கொடுக்கிறவர்கள்.

Genesis 26:12, is a rare return in the natural husbandry. 100 என்பதை உதாரணமாக சொல்ல முடியா விட்டாலும், இயற்கை வளத்திலேயே இப்படியொரு பலனை பார்க்கிறோம்.

யாத்திராகமம் 16:1, 14:15 இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறியபின்பு, மன்னாவை பெற்றுக் கொள்வதற்கு முன்பாக 30 நாட்கள் பயணித்தார்கள். 30 நாட்கள் வனாந்திரத்தில் இருந்த அந்த காலம் கர்த்தரின் கிருபையை பெறாமல் இருந்த 30 நாட்கள். யாத்திராகமம் 19:1-2 அவர்கள் மீண்டும் 30 நாட்கள் வனாந்திரத்தில் பிரயாணம் செய்தபின்பு,

60வது நாளில் மலையின் அடிவாரம் வந்த பின்பே மன்னாவைப் பெற்றுக் கொண்டார்கள். இதே சத்தியத்தைத் தான் கர்த்தர் இந்த உவமையில் 60 என்கிற பலனை குறித்துச் சொல்கிறார் என்றும் சிலரால் ஆய்வு செய்யப்படுகிறது.

யாத்திராகமம் 24:15-18 அவர்கள் அந்த மலையின் அடிவாரத்தில் இருக்கும் போது தேவ மனுஷனான மோசே மலையின் மேலே ஏறி 40 நாட்கள் ஆண்டவரோடு சஞ்சரித்தார் என்பதை வாசிக்கிறோம். அந்த நாற்பதையும் மலையின் அடிவாரத்தில் இருந்த அறுபதையும் கூட்டிப் பார்க்கும் போது, நல்ல விதை மனிதரின் இருதயத்தில் விதைக்கப்பட்டால், மீண்டும் உவமையின் 100-ஆக பலன் தருவதை ஒப்பிட்டுப் பார்க்க உதவியாக இருக்கும்.

மாற்கு 4:28 மூன்றுவிதமான பலன் மூன்றுவிதமான காலங்கள் என்றும் கொள்ளலாம். மத்தேயு 13:8,23 பின் வரிசைப்படி சொல்லப்பட்டிருக்கிறது, மத்தேயு 13:28-29 அடிப்படையில் வந்த உவமையே. நூறத்தனையாக: மத்தேயு 19:29, மாற்கு 10:29-30, லூக்கா 8:8.

பலனின் அளவுகளைக் குறித்த வேத வசனங்கள்:

எபேசியர் 4:7 கிருபையாகிய பலன், கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத் தக்கதாக அளிக்கப்படுகிறது.

ரோமர் 12:3 அவனவனுக்கு கடவுள் பகிர்ந்த விசுவாசத்தின் அளவின்படி, தன்னைக் குறித்துத் தெளிந்த எண்ணம் உள்ளவனாய் எண்ண வேண்டும்.

யாக்கோபு 1:23,24 திருவசனம் விதைக்கப்பட்டும் அதின்படி செய்யாதவனானால் கண்ணாடியில் தன் சுபாவ முகத்தைப் பாத்துவிட்டு அவ்விடம் விட்டுப் போனவுடன் தன் சாயலை மறந்தவனாகிறான்.

1பேதுரு 1:23 நாம் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுவது தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே.

ஏசாயா 23:3, பிரசங்கி 11:1. இந்த வசனங்களில் ஆகாரம் என்பது தானியத்தைத் தான் குறிக்கிறது என்பது அராய்ச்சியாளரின் கருத்து. வெள்ளம் பெருக்கெடுத்து ஒடும் பொது, யோர்தான் நதியானது இஸ்ரவேல் தேசத்தில் பயிர்களின் மேலும் பாய்ந்து ஒடும். பயிர்களில் உள்ள தானியம் மணலுக்குள் அமிழ்ந்துவிடும். பின்னொரு நாளில் அவை வளர்ந்து பலன் தரும். அதற்காகவும் இஸ்ரவேல் ஜனங்கள் காத்திருந்தனர் என்பது மரபு.

நீதிமொழிகள் 11:18 நீதியை விதைக்கிறவன் மெய்ப்பலனை பெறுவான். நீதியின்றி நற்கனியில்லை!

பிரசங்கி 11:4ல் காற்றையும் மேகத்தின் மழையையும் பார்த்துக் கொண்டிருந்தால் விதைக்கவும் மாட்டாய் அறுக்கவும் மாட்டாய்.

பிரசங்கி 11:1 நன்மை செய்வதென்பதே விதைப்பது. விதைப்பதென்பது ஆகாரத்தை தண்ணீர்கள் மேல் போடுவது. அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காணலாம்.

கனிகொடு அதுவும் ஆகாரம்!

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

5. கனி தேடுவது

இயேசு அத்திமரத்தை சபித்தாரா? Did Jesus curse the fig tree? Mark 11:11-14

'The time of the fig is not yet,' says Mark, for it was just before Passover, about six weeks before the fully-formed fig appears.

பஸ்காவிற்கு ஆறு வாரங்களுக்கு முன்பு அத்திப் பழங்கள் முழுமையாக தோன்றாத நிலை. மார்ச் மாதத்தின் கடைசியில் அத்தி இலைகள் தோன்ற ஆரம்பிக்கும்போது 'தக்ஷ்' எனும் சிறிய அத்திப்பழக் குறுத்துகள் தோன்றும். இது அத்திப்பழத்தின் பருவ காலத்தின் ஆரம்பமாகவும் முன்னோட்டமாகவும் திகழும்.

இந்த அத்திப்பழ பிஞ்சுகளை குடியானவர்களும் பசியோடு நடந்து வரும் வழிப்போக்கர்களும் அதனை உண்பார்கள். இந்த அத்திப்பழ பிஞ்சுகள் அத்திப்பழங்கள் காய்க்கத் துவங்கும்போது உதிர்ந்துவிடும். அத்தி மரத்தின் இலைகள் தோன்றும் போது இந்த 'தக்ஷ்' குறுத்துகள் தோன்றாவிடில் அந்த மரம் கனி கொடுக்காது என்பது அடையாளமாகும்.

இந்த 'தக்ஷ்' தோன்றாத நிலையை கண்ட பின்பே அது கனி கொடுக்காது என்பதையும் அறிந்து இவ்விதமாய் கடிந்து கொண்டார்.

நாகூம் 3:12 All your fortresses are like fig trees with their first ripe fruit; when they are shaken, the figs fall into the mouth of the eater."

அத்திமரத்தின் உவமையில் கூட அத்திமரம் கனி கொடுக்காததைக் கண்டு தோட்டக்காரனிடம் அதனை வெட்டிப் போடும்படியாக உத்தரவிட்டதாக சொல்லப்பட்டது. லூக்கா 13:6-9.

மூன்று வருடங்களாக கனிகொடுக்காத இந்த மரத்தை வெட்டிவிடும்படி தோட்டத்தின் உரிமையாளன் சொல்கிறான். மற்றுமொரு வருடம் அதனை சுற்றி கொத்தி எருபோட அனுமதிக்கும்படி தோட்டக்காரன் விண்ணப்பிப்பதை காண்கிறோம்.

ஓசியா 9:10 இலைகளும் கனிகளும் ஒன்றாய் தோன்றும் என்பதை அறிந்திருந்தார் கர்த்தர். இலைகளிருந்து கனிகள் இல்லாத மரம் மலட்டு மரமாக கருதப்படும். அந்தக் காலங்களில், இரண்டு விதமான அத்திமரங்கள் இருந்தன. முன்அத்தி என்றும் (ஏசாயா 28:4 எரேமியா 24:2) பின்அத்தி (எரேமியா 8:13 29:17) என்றும் அழைக்கப்படும்.

மாற்கு 11:15-17 மத்தேயு 21:12-17 அத்திமரத்தை இயேசு கிறிஸ்து சபித்ததாக சொல்லப்படுகிற இந்தச் சம்பவம், அவர் ஆலயத்தை சுத்திகரித்த நிகழ்வுக்கு முன்பே நடைபெறுகிறது. கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு பண்ணி காசு மற்றும் புறா விற்கிறவர்களை விரட்டியடித்த பின்பு, கோபமாக கடந்து வந்தபோது, இந்த அத்திமரத்தை அவர் கண்டார்.

இஸ்ரவேல் தேசம் முழுவதும் கனி கொடுக்காமல் போன அத்திமரத்திற்கு ஒப்பாக இருப்பதை சுட்டிக்காட்டவே அவர் இவ்விதமாய் நடந்து கொண்டார். மதக்கலாச்சாரத்தை தவிர சத்தியம் அங்கில்லாததை அறிந்தே அவ்விதம் கடிந்து கொண்டார். அதுமட்டுமின்றி எதினால் அப்படிச் செய்தார்? வேத வசனங்களின் அடிப்படையில் நோக்கிப் பார்ப்போம்.

பிதாவுக்குச் சித்தமான அவருடைய தீர்ப்பு நீதியாயிருக்கிறது. யோவான் 5:30 என் பிதாவுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என் தீர்ப்பு நீதியாயிருக்கிறது.

பிதாவிடம் கற்றுக்கொண்டதை நிறைவேற்றும்படி செய்தார். யோவான் 5:36 நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறது.

பிதாவினுடைய உபதேசத்தின்படியே அவர் செய்வது ஆகும். யோவான் 7:16 என் உபதேசம் என்னுடையதாய் இராமல் என்னை அனுப்பினவருடையதாய் இருக்கிறது.

பிதாவினுடைய போதனையின்படி அப்படிச் செய்தார். யோவான் 8:28 நான் சுயமாய் ஒன்றும் செய்யாமல் என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்.

பிதாவினுடைய காரியங்கள் இவரால் செய்யப்படகிறது. யோவான் 14:10 நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்கள் என் சுயமாய்ச் சொல்லவில்லை. என்னிடம் வாசமாய் இருக்கிற பிதாவானவரே இந்தக் காரியங்களைச் செய்துவருகிறார்.

அவரால் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டதை உலகம் அறிய அப்படிச் செய்தார். யோவான் 1:3 சகலமும் அவர் (கிறிஸ்து) மூலமாய் உண்டாயிற்று. கொலோ 1:16 அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது.

இஸ்ரவேலர்களின் வாயின் வார்த்தை சரியாக இருந்ததே ஒழிய அவர்களின் இருதயங்கள் கர்த்தருக்கு விலகியிருந்ததன் அடையாளம் என்பது தான் இந்த அத்தி மரத்தைக் குறித்ததான இயேசுவின் வெளிப்பாடு.

1இராஜாக்கள் 4:25 செழிப்பின் சின்னமாக கருதப்பட்ட அதே அத்திமரம், பாவத்தில் விழுந்த ஆதாம் ஏவாளின் நிர்வாணத்தை மறைக்கவும் பயன்படுத்தப்பட்டது ஆதியாகமம் 3:7.

கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் ஜனம் செல்வதற்கு முன்பாகவே அங்கு அத்திமரங்கள் நிறைந்திருந்தன. ஆண்டவர் அவர்களுக்கு கொடுத்த ஏழு விளைச்சல்களில் அத்தி மரத்தையும் ஒன்றாக குறிப்பிடுகிறார். உபா 8:8

இயேசு கிறிஸ்துவும், அவரது சகோதரரான யாக்கோபுவும், அத்திமரத்தை ஒருவரின் வார்த்தைக்கும் கிரியைக்கும் உவமையாக குறிப்பிடுகின்றனர்.

லூக்கா 6:43-45 நல்ல மரமானது கெட்ட கனி கொடாது. கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. அந்தந்த மரம் அதன் கனியினால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை.

யாக்கோபு 3:12 அத்திமரம் ஒலிவப் பழங்களையும் திராட்சச்செடி அத்திப் பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்க மாட்டாது

அப்படிப்பட்ட அத்திமரங்களுக்கு கர்த்தரின் தீர்ப்பு என்ன?

மத்தேயு 7:16-20, 12:33, 13:4-9, 18:23, யோவான் 15:1-8.

கனிகொடுக்காத மரமெல்லாம் சுட்டெறிக்கப்பட வேண்டும் என்று இயேசு வலியுறுத்துவதை மேற்கண்ட வசனங்களில் பார்க்கிறோம்.

நீதிமொழிகள் 27:18 அத்திமரம் காக்கப்பட்டால் அதன் கனியைப் புசிக்கலாம்.

எரேமியா 8:13 அத்திமரத்தில் பழங்கள் இராது. இலையும் உதிரும், நான் அவர்களை விட்டுத் தாண்டிப் போவேன்.

எவ்விதமான கனிகள் கொடுப்பது?

கொலோ 1:10 சகல வித **நற்கிரியைகளுமாகிய கனிகளைத்** தந்து, கடவுளை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராக நடந்து கொள்ளவும், சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படுவதற்கு.

யாக்கோபு 2:15-16 ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் **(கனி)கொடாவிட்டால்** பிரயோஜனமென்ன?

யாக்கோபு 3:17-18 பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும் மாயமற்றதாயும் இருக்கிறது. **நீதியாகிய கனியானது** சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

கனி

2பேதுரு 1:5-8

விசுவாசத்தோடே தைரியம், தைரியத்தோடே ஞானம், ஞானத்தோடே இச்சையடக்கம், இச்சையடக்கத்தோடே பொறுமை, பொறுமையோடே தேவ பக்தி, தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால் உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் **கனியற்றவர்களுமாய் இருக்கவொட்டாது.**

1யோவான் 3:16 அவர் நமக்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்ததினாலே அவரது அன்பு இன்னதென்று அறிந்து இருக்கிறோம். அன்பு கனி கொடுக்கும். கனி கொடுப்பதில் ஜீவனைக் கொடுப்பதும் அடங்கும்.

எபிரேயர் 13:14-16 அவருடைய நாமத்தைத் துதிக்கும் **உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை** அவர் மூலமாய் எப்போதும் கடவுளுக்குச் செலுத்தக்கடவோம்.

அன்றியும் நன்மை செய்யவும், தான தர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாய் இருக்கிறார்.

யோவான் 4:36 விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக அறுக்கிறவன் கூலியை வாங்கி நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக் கொள்ளுகிறான்.

கனி கொடுப்பது நித்திய ஜீவனுக்காக பலனைச் சேர்ப்பது!

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{>
<

6. கனி செடி கொடி

யோவான் 15:1-16:

நான் (இயேசு கிறிஸ்து) மெய்யான திராட்சச்செடி.
என் பிதா திராட்சத் தோட்டக்காரர்.

- ❖ யோவான் 15:1 சிலுவையில் கிறிஸ்து நமக்காக ஒப்புக்கொடுக்கப் படுவதற்கு முன்பு சொல்லப்பட்ட வார்த்தை.
- ❖ சுத்தம் செய்வேன் என்பது அதிக கனிகளைக் கொடுப்பதற்காக.
- ❖ கிறிஸ்துவாகிய என்னில் கனி கொடாதிருக்கிற கொடியை
- ❖ அவர் (பிதா) அறுத்துப் போடுவார்.

கனி கொடுக்கிற கொடியை எப்படி சுத்தம் பண்ணுகிறார்?

- ◆ நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினால்
- ◆ நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.
- ◆ எபேசியர் 5:26 தாம் அதைத் திருவசனத்தைக் கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து பரிசுத்தமாக்க,
- ◆ கறை திரை இல்லா பரிசுத்த பிழையற்ற சபையாகத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கு தம்மைத் தாமே அதற்காக (சிலுவையில்) ஒப்புக் கொடுத்தார்
- ◆ யோவான் 15:4 மெய்யான திராட்சச் செடியான என்னுடன் கொடியானது நிலைத்திராவிட்டால் நீங்கள் தானாய் கனி கொடுக்கமாட்டீர்கள்.

யோவான் 15:5 நான் திராட்சச் செடி நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்.

யோவான் 15:7 நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். கனி கொடுக்க கேளுங்கள் என்று பொருள்படும்.

கனி

1யோவான் 3:22 அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு அவருக்கு முன்பாக பிரியமானவைகளைச் செய்கிறபடியினால் நாம் வேண்டிக் கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்கிறோம். கனி கொடுக்க வேண்டிக் கொண்டால் பெற்றுக் கொள்வோம்.

சுத்தமாக்கும் வார்த்தையின் மறைபொருளான சத்தியம் என்ன?

அவருடைய வசனமே சத்தியம்: யோவான் 17:17 உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்.

அவருடைய கட்டளையே நித்திய ஜீவன்: யோவான் 12:50 அவருடைய கட்டளை நித்திய ஜீவனாய் இருக்கிறது என்று அறிவேன். ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடி பேசுகிறேன்.

அவருடைய வசனமே ஆவியும் ஜீவனும்: யோவான் 6:63 ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்கிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது.

வார்த்தையான அவரே சத்தியம்: யோவான் 14:6 நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்.

கனிகொடுக்க நம்மை சுத்திகரிக்கும் சத்தியமான வசனம் தேவை. அதை இருதயத்தில் காத்துக் கொள்ள வேண்டும்.

லூக்கா 8:15 வசனத்தைக் கேட்டு அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால் எரியுண்டு உலர்ந்து போவான்.

அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து அக்கினியிலே (ஆக்கினை) போடுகிறார்கள். அது எரிந்து போகும்.

கனியைத் தேடுகிற கர்த்தர் **யோவான் 15:7-10**

கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு அவரது அன்பிலே நிலைத்திருந்தால் நாம் மிகுந்த கனிகளைக் கொடுக்கலாம்.

- நீங்கள் என்னிலும் என் வார்த்தை (உபதேசம்) உங்களிலும் நிலைத்திருந்தால்
- நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ
- அது உங்களுக்கு செய்யப்படும்
- மிகுந்த கனிகளை கொடுத்தால் பிதா மகிமைப் படுவார்
- எனக்கும் சீஷராயிருப்பீர்கள்
- பிதா என்னில் அன்பாயிருக்கிறார்
- நான் உங்களில் அன்பாயிருக்கிறேன்
- என்னுடைய அன்பில் நீங்கள் நிலைத்திருங்கள்
- நான் என் பிதாவின் கற்பனைகளை கைக்கொண்டு அவரில் அன்பு நிலைத்திருக்கிறதுபோல
- என் கற்பனைகளைக் கைக்கொண்டால் என்னுடைய அன்பில் நிலைத்திருக்கலாம்

லூக்கா 13:5-9 மனம்திரும்பாமல் போனால் கெட்டுப் போவீர்கள். இந்த உவமையின் மறைபொருள் என்ன?

- தன் திராட்சத் தோட்டம்
- அத்தி மரத்தை நட்டிருந்தார்
- கனியைத் தேடி வந்தார்
- மூன்று வருஷமாய் கனியைத் தேடி வருகிறேன்
- ஒன்றையும் காணாததால் வெட்டிப் போடு
- இது நிலத்தையும் கெடுக்கிறது
- தோட்டக்காரன்: இந்த வருஷமும் இருக்கட்டும்
- நான் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்
- கனி கொடுத்தால் சரி. கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப் போடலாம்

2 யோவான் 9 கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் கடவுளை உடையவன் அல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்து இருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன்.

கனி

இவைகளை (என் கற்பனைகளை) ஏன் உங்களுக்குச் சொல்கிறேன்? யோவான் 15:11

என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும் படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும் சொல்கிறேன். கனி கொடுத்தால் சந்தோஷத்தின் நிறைவு.

யோவான் 15:12-15

- ❖ என் கற்பனை என்ன?
- ❖ நான் உங்களில் அன்பாயிருக்கிறது போல
- ❖ நீங்கள் ஒருவரிலொருவர்
- ❖ அன்பாயிருக்க வேண்டும் என்பதே.
- ❖ சிநேகிதருக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.
- ❖ நான் கற்பிக்கிற யாவையும் செய்வீர்களானால் என் சிநேகிதராயிருப்பீர்கள்.

இனி நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்வதில்லை. எஜமான் செய்வதை அறியாதவன் ஊழியக்காரன். எஜமான் ஊழியனுக்கு எதையும் சொல்லமாட்டான். அவன் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. எஜமானின் காரியங்களை அறிந்தவன் சிநேகிதனாயிருக்கிறான். யோவான் 15:15

- ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான்.
- நான் உங்களை சிநேகிதர் என்று ஏன் சொல்லுகிறேன் என்றால், என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.
- நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களை தெரிந்து கொண்டேன்
- நீங்கள் என் நாமத்தினால்
- பிதாவைக் கேட்டுக் கொள்வது எதுவோ
- அதை அவர் உங்களுக்கு கொடுக்கத்தக்கதாக
- **நீங்கள் போய்க்** (இருக்கும் இடத்திலேயே அல்ல)
- **கனிகொடுக்கும்படிக்கும்**
- **உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்**
- நான் உங்களை ஏற்படுத்தினேன் (இரட்சிப்பு)

- நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும் நிலைத்திருந்தால்
- 1 கொரிந்தியர் 6:17 கர்த்தரோடு இசைந்திருக்கிறவன் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்.
- அதுவே ஆவியின் கனி!

ஏசாயா 5:1-5 நேசரின் திராட்சத் தோட்டம் மகா செழிப்பான மேட்டிலே இருந்தது. அதை வேலியடைத்து நற்குல திராட்சச் செடிகளை நட்டு, அது நல்ல திராட்சப் பழங்களைத் தருமென்று காத்திருந்தார். அதுவோ கசப்பான பழங்களைத் தந்தது. அதின் வேலியை எடுத்துப் போடுவேன்.

யாக்கோபு 1:18 அவர் சித்தம் கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜநிப்பித்தார்.

யோவான் 15ம் அத்தியாயத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

Love, Hatred, Comforter. அன்பு, பகைமை, தேற்றரவாளர்.

9 - 17 அன்பு, 18 - 25 பகைமை, 26 - 27 தேற்றரவாளர்.

கனிக்கு மூலதனம் அன்பு. கனிகொடுப்பவர் மேல் உலகத்தில் வரும் பகைமைக்கு அவர் வேலியடைப்பார். பலன் கொடுக்க ஆவியானவர் நமக்குத் (தேற்றரவாளர்) துணையிருப்பார்.

நம்முடைய தேற்றரவாளர் கிறிஸ்துவிற்கு சாட்சி. ஆதிமுதல் அவருடனே இருந்தபடியால் (இருந்தால்) நாம் கிறிஸ்துவிற்கே சாட்சி. யோவான் 15:26-27

கிறிஸ்துவிற்கு சாட்சி என்பதும் கனி கொடுப்பதே!

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

7. கனிதர விசுவாசம்

கனிதருவதற்கு முக்கியமாக விசுவாசம் தேவை. கனிகள் என்பது கிரியைகள் என்றால் கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்பதன் பொருளை அறியமுடியும். யாக்கோபு 1:17

விசுவாசம் கிரியையை நடப்பிக்கவில்லை என்றால், கனிகொடுக்க இயலாத விசுவாசம் நமக்கு உள்ளது என்று பொருள்.

கடுகு விதையின் உவமையில் இயேசு, கடவுளிடமிருந்து வருகிற எதுவும் கொஞ்சமானதாக இருந்தாலும் அது பெரிதாகவும் பலம்வாய்ந்ததாகவும் இருக்கும் என்பதை விளக்குகிறார்.

கிறிஸ்தவத்தின் சிறிய ஆரம்பம் தமது சீடர்களால் சிறிதாகத் தொடங்கப்பட்டு, பின்பு எவ்விதம், பிரசங்கிக்கவும் சுவிசேஷத்தை அறிவிக்கவும் வளர்ந்தது என்பதை, கடுவிதை மரமாக வளருவதை உவமையாய்க் கூறினார். கிறிஸ்துவை அறிவித்து கிறிஸ்து அறியப்படுகிற இடம் கடவுளின் ராஜ்யமாகிறது. அறிவிப்பது கனி, அந்த கிரியைக்குத் தேவை விசுவாசம். அது கடுகளவு இருந்தால் போதும் என்று ஏன் சொல்கிறார்?

பல நூறு ஆண்டுகளாய் உலகம் முழுவதும் அவருடைய இராஜ்யம் வளர்ந்து வருகிறது, வளர்ந்தும் இருக்கிறது.

The Greek word for mustard is Sinapi and the Hebrew equivalent would be Chardal. கடுகுவிதைக்கு கிரேக்கம்: 'சினபி'. எபிரேயம்: 'சார்டல்' என்றும் சொல்லப்படுகிறது.

எபிரேய கலாச்சாரத்தின்படி இந்த 'சார்டல்', தோட்டத்தில் பயிராகும் தாவரமல்ல என்றும், இது வெளிநிலத்தில் பயிராகிறது என்றும் மிஷ்னாவில் குறிக்கப்பட்டிருக்கிறது.

மிஷ்னா என்றால் எழுதப்படாமல் உரைக்கப்பட்ட 'தல்முத்' எனும் எபிரேய சட்டத்தின் முதல் பாகமாகும். 'தல்முத்' என்றால் யூத சமூக மற்றும் சம்பிரதாயங்களின் சட்ட அமைப்பாகும்.

'கெமாரா' என்றால் 'மிஷ்னா' என்று சொல்லப்படும் எபிரேய சட்டதிட்டங்களைக் குறித்த ரபீக்களின் விளக்கங்களின் இரண்டாம் பாகமாகும். 'தல்முத்' இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது, பாபிலோனின் தல்முத், பாலஸ்தீனம் அல்லது எருசலேமின் தல்முத் எனப்படுவதாகும்.

இயேசு இந்த கடுகு விதையை உலகிலுள்ள எல்லா விதைகளோடும் ஒப்புமைப் படுத்தவில்லை மாறாக, பாலஸ்தீனத்தில் ஒரு விவசாயி தனது நிலத்தில் பயிரிடும் கடுகு விதைக்கே உவமையாக சொன்னார்.

முதலாம் நூற்றாண்டில் குறிப்பாக அந்த எருசலேம் தேசத்து விவசாயி விதைத்த இந்த கடுகுவிதைக்கு இணையாக சிறிதான விதை வேறு ஏதும் இருந்ததில்லை.

மாற்கு 4:30-32, லூக்கா 13:18-20.

இந்த கருப்பு கடுகுச்செடி சாதாரண கடுகுத் தாவரத்தை விட குறிப்பிட்டுச் சொல்லும் அளவிற்கான அளவில் வளரக் கூடியதாகும்.

இயேசு தேவனுடைய இராஜ்யத்தின் வளர்ச்சிக்குரிய ஒழுங்கு முறைகள் நமக்குள்ளாக வளர்ந்து பெரிய காரியங்களைச் செய்வதை குறித்து விளக்குகிறார்.

கர்த்தர் நமக்கு இந்த உவமையின் மூலமாக மூன்று காரியங்களை உணர்த்துகிறார். ஒன்று மிகச்சிறிய அளவான விதை, இரண்டு அந்த சிறிய விதையிலிருந்து பெரிதாக வளரும் மரம், மூன்றாவதாக அதன் வளர்ச்சியின் வேகம்.

இதை நாம் உணர்ந்தால் இந்த உவமையின் மாற்றுக் கருத்துக்களை நாம் பரிசீலித்து அறிய முடியும். மத்தேயு 13:32 ஆங்கில மொழிபெயர்ப்பு 'கூடு'' என்ற சொல்லை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. (nest in its branches)

ஒரு முக்கியமான குறிப்பை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். கோடை காலத்தின் முடிவில் இந்த மரமானது முழுமையாக வளர்ச்சியடைந்த நிலையில் பறவைகள் கூடு கட்டுவது என்பது மிகவும் கடந்துபோன காலமாகும்.

ஆகையால், அதின் நிழலின் கீழ் வந்து அடையத்தக்கதாக என்று மாற்கு 4:32ல் சொல்லப்பட்டது மிகவும் பொருத்தமாக உள்ளது.

கடுகுவிதையளவு விசுவாசம் விதையைப் போல ஆரம்பிக்கிறது, அந்த கடுகு விதையளவு விசுவாசம் செடியாக மாறுகிறது, அந்த கடுகுவிதையளவு விசுவாசம் மரமாக வளர்ந்து விடுகிறது.

முதலில் நாம் விதைக்க வேண்டும்.
நமது விசுவாசத்தை விதைக்க வேண்டும் அல்லது நடவேண்டும்.
இந்த விசுவாசத்தை வளர்க்க வளர்க்க அதன் பலன்கள் நாம் சாத்தியமே அல்ல என்று நினைத்ததற்கு மாறாக பெரிய அளவில் வளர்ந்து இருக்கும்.

கடுகுவிதையின் அளவினை விட பெரிய காரியங்கள் அதில் அடங்கியிருக்கிறது. அந்தப்படியே மாற்கு 4:30-32 மற்றும் மத்தேயு 13:31-32ல், இயேசு பரலோக ராஜ்யத்தை கடுகுவிதைக்கு ஒப்பாக விளக்குகிறார்.

அப்படியே பரலோக ராஜ்யம் கடுகு விதையைப் போல சிறிய கூட்டமாக, அதாவது இயேசுவின் சீடர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அநேக மக்களின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்துமளவில் அவர்களது வாழ்வில் மலர்ந்து, அதன் கிளைகளில் பரலோக ராஜ்யத்தை ஏற்றுக் கொண்டு வருகிறவர்கள் அடைக்கலமாகும் வண்ணம் வளர்ந்திருக்கும் என்று, மறைமுகமான உவமையால் இயேசு விளக்குகிறார்.

அவரவர்க்கு அளக்கப்பட்ட அளவின்படியே விசுவாசமிருக்கும் ஆனாலும் அதனை விதைக்க முற்பட வேண்டும். விசுவாசத்தைக் கூட்ட வேண்டுதல் செய்வதை விட அதனை நட்டு வளர்ப்பது முக்கியமாகும். நிறைய கிறிஸ்தவர்கள் இன்று தங்களது விசுவாசத்தை விதைப்பதே இல்லை. அப்படி விதைத்திருந்தால் இன்று உடைந்து போன, புண்பட்டுப் போன, தாழ்விலிருக்கும் கிறிஸ்தவர்கள் இருந்திருக்க வாய்ப்பில்லை.

விசுவாசம் என்பது சாத்தானை எதிர்த்து போராட நமக்கிருக்க வேண்டிய மிக முக்கியமான ஒரு ஆயுதமாகும்.

எபேசியர் 6:16 விசுவாசம் எனும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாய் நில்லுங்கள். விசுவாசம் தாக்கும் ஆயுதம் அல்ல தற்காப்பு ஆயுதம்.

லூக்கா 17:6 மற்றும் மத்தேயு 17:20ன்படி, நமது விசுவாசத்தின் மூலம் மரங்களை தள்ளுண்டு போக வைக்கும் முயற்சியில் ஈடுபடுவதற்கு இயேசு நம்மை முற்படுத்தவில்லை. அது, கனிதரும் பலத்தை நம் விசுவாசம் நமக்குக் கொடுக்கும் என்பதற்கான படிப்பினை.

இயேசு தமது சீடர்களுக்கு பாடம் சொன்னதும், நமக்கு பயிற்றுவிப்பதும் என்ன?

வெற்றிகரமான முடிவுகளுக்கு பெரிய அளவிலான விசுவாசம் அவசியம் என்கிற அச்சம் தேவை இல்லை என்பதே. ஏன் என்றால், எந்த முடிவும் நம்மை சார்ந்திருக்கவில்லை, அது கடவுளைச் சார்ந்திருப்பதாகும். அப்படி விசுவாசத்தின் அளவில் முடிவுகள் இருக்குமாயின், நாமும் நமது மகத்தான விசுவாசத்தைக் குறித்தே பெருமைப் பேசிக்கொண்டிருப்போம்.

நாம் இயேசுவைப் போல நடந்துகொள்வது சாத்தியமானது என்று நாம் சொல்லலாம், ஆனால் அவர் அதனை அப்பட்டமாக சொல்லவில்லை, அப்படியே அதை நாம் எடுத்துக் கொள் முடியாது என்றும் சொல்லிக் கொள்வோம். மலை போல வரும் எந்த தடையையும் நமது சிறிய விசுவாசத்தினால் நகர்த்தி விடலாம் என்றே இயேசு சொல்கிறார். மலையைப் பெயர்க்கும் விசுவாசம் அல்லது கடுவிதைப் போன்ற விசுவாசம் என்றே நாம் அழைக்கிறோம்.

இதைக் குறித்த வசனங்களில் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தைகளில் அப்புறம் போம், அப்படியாகும், சொன்னபடியே ஆகும், அது உங்களுக்குக் கீழ்ப்படியும், என்று சொல்லப்பட்டவை சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

இதிலிருந்து நமக்கு இயேசு, மலையை பெயர்ப்பதற்கு மட்டுமே நமக்கு கடுகளவு விசுவாசத்தைப் பற்றிக் கூறவில்லை என்பது விளங்கும். இயேசுவின் காலத்தில் அப்பொழுது நடைமுறையிலிருந்த பேச்சு வழக்கில், சாத்தியமில்லாத கடினமான காரியங்களுக்கு, மலையை உவமைப் படுத்திச் சொல்வது வழக்கமாயிருந்ததால் அப்படி ஒரு விளக்கத்தைச் சொன்னார். கனிகொடுப்பது சாத்தியம்!

லூக்கா 17:6-10 ஒரு விசுவாசத்தின் உதாரணத்தை வைத்து அதன் உண்மைக்கான உதாரணத்தை இயேசு விளக்கினார். அடுத்து, உழுது கொண்டிருப்பவன் ஒருவனையும், ஆடு மேய்ப்பவனையும் காண்பித்துச் சொல்கிறார். அந்தக் காலங்களில் இது போன்ற வேலைகளைச் செய்பவர்கள் வியாபித்திருந்தனர்.

இயேசு மற்றுமொரு ஊழியரைப் பற்றிய சிறுகதையைச் சொல்கிறார். ஊழியக்காரன் மந்தை மேய்த்து வயலிலிருந்து வரும்போது எஜமான் அவனிடம் நீ முன்பு போய்ச் சாப்பிட்டுவா என்று சொல்வானோ?

நியாயப்படி நடக்க வேண்டிய காரியம் என்னவென்றால், ஊழியக்காரன் சாப்பிடுவதற்கு முன்பு, தனது எஜமானனுக்கு உணவை ஆயத்தம் பண்ண வேண்டும் என்பதே.

அவன் தனது கடமையை முடித்தபின்பே தான் உண்பதற்கு செல்லவேண்டும். அந்த நாளின் முடிவில், அவன் இவ்விதமாய் பணிவிடை செய்ததற்காக சிறப்பான பாராட்டுக்கள் எதையும் பெறுவதில்லை, ஏனென்றால் ஒரு ஊழியன் எதைச் செய்ய வேண்டுமோ அதைத்தான் அவன் செய்கிறான். எஜமானுக்கு செய்யும் ஊழியமும் கனியே.

இயேசு முடிவாக ஒரு காரியத்தை முன்குறிக்கிறார். அப்படியே நீங்களும் உங்களுக்கு கட்டளையிடப்பட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர், செய்யவேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள். கனியில் பெருமையில்லை.

நாம் நமது கடமையை மட்டுமே செய்கிறோம், வேறொன்றும் அதிமாக செய்து விடவில்லை. நாம் கடவுளின் ஊழியர். நாம் எப்படி வாழவேண்டுமோ அப்படி வாழவும், அவருக்கு ஊழியம் செய்யவுமே அவர் நமக்கு விசுவாசத்தை கொடுத்திருக்கிறார். அதை மட்டுமே நாம் செய்ய வேண்டும், அதுவே நமது கடமை. இதுவும் கனி கொடுப்பதே.

நாம் எவ்விதம் வாழவேண்டுமோ அவ்விதமே உண்மையாய் வாழ்வோம். அதற்கு அசாத்தியமான விசுவாசமே தேவை என்றில்லை, கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தாலே போதும்.

கலாத்தியர் 3:11 விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். 1யோவான் 1:9 கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவர். 1கொரிந்தியர் 13:2 மலைகளைப் பெயர்க்கத்தக்க விசுவாசம் உள்ளவனாய் இருந்தாலும் அன்பு இராவிட்டால் எனக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை.

அன்பே பிரதானம். அன்பே பிரதான கற்பனை. அன்பு ஆவியின் கனியில் இடம் பெறும் ஒன்று. அன்பு இல்லாவிட்டால் கனி கொடுப்பதுமில்லை. விசுவாசம் இல்லாவிட்டால் கனிகொடுக்க முடிவதுமில்லை.

கடவுள் ஏன் நம்மைப் படைத்தவுடன் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லவில்லை? எதற்காக இந்த பாவம் நிறைந்த அநீதி நிறைந்த உலகில் நம்மை வைத்து, வாழவைத்து, பின் மரிக்கவும் வைத்து நம்மை பரத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்? இதனைக் குறித்து யோசித்திருப்போமா?

அதிகபட்சம் நூறு ஆண்டுகளே வாழப்போகும் பூமியில் ஏன் நாம் வாழ வேண்டியவர்களானோம்?. இதற்கு இரண்டே காரணங்கள் தான் உண்டு. ஒன்று நாம் கடவுளின் மேல் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ள. அடுத்து நாம் பிறர் மேல் அன்பு செலுத்தக் கற்றுக் கொள்ளவுமே.

வாழ்க்கை என்பது தேவைகளைப் பெற்றுக் கொள்ள, அதனை உரிமைப் பாராட்ட, சாதிக்க, என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அது நிச்சயமாய் அப்படி அல்ல. நமது தொழிலை, வேலையை, வாகனத்தை, வீட்டை நாம் பரலோகத்திற்கு எடுத்துச் செல்வதில்லை. நம் குணத்தை மட்டுமே எடுத்துச் செல்கிறோம். நம்மையே கொண்டு செல்கிறோம். நான் என்றழைக்க அடைந்துள்ள ஆத்துமாவை கொண்டு செல்கிறேன். கனிகளையும் கொண்டு செல்கிறோம்!

அதுவரை நாம் அன்பின் பாடத்தைக் கற்றுக் கொள்ளவே முழு உள்ளத்தோடு முழு ஆத்துமாவோடு கர்த்தரிடத்தில் அன்பு கொண்டு, பிறரையும் நேசிக்க கற்றுக் கொண்டு அதின் பலனாய் கனிகொடுக்க உலகில் வாழ்கிறோம்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

8. கனியின் வித்து

கனியில்லாமல் (கிரியை) விசுவாசம் இல்லை. கொடி இல்லாமல் கனியில்லை. வித்தில்லாமல் கொடி இல்லை. வித்தை விதைக்க விதைப்பவர் வேண்டும். விதைப்பவருக்கு வித்து வேண்டும். வித்தே வசனம். வசனமே கர்த்தர்.

வார்த்தை எனும் வித்து - லூக்கா 8:11-15.

விதை என்றாலே நமது ஆகாரத்தைப் பெறுவதற்கான ஆரம்பம் என்று அர்த்தம். ஆதியாகமம் 1:29 கர்த்தர் உலகத்தை சிருஷ்டித்த போதே விதை தரும் சகலவித மரம் செடி கொடிகளைத்தான் மனிதனுக்குக் கொடுத்தார்.

மத்தேயு 17:20 விசுவாசத்தைக் கூட ஒரு விதைக்கு ஒப்பாகவே ஆண்டவர் வெளிப்படுத்துகிறார். 1பேதுரு 1:23 நாம் ஜெனிப்பிக்கப்பட்டதே அழிவில்லாத தேவவசனமாகிய வித்தினாலே என்பதை அறிகிறோம்.

வார்த்தை என்பது கடவுள் நம்மிடம் பேசுவது. நாம் அவர் பேசும்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதும் அவசியமாகிறது. நாம் எங்கு நின்று கொண்டிருக்கிறோம் என்பதும் சிந்திக்க வேண்டியதாகிறது. நம்மைச் சுற்றி என்னவிதமான இறைச்சல்கள் உள்ளன என்பதையும் நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

1. நம்முடைய மனதிலுள்ள கவலை, டென்ஷன், உலகக் காரியங்கள், எதிர்காலத் திட்டங்கள் போன்றவை நம்மை சுற்றி இருக்கும் இறைச்சல்கள் ஆகும்.
2. நம்முடைய எண்ணம் அல்லது கவனம், லட்சியம், தொலைக்காட்சி, செல்பேசி, நட்பு, சமூக ஊடகங்கள், செய்தித்தாள், அலுவலகம், இன்டர்நெட், அரசியல், போன்றவற்றில் இருந்தால் ஆண்டவரின் சத்தத்தைக் கேட்க முடியாதவர்களாக ஆகிவிடுகிறோம்.

லூக்கா 8:7,8:14 விதைக்கப் படும்போது எவைகளை நாம் முட்களாக வேதத்தில் வாசிக்கிறோம்?

1. மொத்தமாகத்தான் விதைக்கப்படுகிறது ஆனால் அதில் சிலவிதைகள் எங்கே விழுகின்றது?

2. சில முள்ளுள்ள இடங்களில் விழுகிறது. நாம் முள்ளுள்ள இடத்தில் நின்றிருந்தால், அல்லது விதைக்காகக் காத்திருந்தால் என்ன ஆகும் என்று காண்கிறோம். முள், கூட வளர்ந்து நெருக்கிப் போடுகிறது.

3. முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள், அதாவது அவரது வார்த்தையைப் பெற்றவர்கள் எப்படி இருக்கிறார்கள்?

4. வசனத்தைக் கேட்கிறவர்களாய் இருக்கிறார்கள். ஆனால் கேட்ட உடனே, அல்லது அடுத்த நிமிடமே, அடுத்த வேலையைப் பார்க்க சென்று விடுகின்றனர். எங்கே செல்கிறோம்?

5. பிரபஞ்சத்திற்கு அதாவது உலகத்திற்கு! அங்கு சென்றபின், அதன் கவலை, ஐஸ்வரியம், சிற்றின்பம் போன்றவற்றால் நெருக்கப்பட்டு விடுகிறோம்.

மூன்று முக்கியமான முட்களை நம் வாழ்வில் வளர விடுகிறோம்.

1. <u>கவலை:</u> கவலை பலசமயங்களில் கடவுளையே மறக்கச் செய்து விடுகிறதாக இருக்கிறது. நடந்து போன முடிந்து போன, துயரங்களை, இழப்புகளை, தோல்விகளை, வலிகளை, காயங்களை நினைத்து நினைத்து அடிக்கடி கவலைப்படுகிறவர்களாகவும் இருக்கிறோம். ஒரு நகைச்சுவையை மூன்றாவது முறை கேட்கும்போது நமக்கு சலிப்பாய் இருக்கும். ஆனால் எத்தனையோ நாட்கள் கடந்து போன பின்பும் சிலவற்றை நினைத்து நினைத்து கவலைப் படுகின்றோம். சுய யோசனை, சுய நோக்கு, சுய முயற்சி போன்ற நிலைமைக்குத் தள்ளப்படும் வகையில் கவலையெனும் இந்த முள் நம்மை நெருக்கிவிடும். கவலை, கனி கொடுப்பதில் முதல் தடை.

2. <u>ஐஸ்வரியம்:</u> இதனைச் செல்வத்தைச் சம்பாதிப்பது என்றும், அதற்கு அத்தியாவசியமான வேலை அல்லது பணியைக் கூட உதாரணமாய் எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளெல்லாம் உழைத்துவிட்டு

இரவு களைப்பாகி வீடு திரும்பி உறங்கிவிடுகிறோம். மீண்டும் அடுத்த நாள் உழைப்பதற்கு தயாராகி கிளம்பிச் செல்வது எதற்கு என்பதை நாம் யோசிக்க வேண்டும். அப்படி உழைத்து சம்பாதித்து வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறோம், ஆனால் கடவுளோடு, கடவுளுக்காக, வாழத் தான் மறந்து விடுகிறோம். பணம் ஒரு முக்கியமான முள். கனி கொடுக்க இரண்டாம் தடை.

3. <u>சிற்றின்பம்:</u> பிரியமான இன்பங்களை அனுபவிப்பது, கேளிக்கைகளில் ஈடுபடுவது, சந்தோஷமாக பேசிக் கொண்டிருப்பது, விளையாட்டுக்களில் நேரத்ததைக் கழிப்பது. இப்படிப்பட்டவைத் தவறில்லை, ஆனால் கடவுளுக்காக நாம் செலவிடுகிற நேரம் எவ்வளவு என்று கணக்கிட்டுப் பார்த்தால், நாம் கடவுளுடைய வார்த்தையை விட்டு எவ்வளவாய் விலகுவதற்கு ஏதுவாக முட்களை வளர்க்கிறோம் என்பது நமக்கே புரிந்துவிடும். சிற்றின்பம் கனி கொடுக்க மூன்றாம் முக்கியத் தடை.

இந்த முட்களை வளர்க்க நாம் பிரயாசப்படவோ முயற்சிக்கவோ அவசியமே இல்லை, அப்படி நாம் செய்வதுமில்லை. ஆனால் நமது அலட்சியம் எனும் பாவம் அவைகளைத் தானாக வளரச் செய்யும் என்பது மறுக்க முடியாத உண்மை. நாம் எவ்வளவு தூரம் கடவுளுடன் செலவிட வேண்டிய நேரத்தை அலட்சியப்படுத்துகிறோமோ அவ்வளவு தூரம் அந்த முட்கள் நமது வாழ்வில் வளர்ந்து நிற்கும். அந்த முட்களே நமது ஆவிக்குரிய வாழ்வினை நம்மிடமிருந்து பிரிக்கும்படி நெருக்குவதாக இருக்கும்.

முட்கள் நம்மை ஆவிக்குரிய ஜீவியத்தில் வாழாதபடிக்கு நெருக்குவதாக இருக்கின்றது. இரட்சிப்பு கடவுளைச் சேர்வதற்கு அவசியம். வார்த்தையை நல்ல நிலத்தில் விதைப்பது பரலோகம் சேர்வதற்கு அவசியம். முட்களை வளரச் செய்யாமல் இருப்பதற்கு ஆவிக்குரிய வாழ்வில் செலவிடப்படும் நேரமும் அவசியம். லூக்கா 8:14 நெருக்கப்பட்டு பலன் கொடாதிருக்கிறார்கள்.

ஆண்டவர் நம்மை அழைக்கும் போதெல்லாம் நமது லைன் பிஸியாக இருந்தால், நாம் இதைக் குறித்து கவனம் செலுத்தி அவர் நம் வாழ்வில் கிரியை செய்து, அவருக்காக

நம்மை கனி கொடுக்கிறவர்களாக மாற்றும்படி, நம்மைக் கிறிஸ்தவர்களாக சொல்லிக் கொள்கிற நாம் மாறவேண்டும்.

கடவுள் யாரிடம் தமது வார்த்தையை விதைப்பதில்லை (அல்லது யாரிடம் பேசுவதில்லை)?

1. கர்த்தாவே, நீர் எனக்குச் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள், அதன்பின்பு நான் அது எனக்கு சரியானதா இல்லையா என்பதை தீர்மானித்துக் கொள்கிறேன் என்பவரிடம் கடவுள் பேசுவதில்லை.
2. கர்த்தாவே, எனக்கு எது நல்லதோ அதைச் சொல்லுங்கள், அதன்பின்பு அதனை என்னுடைய தீர்மானங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, அதில் ஒன்றை நான் தேர்வு செய்கிறேன் என்பவரிடமும் கடவுள் பேசுவதில்லை.

ஆண்டவர் அவ்விதமாக தமது நேரத்தை வீணாக்குகிறவர் அல்ல. அவர் எதிர்பார்ப்பது எப்படிப்பட்ட ஆத்துமாக்களை? ஆண்டவரே இன்றே நான் உம்மோடு ஒத்துழைக்கத் தயாராகக் காத்திருக்கிறேன், நான் என்ன செய்ய நீர் சித்தமாய் இருக்கிறீரோ அதைச் சொல்லும் என்பவர்களையே கடவுள் அதிகமாக நேசிக்கிறார், எதிர்பார்க்கிறார். *I'm signing a blank check; you fill it in!*

நாம் நம்மை நெருக்கும் முட்களை நாமாகவே, அறிந்தே, எத்தருணத்தில், எதற்காக வளர்க்கிறோம்?

1. மற்றவரை சந்தோஷப்படுத்துவதற்காக
2. மற்றவர்களுக்கு பதில் சொல்வதற்கு பயந்தவர்களாக
3. மற்றவர் முன்பாக நாம் நற்பெயரெடுப்பதற்காக
4. எஜமான்களுக்கு அடிமைகளானதை மறந்தவர்களாக
5. சமுதாயத்தை எதிர்க்க முடியாதவர்களாக
6. கிறிஸ்து நமக்குக் கற்பித்ததை மற்றவர் முன்பாகக் கடைபிடிக்க வெட்கப்படுபவர்களாக

இப்படி வாழும் போது கடவுளை விட்டு வெகு தூரத்தில் வாழ்கிறோம் என்பதை அறியாத பேதைகளாக இருப்பதை உணராமல் இருக்கிறோம். வாழ்க்கையில் உஷ்ணத்தை நாம் தாங்கமுடியாமல் வாடிப்போவதற்கு நமது ஆவிக்குரிய வேர் ஆழமாய் ஊன்றப்படவில்லை என்பதைப் புரிந்து கொள்ள

வேண்டும். ஆவிக்குரிய வேர் ஆழமாய் ஊன்ற எங்கு விதைக்கிறோம் என்பது முக்கியம்.

லூக்கா 8:13 கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்கள் *(shallow soil)* கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள், ஆனால் அவர்கள் வேர் கொள்ளாதவர்கள். சோதனை காலத்தில் பின்வாங்கிப் போகிறவர் கொஞ்சக் காலம் மட்டும் விசுவாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதவராய், விசுவாசத்தில் குறைவுள்ளவர்களாய், சந்தோஷமோ துக்கமோ ஏதேனும் ஒருவகையில் மிகவும் உணர்ச்சிவசப்பட்டு வசனத்தை ஏற்றுக் கொள்கிறவர்களாக இருக்கின்றார்கள்.

திறந்த மனதுடன், வெறுமையான மனதுடன் அவரிடம் சென்று அவரிடம் நிற்கும்போதே, நாம் அவர் பேசுவதைத் துல்லியமாய்க் கேட்க முடியும். நாம் அவருடன் பேசிமுடித்தபின்பு, அவர் முன்பு மௌனமாய் இருத்தல் வேண்டும். அதற்கான நேரத்தைத் திட்டமிட்டு, அந்த நேரத்தை அவர் அருகிலிருந்து செலவிடவேண்டும். அப்படிச் செய்வதே வேர்கொண்டவர்களாக நம்மை மாற்றும்.

ஆண்டவர் பேசுவதைக் கேட்க முடியாதபடி நாம் கொண்டுள்ள தடைகள் என்ன? அவைகளை நீக்க என்ன தேவை?

1. கவனம் சிதறாத மனது
2. அவசரப் படாத நிதானம்
3. உணர்ச்சிவசப்படாத தெளிவு
4. வேத வசனங்களின் அறிவு

இந்த விதமாய் கடவுளுடன் அவரது வார்த்தையைக் கேட்பதற்கு நாம் அவரை நமது வாழ்வில் மையப்படுத்த வேண்டும். அப்படி ஆண்டவரை நம் வாழ்வில் மையப்படுத்தவும், அதனை அவர் அறியும்படிச் செய்யவும் வேண்டும்.

ஆலயம் செல்வது, ஜெபிப்பது, வேதம் வாசிப்பது, ஊழியம் செய்வது இவைகளை விட கடவுளின் சத்தத்தை அறியும் விதம் வாழ்வது, கனி கொடுப்பதற்கு அவசியம்.

லூக்கா 8:5 சிலவிதை வழியருகே விழுந்து மிதியுண்டது ஆகாயத்துப் பறவைகள் அதைப் பட்சித்துப் போட்டது. அவைகள் வேர் கொள்ள வழியில்லாததால் அப்படியே இருக்க, பறவைகள் வந்து அதனைத் தின்று விட நேர்கிறது. வழியருகே என்பதும் திறவாத மனதைத் தான் குறிக்கிறது. அந்த வழியென்பது கரடுமுரடாகவோ, கடினமானதாகவோ, குறுகலானதாகவோ இருக்கலாம். பறவைகள் என்பது பிசாசை அல்லது அவனது கிரியைகளைக் குறிக்கிறது.

லூக்கா 8:12 வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப் படாதாபடிக்கு பிசாசானவன் வந்து, அவ்வசனத்தை (கடவுளின் சத்தத்தை) அவர்கள் இருதயத்திலிருந்து (மனதிலிருந்து) எடுத்துப் போடுகிறான் (பட்சித்துப் போடுவது). வழியருகே என்கிற மனம் கொண்டவர்கள் உலகில் வாழ்வதில்லை, உலகத்தில் இருக்கிறார்கள். இவர்கள் கடவுள் தம்மோடு பேசுவதற்கு வாய்ப்பினைக் கூட கொடுக்க மனதில்லாதவர்கள்.

லூக்கா 8:15 நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்: *"The seeds that fell in good soil stand for those who hear the message and retain it in a good and obedient heart, and they persist until they bear fruit."*

1. வசனத்தைக் கேட்டு: ஆர்வம், கவனம், பிரயாசம், முக்கியத்துவம்.
2. அதை உண்மையும்: கடமையாகக் கேட்காமல், வெளிவேஷமாக இல்லாது, அவிசுவாசமாயிராமல், அலட்சியமாக இல்லாமல்.
3. நன்மையுமான: நல்லதொரு முடிவுக்காக, நல்லதொரு வாழ்விற்காக, நல்ல ஒழுக்கத்திற்காக, நல்லதொரு நோக்கத்திற்காக.
4. இருதயத்திலே: செவியளவில் இல்லாமல், இருத்திக் கொள்கின்ற வகையில், தீர்மானமாக, மறவாமல், நிச்சயத்தோடு.
5. காத்து: தயார் நிலையில், எதிர்பார்ப்புடன், சிந்தை விலகாமல், இலட்சியமாக கொண்டவர்கள்.
6. பொறுமையுடனே: அடைந்தே தீர்வேன் என்று, தடைகளில் துவளாமல், எவ்வளவு தான் நேரம் காலமானாலும், விலகி வழுவிப் போகாமல்.
7. பலன்கொடுக்கிறவர்கள்: அவருக்கு ஊழியம், அவரது பிள்ளையாய், அவருக்கு சாட்சி, அவருக்கு மகிமை,

அவருக்காக வாழ்வது. கனிகொடுக்கும் மொத்த உருவம்.

ஆலயத்திற்கு ஒழுங்காய் செல்லலாம் ஆனால் கடவுளை எத்தனைக் காரியங்களில் முதன்மைப் படுத்துகிறோம் என்பது முக்கியம். கடவுளைப் பிரதானப்படுத்தி எத்தனை விஷயத்தில் நமது சொந்தக் காரியங்களைத் தள்ளிப் போடுகிறோம் என்பது அதை விட முக்கியம். முக்கிய அலுவல்கள் என்று பட்டியலிடும்போது ஆண்டவருடைய நேரத்தை அல்லது அவருக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தை முதலில் குறிப்பிடுகிறோமா? அவரை முதன்மைப் படுத்துவதில் நாமும் பிசகாமல், பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுக்கிறோமா?

கடவுளோடு தனிமையில் செலவிடும் நேரம் குறைந்திருந்தால், அவரைப் பின்பற்றுகிற விசுவாசிகளுடன் செலவிடும் நேரம் குறைந்து கொண்டிருந்தால், கர்த்தரின் வார்த்தையை தியானிக்கும் அல்லது விதைக்கும் நேரம் குறைந்து போயிருந்தால், முட்கள் வளர்வது தடைபடாமலிருக்கும்.

- விதைக்கு உயிர் இருக்கிறது. அதற்குள் வாழ்வு இருக்கிறது. விதையை நாம் மாம்சீக கண்களால் பார்க்கும் போது அது உயிருள்ளதா செத்ததா என்பதை அறியமுடியாது. அதிலுள்ள ஜீவனைப் பார்க்கவோ, உணரவோ, முகரவோ, ருசிக்கவோ முடியாது. இவைகளை செய்ய ஒரே வழிதான் உள்ளது. விதையை நடவேண்டும்.
- நாம் நடாதவரை, விதையினாலும் ஒன்றும் செய்ய முடியாது.
- விதையினை நமது பையிலோ, ஷெல்ஃபிலோ (தலைமாட்டிலோ), வாகனத்திலோ வைத்திருந்தால் அது ஒன்றுக்கும் உதவாது. சரியான நிலத்தில் அதனை விதைக்க வேண்டும் (புதைக்க வேண்டும்).
- விதையானது (வார்த்தையானது) நமது வாழ்வில் கனிகொடுக்க வேண்டும் என்றால் நாம் அதனை (இருதயத்தில்-மனதில்) விதைப்பதில் முனைப்பாய் இருத்தல் வேண்டும்.

விதைப்பதற்கு சிறந்த வழிகள் என்ன? முதலில் வார்த்தையை (வசனத்தை) நமது நாவுகளில் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

- வசனத்தைப் பேசுகிறவர்களுக்கும் அதனைச் சொல்கிறவர்களுக்கும் செவிகொடுக்கலாம் ஆனால் அது மாத்திரம் பலனைக் கொடுக்காது. நாம் முழு விசுவாசத்தோடு உணர்ந்து கடவுளின் வார்த்தையை உச்சரிப்பதே மேலான அறுவடையைக் காணச் செய்யும்.
- ஜெபிக்கும்போது மட்டுமல்ல, முடிந்த அளவில் எப்பொழுதும் நமது நாவினால் கடவுளின் வார்த்தையை உச்சரிப்பது மிகமிக அவசியம். வார்த்தையைப் பேசும்போது நமது இருதயங்களில் அது நடப்பட்டு நாம் எதிர்பார்க்கும் பலனை பெரியதொரு அறுவடையைப் பெற்றுக் கொள்ள நிச்சயமாய் உதவும்.
- விதைக்கிறவர்கள் உறங்குவார்கள் ஆனால் விதை உறங்குவதில்லை.
- மாற்கு 4:26-28 கடவுளின் ராஜ்யம் ஒரு மனுஷன் நிலத்தில் விதையை விதைத்து,
- இரவில் தூங்கி பகலில் விழித்திருக்க அவனுக்குத் தெரியாத விதமாய் விதை முளைத்துப் பயிராகிறதற்கு ஒப்பாயிருக்கிறது.
- நிலமானது முன்பு முளையையும், பின்பு கதிரையும், கதிரிலே நிறைந்த தானியத்தையும், பலனாகத் தானாய் கொடுக்கும்.
- தனக்கு அருகில் விதைக்கப்பட்ட ஒரு விதை, முளைக்கா விட்டாலும், அழுகிப் போனாலும் அதைக் கண்டு எந்த விதையும் சோர்ந்து போவதில்லை.

கனி கொடுக்க மரம் அவசியம். அந்த மரம் நல்ல வித்தானதாய் விதைக்கப்பட்டிருக்க வேண்டும். கனி கொடுக்க நாம் யாருடைய வித்தாக இருக்கிறோம்.

1யோவான் 3:9 கடவுளிடம் பிறந்த எவனும் பாவம் செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது.

கனி

கர்த்தருடைய வித்தாக இருக்க நாம் அவரில் பிறக்க வேண்டும். அவரில் பிறக்கும் பொது அவருடைய வித்து நம்மில் இருக்கிறது. அந்த வித்தினைக் கொண்டு எதை விதைக்க முடியும்? கனி கொடுக்கிறவர்கள் ஆவிக்கென்று விதைப்பார்கள் என்பதே விவிலியத்தின் கூற்று.

கலாத்தியர் 6:7-8 மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.

பெருகக் கனிகொடுக்க பெருக விதைக்க வேண்டும் என்றும் அர்த்தம் கொள்ள ஏதுவாக உள்ளது. நீங்கள் அதக கனி கொடுக்க வேண்டும் என்றே கிறிஸ்து உரைப்பதை நாம் அறிந்தவராய் இருக்கிறோம்.

2கொரிந்தியர் 9:6 சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.

1பேதுரு 1:23-25 அழிவுள்ள வித்தினாலே அல்ல என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்கள்.

மாம்சமெல்லாம் புல்லைப் போலவும், மனுஷருடைய மகிமை எல்லாம் புல்லின் பூவைப் போலவுமிருக்கிறது. புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது.

கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிற வசனம் இதுவே.

விதைப்பதும் கனி கொடுக்கத்தான்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

9. கனியில் ஆவி

ஆவியின் கனி ஒன்பது : ஒன்பது கனிகள் அல்ல. எல்லா மொழிபெயர்ப்புகளிலும் ஆவியின்கனி என்றே குறிப்பிடப்பட்டு உள்ளதை நாம் கவனிக்க வேண்டும். ஒன்பது சுவை அல்லது ஒன்பது சுளை அல்லது ஒன்பது சத்துகள் என்று கொள்வதே சிறந்ததொரு புரிதலாகும்.

கலாத்தியர் 5:22-23 ஆவியின் கனி: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம் (faithfulness), சாந்தம், இச்சையடக்கம்.

கலாத்தியர் 5:25-26 ஆவியினால் பிழைத்து, ஆவிக்கேற்றபடி நடந்து, வீண்புகழ்ச்சி கோபமூட்டுதல், பொறாமை இல்லாமல் இருப்பது ஆவியின் கனி நம்மில் இருப்பதால். ஆவியின் கனி நாம் கனிகொடுக்க நம்மை ஆவிக்கேற்றடிப நடக்கவும் வைக்கும் என்பதை இதினால் அறிகிறோம்.

எபேசியர் 5:9 ஆவியின் கனி சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். நற்குணம் இல்லாமல் நற்கனி கொடுப்பது சாத்தியமில்லை.

Gift of the spirit is for all 1கொரிந்தியர் 12:7 ‘ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கு என்று அளிக்கப்பட்டிருக்கிறது’. இதன் சரியான மொழிபெயர்ப்பை ஆங்கிலத்தில் காணலாம். ஆகையால் ஆவியின் வரங்கள் அனைவரின் நன்மைக்காக இருக்கிறது. ஆவியின் வரம் கடவுள் நமக்குக் கொடுப்பது. ஆவியின் கனி நமக்கும் மற்றவருக்கும் பயன்தர. நாம் வரம் பெறவும் கனி கொடுப்பது அவசியம். கனிகொடுத்தால் ஆவியின் வரங்கள் பெறுவதற்கு வழிவகுக்கும் என்றும் சிந்திக்கத் தோன்றுகிறது.

Grk: Karpos – fruit கர்போஸ் என்பதற்கு கிரேக்க மொழியில் இளைய, மரம் உருவாவது, பலனளிப்பது, பயன், போன்ற அர்த்தமுள்ளது.

கனிகொடுப்பதற்கு பயிற்சியும் பலனும் யோவான் 15:5-11

அடிப்படையான தகுதி : கொடிகளாவது
காலம் பொருந்தி வளருவது : நிலைத்திருந்து

கனி

நமது வாழ்வு முழுமையடைய : மிகுந்த கனிகள் கொடுக்க ஒருவர் கிறிஸ்துவில் வாழ : அவரின்றி ஒன்றும் முடியாது துன்மார்க்கராய் வாழ முடியாது : சீஷராயிருப்பீர்கள் இரட்சிப்புக்கு உத்தரவாதம் உண்டு : சுத்தமாயிருப்பீர்கள் கனியில்லாமல் ஊழியம் வளராது : போய் கனிகொடுக்க கற்பனைகளை கைக்கொண்டு கிறிஸ்துவுக்குள் அவருடைய அன்பிலே நிலைத்திராமல் கனிகொடுக்க முடியாது

குணத்தின் அடிப்படையில் மத்தேயு 7:20 பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்.

நாம் தீர்மானிப்பது யோவான் 15:4-5 அவரில் நிலைத்திருக்க நாம் தான் தீர்மானிக்க வேண்டும்.

நமது கிரியைக்காக கலாத்தியர் 5:22-23 ஆவியினால் பிழைத்து இருந்தால் ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

கர்த்தரை மகிமைப்படுத்த மத்தேயு 5:16 மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் காண வேண்டும்.

கிறிஸ்துவின் சீஷராக அறியப்பட யோவான் 13:35 ஒருவரில் ஒருவர் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கனிகொடுத்து கிறிஸ்துவுடையவராக, அவர் வெளிப்பட அவரை அறியவேண்டும். அவரில் நிலைக்க வேண்டும். ஆவியின்றி கனிகள் இல்லை. கற்பனைகளிலும் ஆவியின் கனியிலும் அன்பே முதல் இடத்தினைப் பெற்றிருக்கிறது.

1கொரி 12:3 பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தர் என்று ஒருவரும் சொல்லமுடியாது. ஆவிக்கேற்றபடி நடக்கிறவர்கள் இயேசுவை அறிய முடியும் என்றால் அவரது அன்பை நம்மில் கொள்ளாமல் கனிகொடுக்கவும் முடியாது. அப்படியென்றால் நாம் எவ்விதம் அன்புகூரமுடியும்.

அன்புகூரும் வாழ்வைப் பெற நாம் என்ன செய்ய வேண்டும்? அன்பிலே நிலைத்திருப்பவன் எப்படி இருப்பான். அவனது அன்பு அவனது வாழ்வில் எப்படி வெளிப்படும்? அதற்கான வேத வசனங்களில் நாம் அறிய முடியும்.

1யோவான் 3:18 வசனத்தினாலும் நாவினாலும் கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.

1யோவான் 2:5 அவருடைய வசனத்தைக் கைக்கொள்கிறவன் கடவுளின் அன்பில் பூரணப்பட்டிருப்பான்.

1யோவான் 3:14 சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்தில் நிலைகொண்டிருப்பான்.

1யோவான் 4:7 அன்புள்ள எவனும் கடவுளால் பிறந்து, அவரை அறிந்திருக்கிறான்.

1யோவான் 3:6 அவரில் நிலைத்திருப்பவன் பாவம் செய்வதில்லை. பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை.

இந்த வசனங்கள் நாம் அன்பில் நிலைத்திருக்க நமக்குப் பாடமாய் அமைந்திருப்பதை காண்கிறோம் அல்லவா? அன்பு உள்ள வாழ்வைத்தான் ஆவிக்கேற்றபடி நடப்பது என்றும் கொள்ளலாம் அல்லவா?

கலா 5:16 ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள் அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

1யோவான் 2:6 அவருக்குள் நிலைத்து இருக்கிறேன் என்று சொல்கிறவன் அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்.

உலக ஆசை, பற்று அல்லது இச்சை என்பவை நம்மில் வளராதிருக்க கிறிஸ்துவுக்குள் நிலைத்து இருக்க வேண்டும். அவர் நடந்த வழியில் தானும் நடந்தால் தான் அவரில் நிலைத்திருப்பதாகவும் அர்த்தம் என்று வசனம் சொல்கிறது. அந்த வாழ்க்கையை நமது வாழ்வில் வெளிப்படுத்த நமது கனிகள் உதவியாக இருக்கும். அதினால் நாம் இந்த உலகத்தில் அறியப்படுவோம்.

மத்தேயு 7:20 நம்முடைய கனிகளால் அறியப்படுவோம். கனி கொடாவிட்டால்?

யோவான் 15:2 கனிகொடாமல் இருக்கிற கொடியை அறுத்துப் போடுவார் என்றால், அது பரலோகத்தில் சென்று சேராது என்று பொருள்.

கனி

கனியில்லாமல் கர்த்தரிடம் வரத்தைக் கேட்க முடியாது. கனியின் மூலமாக வரங்களை நிதானித்து பயன்படுத்தலாம். ஆவியின் கனியில் முதலாவதாக கருதப்படும் அன்பு, ஆவியின் வரங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது, மிகவும் தனித்துவம் வாய்ந்தது.

அன்பைக் குறித்தும் ஞானவரங்களைக் குறித்தும் பவுலடிகள் சொல்வது என்ன?

1கொரிந்தியர் 14:1 அன்பை நாடுங்கள், ஞானவரங்களையும் விரும்புங்கள். நாம் நாட வேண்டியது அன்பு. விரும்ப வேண்டியது ஞான வரங்கள்.

ஆவியின் வரங்களைக் குறித்த வியாக்கியானங்களை சொல்லும் 1கொரிந்தியர் 12ம் 14ம் அதிகாரங்களுக்கு இடையில் உள்ள 13ம் அதிகாரம் அன்பை குறித்து மட்டுமே முழுமையாக விவரிக்கிறது.

அன்பே பிரதானம். ஆவிக்கேற்றபடி நடந்து கொண்டால் அன்பைப் புரிந்து கொள்வோம். உண்மையான அன்பைப் புரிந்து கொண்டால் கனிகொடுக்கக் கற்றுக் கொள்வோம். உலகில் நாம் கனிகளால் மட்டுமே அறியப்படுவோம்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

10. கனிதரும் கிரியை

கிரியையுள்ள வாழ்வே கனிதரும் வாழ்வு. கனிதரும் வாழ்வு கட்டப்படவேண்டும். அது கிரியைகளினால் கட்டப்படுகிறது. ஏன் கட்டப்படுகிறது. கட்டப்பட்டது எவ்விதமாய் நிலைத்து நிற்கிறது. எதினால் சோதிக்கப்படுகிறது?

கிரியைகளினால் கட்டப்படுதல் 1 கொரிந்தியர் 3:12-15

பவுல் மூன்றுவருட காலம் எபேசுவில் இருந்தபோது, கொரிந்து சபையினர் அல்லது கொரிந்தியருக்கு சபைகளில் உள்ள பிரிவினைகளைப் பற்றிக் கேள்விப்பட்டு எழுதிய நிருபம். 1கொரிந்தியர் 1:1 பவுல் சொல்ல, அவரது சீடன் சொஸ்தெனே எழுதிய கடிதம். 1கொரிந்தியர் 1:10 கடிதத்தில் சகோதர சகோதரிகளே என்றே எழுதியதாக ஆங்கில மொழிபெயர்ப்பு குறிப்பிடுகிறது (Greek : brothers).

1 கொரிந்தியர் 1:2 1 கொரிந்தியர் 1:8-13

சபை எவ்விதமாக கட்டப்படுகிறது? அதில் பிரிவினைகள் எவ்விதமாக வந்தது? என்பதையெல்லாம் விளக்கும்படி பவுலடிகளார் நமக்கு இந்த உவமையைச் சொல்கிறார்.

கனிதராமல் மணவாட்டியாக ஆகவும் முடியாது என்பதை உணர்ந்தவர்களாய் தியானிப்போம்.

1 கொரிந்தியர் 3:4-10.

சபை என்பது போதகருக்கோ அல்லது கூடுகிற கூட்டத்திற்கோ சொந்தமானதல்ல, அது கடவுளுடையது. கடவுளின் தேவைக்கேற்ப சபையைக் கட்ட வேண்டுமானால் அதற்கு சில நிபந்தனைகளை நாம் நிறைவேற்ற வேண்டி. அப்பல்லோவும் பவுலாகிய நானும் கடவுளுக்கு உடன் வேலையாட்களாயிருக்கிறோம். (விசுவாசியாகிய) நீங்கள் கடவுளின் பண்ணையும் மாளிகையுமாயிருக்கிறீர்கள்.

1 கொரிந்தியர் 3:11

அப்படிக் கட்டும் போது அவனவன் இன்னவிதமாய் அதனைக் கட்டுகிறான் என்பதை பார்க்க வேண்டியதாக இருக்கும். ஆறுவிதமான பொருட்களைக் குறித்து பவுல் குறிப்பிடுகிறார்.

கனி

ஆனால் அவைகளை இரண்டுவிதமாகவே நாம் கணக்கிட வேண்டும். விலையுயர்ந்தது, விலை குறைந்தது, அழியாதது, அழியக்கூடியது, நிரந்தரமானது, தற்காலிகமானது.

அவனவன் என்று குறிப்பிடப்பட்டது, ஊழியர் அல்லது போதகர் மூலமாக இரட்சிப்படைந்தவர்கள். அவர்கள் பிரசங்கியார்கள், ஆசிரியர்கள், அதிகாரிகள், விசுவாசிகள் இப்படி யாராகவும் இருக்கலாம்.

1கொரிந்தியர் 9:1 கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாய் இருக்கிறீர்கள் அல்லவா?

1 கொரிந்தியர் 3:8 வேலைக்குத் தக்கதாய் தன்தன் கூலியைப் பெறுவான்.

பிலிப்பியர் 2:14 1தெசலோனிக்கேயர் 2:19-20

பவுல் இங்கே குறிப்பிடும் 'நாளானது' என்பது அந்த இரட்சிக்கப்பட்டவரின் குணாதிசயத்தை விளக்கும் நாளாகவும் இருக்கலாம்.

பிலிப்பியர் 1:5 வெளிப்படுத்தின விசேஷம் 2:24.

பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்லான இவைகள் தரம்வாய்ந்தவை மட்டுமல்ல, சிலுவையில் அறையுண்ட கிறிஸ்து எனும் அஸ்திபாரத்தில் கட்டப்படுவதற்கு ஏற்றவைகளாகும். அந்த அஸ்திபாரத்தில் கட்டப்பட தகுதிவாய்ந்தது மட்டுமல்ல, அவைகள் அக்கினியினால் வெளிப்படுத்தப் படவும் வல்லதாக இருக்கும். மற்றப் பொருட்களான மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகள் கட்டப்படுவதற்கு தகுதி வாய்ந்ததும் அல்ல, அக்கினிக்குத் தப்புவிக்க வல்லதுமல்ல.

எபேசியர் 2:19-22. இனி அந்நியரும் பரதேசிகளுமாய் இராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் கடவுளுடைய வீட்டாருமாய் இருந்து அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டப் பட்டவர்களுமாய் இருக்கிறீர்கள். அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.

அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

அவர்மேல் நீங்களும் ஆவியினால் கடவுளுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள். கூட்டிக் கட்டப்படுவது என்பதே அவரிலும் அவரது வார்த்தையிலும் நிலைத்து இருப்பது. நிலைத்து நின்று கனி கொடுக்கையில் பலன்களான முடிவு எவ்விதமாக இருக்கும்?

பவுலின் கூற்றுப்படி, இந்த அழியக் கூடிய பொருட்கள் சுவிசேஷத்தை பைத்தியமாய் எண்ணுகிற மனிதனின் ஞானத்திற்கு ஒப்பாகவே விளக்கப்படுகிறது.

கிறிஸ்து எனும் அஸ்திபாரத்தையும் அவரில் கட்டப்படும் மாளிகையின் தரத்தையும் குறிப்பிடுவதே அவரின் நோக்கம். பவுல், கொரிந்து மக்களிடம், அவர்கள் கட்டுகிற மாளிகை, சிறந்த பொருட்களினாலும், அதிக நாட்கள் தாங்குகிறதாக இருக்கவும், நிரந்தரமானதாக அக்கினிக்கு இரையாகாததாக இருக்க வேண்டும் என்று வலியுருத்துகிறார்.

சபையாக இருப்பின் கடவுளின் பார்வையில் அதனைக் கட்டப் பயன்படுத்தும் பொருட்களும் அதன் விளக்கமும்:

	பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள்	மரம், புல், வைக்கோல்
1.	ஊழியத்தில் அதிகமான வாஞ்சை கொண்டுள்ள இருதயம். நற்செய்தி அறிவிக்க தாகம் கொண்டிருப்பது. நற்செய்தியை அறியாவதவர் அறியும்படியான ஊழியத்தை மேற்கொள்வது.	ஆவிக்குரிய காரியங்களில் சோம்பல், அடுத்தவரும் செய்யட்டும் என்கிற எண்ணம், எனக்கு குறிப்பிட்ட நேரம் முடிந்துவிட்டது எனும் போக்கு.
2.	கடவுளிடமும், குடும்பத்திலும், சகமனிதர்களிடமும் கொண்டுள்ள உதாரத்துவமான குணம், உதவிடுவது, கொடுப்பது போன்றவை	தன்னலமே குறிக்கோளாக இருக்கும் மனப்போக்கு, கருமித்தனம், கணக்குப் பார்க்கும் கஞ்சத்தனம், கொடுப்பதைக் குறித்த தவறான எண்ணம்

3.	கடவுளைத் தொழுதுகொள்ள மட்டுமே ஆலயத்திற்கு வருகைதரும் இருதயம். முழு இருதயத்தோடும் முழு உள்ளத்தோடும் தொழுது கொள்வது	அடுத்தவரை கவரவும், தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும், சுய பெருமை பேசவும், ஆலயம் வரும் இருதயம்
4.	ஜெபத்தை முன்வைத்தே கடவுளை அண்டி நடத்துகிற ஊழியம். சுயத்தின் ஆளுமை இல்லாமல் உண்மையும் உத்தமுமாய் நடப்பது	தன்னுடைய சுயபலத்தின் அடிப்படையில் செய்யத் துணியும் ஊழியம். சுயநலம் கொண்டதாக உள்ளது
5.	நல் உபதேசம். நல்வாழ்விற்கு தேவையான பிரசங்கங்கள். சத்தியத்தைச் சத்தியமாய் உபதேசிப்பது	தவறான உபதேசங்கள். போதகர் அல்லது தலைவரை, தனிமனிதரை துதிப்பது.

விசுவாசிகளின் கிரியைகள் 1 கொரிந்தியர் 3:12-15

1. நமது கிரியைகள் இவ்விதமாய் ஒப்பிடப்படுகிறது.
2. சில நெருப்பில் அதிகமாய் சோதிக்கப்படுகிறது ஆனால் சில நெருப்பில் எரிந்து போகிறது.
3. Its an examination for the worker for his works and not a condemnation of worker as person.
4. நெருப்பானது (நியாத்தீர்ப்பு) மனிதனின் எல்லா கிரியைகளையும் சோதிக்கும். அந்த நெருப்பு, விசுவாசிகளுக்கு நியாயத் தீர்ப்பு நாள், அவிசுவாசிகளுக்கு ஆக்கினைத் தீர்ப்பு (நரகம்)
5. அவனது கிரியைகள் பொன், வெள்ளி மற்றும் கற்களாய் இருந்தால் அவை நெருப்பில் அழிந்து போகாமல் அதற்குண்டான வெகுமதியை பெருவதாக இருக்கும். நெருப்பானது கலப்படம் இல்லாத பொன்னையும் அசுத்தத்தையும் பிரித்தெடுக்கும்.
6. அவனது கிரியைகள் மரம், புல், வைக்கோல் போன்றிருந்தால் எரிந்துபோகும் ஆனாலும் அவனது ஆத்துமா இரட்சிக்கப்படும்.

விசுவாசிகளின் கிரியைகளுக்கான நியாயத்தீர்ப்பு எப்படி விவரிக்கப்படுகிறது. அதற்கான பொருட்கள், காலம், இடம், முடிவு போன்றவை பின்வருமாறு ஒப்புமையாக்கப்படுகிறது.

1. **பொருட்கள்** : விசுவாசிகள்
2. கலாத்தியர் 6:8 தன் மாம்சத்திற்கு என்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்.
3. எபேசியர் 6:8 மனுஷருக்கு என்று ஊழியஞ் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல் மனதோடே ஊழியஞ்செய் யுங்கள்
4. கொலோசெயர் 3:24 எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய் செய் யுங்கள்.
5. **காலம்** : இரகசிய வருகை இரண்டாம் வருகைக்கு இடையில்.
6. லூக்கா 14:14 நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் பதில் செய்யப்படும்
7. **இடம்** : பரலோகத்தில்
8. 1 கொரிந்தியர் 9:24-27 அழிவில்லாத கிரீடத்தைப் பெறும் இடம்.
9. ரோமர் 14:10 கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும்.
10. **அடிப்படை** : நற்கிரியைகளும் தீமையான கிரியைகளும். மத்தேயு 10:41-42 1கொரிந்தியர் 3:11-15 மத்தேயு 16:27 ரோமர் 2:6-7
11. **முடிவு** : கிரியைகளுக்கான வெகுமதியை பெறுகிறோமோ அல்லது இழக்கிறோமோ, நமது பாவங்களுக்காக சரியாய் மனம்திரும்பி மன்னிப்பை பெற்றுக் கொண்டால் ஆத்துமாவின் இரட்சிப்பை இழப்பதில்லை.
12. மனிதன் ஆத்துமாவை சீரீரத்திற்கு அடிமையாய் வைக்காமல் சரீரத்தை ஆத்துமாவிற்கு அடிமையாய் வைத்திருப்பது.
13. 2கொரிந்தியர் 5:10 சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடை யும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்
14. 1 பேதுரு 2:4-5 மனுஷரால் தள்ளப்பட்டாயினும் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சோந்தவர்களாகிய நாம்.
15. ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாக

கடவுளுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்.

ஏசாயா 28:16 அஸ்திபாரமாக ஒரு கல்லை, நான் சீயோனிலே வைக்கிறேன். அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரம் உள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும். விசுவாசிக்கிறவன் பதறான்.

இந்த நியாயத் தீர்ப்பு, ஊழியம் கொள்ளும் விசுவாசிகளுக்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். ரோமர் 14:10 இந்த அக்கினிப் பரிசோதனை நித்திய அக்கினிக்கான முடிவு அல்ல. நாம் சரீரத்தால் செய்த கிரியைகள் நல்லவையா கெட்டவையா என்பதை சோதிப்பதற்காகும். யாக்கோபு 1:12 1பேதுரு 1:7 நீதிமொழிகள் 17:3 2கொரிந்தியர் 13:5

விசுவாசிகள் நற்கிரியைகள் மூலம் கடவுளிடமிருந்து கிடைக்கப் பெறும் வெகுமதிகள்:

புகழ்ச்சி: கொரிந்தியர் 4:5
இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் (கிறிஸ்து) வெளியரங்கமாக்கி இருதங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி கடவுளால் உண்டாகும்.

2கொரி 1:14 கர்த்தராகி இயேசுவினுடைய நாளிலே நீங்கள் எங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்பீர்கள் நாங்கள் உங்களுக்குப் புகழ்ச்சியாயிருப்போம்.

மத்தேயு 25:21 கொஞ்சத்திலே உண்மையாய் இருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.

பாக்கியம்: லூக்கா 12:37 எஜமான் வரும்போது விழித்து இருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரை கட்டிக் கொண்டு அவர்களைப் பந்தியிருக்கச் செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

2 பேதுரு 1:11 கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்கு உட்படும் பிரவேசம் உங்களுக்கு பரிபூரணமாய் அளிக்கப்படும்.

2 பேதுரு 2:9 கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்கு உள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்.

பதவி: லூக்கா 16:10-12 கொஞ்சத்தில் உண்மை உள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாய் இருக்கிறான். கொஞ்சத்தில் அநீதியுள்ளவன் அநேகத்தில் அநீதியுள்ளவனாய் இருக்கிறான். அநீதியான உலகப் பொருளைப் பற்றி நீங்கள் உண்மையாய் இராவிட்டால் யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்?

லூக்கா 19:17 கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாக இருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு.

வெகுமதியின் கிரீடங்கள்:

2 தீமோத்தேயு 4:7-8 நல்ல போராட்டத்தை போராடி ஓட்டத்தை ஓடி முடித்து விசுவாசத்தைக் காத்துக் கொண்டால், அது முதல் நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கும். கர்த்தர் அந்நாளிலே அதை தந்தருள்வார். அவரது பிரசன்னமாக்குதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருள்வார்.

1 கொரிந்தியர் 9:24-27 பந்தயத்திற்காக போராடுகிற யாவரும் இச்சையடக்கத்துடன் இருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடம் பெற அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்ய வேண்டும்.

1 தெசலோனிக்கேயர் 2:19-20 மகிழ்ச்சியின் கிரீடமாய் இருப்பவர்கள் யார்? கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும் போது அவருடைய சந்நிதானத்திலே இருப்பவர்களான விசுவாசிகள்.

கனி

1 பேதுரு 5:1-4 சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

கெட்ட கிரியைகளுக்கு கிடைப்பது மட்டும் கடவுளின் தண்டனையல்ல, ஆனால் நற்கிரியைகள் இல்லையென்றால் தேவனுடைய புகழ்ச்சியை (கிரீடம்) இழந்து விடுவோம். துர்க்கிரியைகள் மந்தைக்கு மாதிரிகளானாலும் சரி, ஆளும் கண்காணிகளானாலும் சரி அதற்குண்டான தண்டனையுண்டு என்பதே அநேக வேத ஆய்வாளர்களின் கருத்து. நற்கிரியை துர்க்கிரியையுடன் இணைந்திராது, இணையவும் கூடாது.

எபேசியர் 2:10 நற்கிரியைகள் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு கடவுளின் செய்கையாய் இருக்கிறோம். அவைகளின் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்.

ரோமர் 14:12 நம்மில் ஒவ்வொருவருவனும் தன்னைக் குறித்துக் கடவுளுக்கு முன்பாக கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

ஆமோஸ் 4:12 உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு.

1கொரிந்தியர் 3:11-16 இந்த உவமையானது நாம் பரலோகத்தின் சந்தோஷத்தில் சில வருத்தங்களை கொள்ளாமலிருக்க உதவும் என்று சொல்லப்படுகிறது. விபத்திற்கான காப்பீட்டில் நாம் பங்கு பெறாமல், விபத்தின் நாளில் நமது உடமைகளை இழந்துவிட்டு, உயிர்மட்டும் தப்பினது போல இருக்கும் என்று விளக்குகிறார்கள். அந்த நாளில் நாம் காப்பீட்டை தவறவிட்டதைக் குறித்து வருத்தமும் உண்டாகும்.

ஒரு உல்லாச விடுதியில் இவ்விதமாக விளம்பரம் எழுதி வைக்கப்பட்டிருந்ததாம். “சிறந்த ஆச்சர்யமென்பது ஆச்சர்யம் அடையாமல் இருப்பதே”. அதாவது அந்த இடத்தில் தங்கும்போது நீங்கள் ஏற்கனவே அந்த இடத்திற்கு வந்தது போல உணர்வை ஏற்படுத்தும் என்பதை அறிவிக்க அந்த வாசகம்.

இதேவிதமாகத்தான் நமது பரலோகத்தின் அனுபவமும் இருக்க வேண்டும். அங்கு சென்றபின்பு நாம் கிறிஸ்துவிற்கு எந்த ஊழியமும் செய்ய அனுமதியாமல் இருப்பது என்றால் எப்படியிருக்கும்?

கிறிஸ்துவிற்கு ஊழியம் செய்வதை, நாம் இங்கே சபையை நேசித்து அதைக் கட்டினால், அந்த அனுபவம் அங்கும் நமக்கு உதவியாக இருக்கும்.

விசுவாசிகளுக்கு நியாத்தீர்ப்பு எதின் அடிப்படையில் இருக்கும்?

1. **உபதேசங்கள்:** ரோமர் 2:16 மனுஷருடைய அந்தரங்கங்கள் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே விளங்கும். 2கொரிந்தியர் 3:6-18 புது உடன்படிக்கையின் ஊழியம் எழுத்திற்கு உரியதாய் இராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது.
2. **மற்றவரிடம் நாம் பெறுகின்ற நற்சாட்சி** : மத்தேயு 18 ரோமர் 14
3. **இச்சையான காரியம்** : கொலோ 3 ரோமர் 8:1-13
4. **நாவின் வார்த்தைகள்:** மத்தேயு 12:32-37
5. **மற்றவரை பாதிக்கும் காரியங்கள்:** சண்டை பொய்சாட்சி, பொய்யான வாக்குறுதி, உண்மையாய் நடவாதது, புத்தியீனம். ரோமர் 1:29-32 1கொரிந்தியர் 6:9-11 கலாத்தியர் 5:19-21
6. **தங்களையே பாதிக்கும் காரியங்கள்:** தாலந்துகளின் விரயம், மேம்போக்கான வாழ்வு, சந்தர்ப்பங்களை நழுவவிடுதல், ஆவிக்குரிய காரியங்களின் குறைவுகள். ரோமர் 2:14-16 எபிரேயர் 2:3-4 கலாத்தியர் 6:3-10
7. **கடவுளையே வருத்தும் காரியங்கள்:** ஒளியில் நடக்க மறுப்பது, கீழ்ப்படியாமை, எதிர்ப்புகள், ஆவிக்குரிய வழியில் நடப்பதிலிருந்து தவிர்ப்பது.
   1 கொரிந்தியர் 12 ரோமர் 12. எபேசியர் 4, 5

பிரசங்கி 12:14 ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், கடவுள் நியாயத்திலே கொண்டு வருவார். பிரசங்கியின் கடைசி வசனம் இவ்விதமாக முடிவைக் குறித்துச் சொல்லி முடிகிறது.

கனி

இந்த உலகத்தைவிட்டு செல்லும்போது நாம் ஒன்றும் கொண்டு செல்வதில்லை என்கிறோம் உண்மைதான் (1தீமோத்தேயு 6:7) அது உலகத்தின் ஐஸ்வரியங்கள் மட்டுமே.

கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் அப்படியல்ல தங்களோடு சிலவற்றைக் கொண்டு செல்கிறார்கள்? அது என்ன? கனிகளைக் கொண்டு செல்கின்றனர்.

வெளிப்படுத்தின விசேஷம் 14:13 கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்றெழுது. அவர்கள் தங்கள் பிரயாசங்கள் விட்டொழிந்து இளைப்பாறுவார்கள். அவர்களுடைய கிரியைகள் (கனிகள்) அவர்களோடே கூடப்போம். ஆவியானவரும் ஆம் என்று திருவுளம் பற்றுகிறார்.

'எனது நாட்காட்டியில், இன்றைய தினம், அன்றைய தினம் என்ற இரண்டு தினங்களே இருக்கின்றன, என்று மார்ட்டின் லூதர் கூறுகிறார். நாமும் அந்த சிந்தனையோடு வாழ்ந்தால் நித்திய வீட்டிற்கு ஆயத்தமாகலாம்.

மனிதனின் கிரியைகள் (வேலைப்பாடுகள்)

	மனிதனின் கிரியைகள்	மரம், வைக்கோல், புல் %
1.	தவறான உபதேசங்கள்	7
2.	மற்றவரிடம் பெறும் நற்பெயர்	8
3.	பொறாமை	9
4.	எதையும் ஏற்க மறுப்பது	7
5.	பிரிவினைகள்	8
6.	சகிப்பின்மை	7
7.	சுய லட்சியங்கள்	10
8.	புகழ்ச்சிக்கு அடிமை	8
9.	சபைப் பெருமை	10
10.	தாலந்துகளில் பெருமை	11
11.	ஆளுமை	8
	Total	93
	மனிதனின் கிரியைகள்	பொன், வெள்ளி %

1.	கடவுளின் மேல் அன்பு	4
2.	பிறரை நேசித்தல்	3
	Total	7

ஒரு அம்மாவும் அவர்களின் தோட்டக்காரனும் இறந்தபின் பரலோகம் சென்று அநேக வாசஸ்தலங்கள் உண்டென்றதை அறிந்ததால் தங்கள் வாசஸ்தலம் எதுவாக இருக்கும் என்று காண சென்றார்கள். அப்போது அந்த அம்மாவிற்கு மிகவும் சாதாரண தரமில்லாத ஒரு ஸ்தலம் கொடுக்கப்பட்டது. தோட்டக்காரனுக்கோ அற்புதமான மாளிகை போன்ற ஸ்தலம் கொடுக்கப்பட்டது. வருத்தத்துடன் அந்த அம்மா கர்த்தரிடம் கேட்டபோது அவர் இவ்விதமாக விடையளித்தாராம். அம்மா! இதற்கு நான் பொறுப்பல்ல. நீங்கள் எந்த பொருட்களையெல்லாம் அனுப்பினீர்களோ அதை வைத்தே உனது வாசஸ்தலத்தைக் கட்டியுள்ளேன் என்றாராம்.

அப்படியென்றால் கடவுள் நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறார்? கடவுள் மனிதனின் நற்கிரியைகளுக்குத் தக்கதாக பலனளிப்பார் என்று வேதம் தெளிவாக சொல்லுவது என்ன?

மத்தேயு 16:27 மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமை பொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங் கூட வருவார். அப்பொழுது அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்.

ரோமர் 2:6 தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்.

எபேசியர் 6:7 அடிமையானாலும், சுயாதீனமுள்ளவனானாலும் அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான் என்றறிந்து மனுஷருக்கென்று ஊழியஞ் செய்யாமல் கர்த்தருக்கென்றே ஊழியஞ்செய்யுங்கள்.

வெளிப்படுத்தின விசேஷம் 2:23 உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள் கிரியைகளின்படியே பலன் அளிப்பேன்.

மத்தேயு 12:36-37 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும். ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்

அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய் என்று கிறிஸ்து சொல்கிறார்.

யாக்கோபு 3:6 நாவும் நெருப்புத்தான். அது அநீதி நிறைந்த உலகம். நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப் படுகிறதாயும் இருக்கிறது.

1 கொரிந்தியர் 4:4 என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன். ஆகிலும் அதினாலே நான் நீதிமானாகிறதில்லை. என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே.

கொலோசெயர் 3:23 நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்கள்.

நீதிபரராகிய நம் கர்த்தர் நமது எல்லா விதமான கிரியைகளையும் விசாரித்து சத்தியமாய் நியாந்தீர்ப்பார்.

வெளிப்படுத்தின விசேஷம் 22:12. இதோ சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

யோவான் 5:22-29 அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்கு (பிதாவானவர்) கொடுத்தார்.

ஏன் அப்படிச் செய்தார்? மனிதரை மீட்க மனிதராய் அவதரித்தார் என்பது புரிகிறது, ஆனால் நியாயத் தீர்ப்புச் செய்யும் அதிகாரத்தைப் பெற மனுஷகுமாரனாயிருக்கும் தகுதியை ஏன் வைத்தார். அதன் உட்பொருள் தான் என்ன என்பதை சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

ஆதாம் தொடங்கி சாக்குபோக்குச் சொல்லும் மனிதன், நியாயத்தீர்ப்பு நாளிலும் அதைச் செய்வான் என்று கர்த்தர் அறிவார். பிதாவான கடவுள் ஒருவேளை நியாயத்தீர்ப்பு செய்ய அமர்ந்தால், மனிதன் சொல்லும் முதல் சாக்கு என்னவாக இருக்கும்? நீங்கள் கடவுள் ஆண்டவரே, ஆனால்

நான் மனிதன் ஆகையால் நான் பாவம் செய்தேன் என்றே சொல்வான்!

ஆனால் மனுஷகுமாரன் நியாத்தீர்ப்பில் அமரும்போது இப்படி மனிதன் அவரிடம் சொன்னால், அவர் நானும் முப்பத்தி மூன்றரை வருடம் இந்த உலகில் பாவம் செய்யாமல் தான் வாழ்ந்தேன் என்று சொல்ல முடியும். அதினால் தான் அந்த அதிகாரம் மனுஷ குமாரனாய் இருக்கிறபடியால் கொடுக்கப்பட்டது.

ரேவன் ஹில் எனும் தேவமனிதர் இவ்விதமாகக் கூறுகிறார்: பாவியான மனிதரை, பாவம் நிறைந்த உலிகிலிருந்து மீட்டு வந்து, அவனை பரிசுத்தமாக்கி, மீண்டும் அந்தப் பாவம் நிறைந்த உலகில், அவனை மரணம் வரை பரிசுத்தத்தில் வாழ விட்டு வைப்பதே, கடவுள் செய்கிற மிகப் பெரிய அற்புதம்!

ஆகையால் அவருடைய நாளுக்காக நாம் இன்றே ஆயத்தமாகி காத்திருக்க வேண்டும். ஆயத்தமாவது என்றால் கிரியைகளில் நற்கிரியைகள் இடம் பெற வேண்டும். அந்த நற்கிரியைகள் தான் நற்கனிகள்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

11. கனியில் கர்த்தரின் எதிர்பார்ப்பு

கனிகள் என்றாலே நற்கனிகள் தான். அதிலும் விசேஷித்த விதமாய் நாம் கொடுக்க வேண்டிய கனிகளுக்குத் தேவைப்படும் காரியங்கள் உண்டு. நாம் ஆற்ற வேண்டிய கடமைகள் உண்டு. நாம் அடைய வேண்டிய நற்குணங்கள் உண்டு. கனிதரும் வாழ்வை கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கிறார் என்பது முழுக்கவும் உண்மையாக இருந்தாலும், அவர் அதீதமாய் நம்மில் காணவிரும்பும் அல்லது எதிர்பார்க்கும் விசேஷித்த காரியங்கள் என்ன என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கலாம். கடவுள் நம்மிடம் எவ்விதமாக கனிகொடுப்பதை நம்மில் எதிர்பார்க்கிறார்?

அன்பு :

யோவான் 14:24 என்னில் அன்பாயிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்.
யோவான் 14:15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.
மாற்கு 12:30-32 பிரதான கற்பனை, ஒப்பான கற்பனை, இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை
1 கொரிந்தியர் 12:31 அதிக மேன்மையான வழி அன்பு
1 கொரிந்தியர் 13:13 விசுவாசம் நம்பிக்கை அன்பு. அன்பே பெரிதாயிருக்க வேண்டும்.

ஊழியம் :

உபாகமம் 10:12-13 கர்த்தருக்குப் பயம், கர்த்தரின் வழிகளில் நடப்பது, அவரிடத்தில் அன்பு கூருவது, முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் சேவிப்பது, கற்பனைகளையும் கட்டளைகளையும் நன்மை உண்டாக கைக்கொள்வது.
1பேதுரு 2:16 சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள் ஆனால் அதனை துர்க்குணத்திற்கு மூடலாக கொண்டிராமல் கர்த்தருக்கு அடிமைகளாயிருங்கள் servant of God.
2 தீமோத்தேயு 2:15 24-26 எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி அவர்கள் மயக்கம் தெளிய

நம்பிக்கை :

நீதிமொழிகள் 3:5 சுயபுத்தியில் சாயாமல் அவர் மேல் நம்பிக்கை
சங்கீதம் 20:7 அவர் நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுதல்
யோவான் 14:1 பிதாவினடத்திலும் குமாரனிடத்திலும் விசுவாசம்
தீத்து 1:3 பொய்யுரையாத தேவன். ஆதிகாலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்.
அதைக் குறித்த நம்பிக்கையை பற்றிக் கொள்.

தேடுதல் :

உபாகமம் 4:29 முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும்
எரேமியா 29:13 முழு இருதயத்தோடு தேடவேண்டும்
அப்போஸ்தலர் 17:26-27 அவரைத் தடவியாகிலும் கண்டுபிடிக்க வேண்டும்.
மத்தேயு 6:33 முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேட வேண்டும். அஞ்ஞானிகள் தேடுகிறவைகளெல்லாம் நமக்கு வேண்டியவை என்று அறிந்தவர்.
நமக்கு அவைகள் தாமாக கிடைக்க நாம் முதலில் தேடவேண்டியதை நமக்குக் கற்றுத் தந்தார்.

இப்படியான கர்த்தரின் எதிர்பார்ப்புகளில் கனிகொடுப்பது எளிதாகும்:

1 தெசலோனிக்கேயர் 5:15, 22 தீமைக்கு தீமை செய்யாமல் பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிடுவது.

பிரசங்கி 3:12 12:13 மகிழ்ச்சியாய் இருப்பதும் உயிரோடு இருக்கையில் நன்மை செய்வதுமே அல்லாமல் வேறே நன்மை இல்லை

மீகா 6:8 நியாயம் செய்தல், இரக்கம் செய்தல், மனத்தாழ்மை. வேறு என்னத்தை கர்த்தர் எதிர்பார்க்கிறார்?

எரேமியா 9:24 கர்த்தரை அறிந்து உணர்ந்திருப்பதைக் குறித்தே மேன்மை பாராட்டுவது.

கனி

அறுப்போ மிகுதி வேலையாட்கள் குறைவு. வேலையாட்கள் மிகுதியாவதற்கு கனி கொடுக்க வேண்டும். மிகுதியாய் கனி கொடுத்தால் மிகுதியான வேலையாட்கள் கிடைப்பார்கள்.

1கொரிந்தியர் 9:16

சுவிசேஷத்தை பிரசங்கிப்பது
கடவுளைக் குறித்து சாட்சி சொல்வது அவருக்கு பிரியம்
ஆனால் சுவிசேஷம் பிரசங்கிப்பதை மேன்மை பாராட்டக் கூடாது.
ஏனென்றால் அது நம் மேல் விழுந்த கடமை.
சுவிசேஷத்தில் சாட்சியில் மேன்மை இருக்கலாம் உன் ஊழியத்தில் அல்ல.

அதே நேரத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதிருந்தால் நமக்கு ஐயோ.

யாக்கோபு 1:19 கேட்கிறதற்கு தீவிரம், பேசுவதற்கு பொறுமை, கோபிக்கத் தாமதமாயும் இருப்பது. நற்செய்தி ஊழியத்தில் சிறந்த கனிகள்.

ரோமர் 15:7

கடவுளுக்கு மகிமை உண்டாக
கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டதுபோல
ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்.

கிறிஸ்து நம்மை
பாவியென்று அறிந்தும்
ஏழையென்று அறிந்தும்
படிக்காதவன் என்று அறிந்தும்
கருப்பாக இருக்கிறான் என்று அறிந்தும்
அழகாய் இல்லை என்று அறிந்தும்
சாதியென்பதை தான் சொல்லித் தரவில்லை என்று அவர் அறிந்தும்... இப்படி எத்தனையோ இருந்தும் நம்மை ஏற்றுக் கொண்டது போல..!

கனி கொடுக்க நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியவை என்ன?

எபிரேயர் 13:1-7

1. சகோதர சிநேகம் நிலைத்திருப்பது
2. அந்நியரையும் உபசரிப்பது
3. தீங்கனுபவிப்வர்களை நினைத்துப் பார்ப்பது
4. அசுசிப்படாத தாம்பத்தியம்
5. பண ஆசையில்லாத போதுமென்ற எண்ணம்
6. கர்த்தர் எனக்குச் சகாயர் எனும் தைரியம் கொண்டிருப்பது
7. தேவவசனத்தைப் போதித்து நடத்தினவரையும் அவர்கள் நடக்கையின் முடிவையும் பார்த்து அவரை பின்பற்றுவது.

கிறிஸ்துவைப் பின்பற்றுவதே கிறித்தவ வாழ்வு:

யாக்கோபு 1:22 திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

ரோமர் 12:1-2 நம்மையே ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கும் புத்தியுள்ள ஆராதனை. அதில் மனம் புதிதாக மறுரூபமாகுவது.

மத்தேயு 28:19-20 புறப்பட்டுப் போவது, சீஷராக்குவது, ஞானஸ்நானம் கொடுப்பது, கட்டளைகளை உபதேசம் பண்ணுவது.

அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவியைப் பெறுவது, பூமியின் கடைசிபரியந்தம் அவருக்கு சாட்சிகளாயிருப்பது.

எபிரேயர் 11:6 விசுவாசத்தினால் அவர்மேல் பிரியம் வைத்து, அவரைச் சேர்ந்து அவர் உண்டென்று விசுவாசித்து, அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் பலனளிக்கிறார்.

சங்கீதம் 19:1-4 அவர் யார் நாம் யார் என்பதை உணர்வது.

என் வாயின் வார்த்தைகளும் இருதயத்தின் தியானமும் அவரது சமூகத்தில் பிரீதியாயிருக்க வேண்டும்.

ரோமர் 12:1-2 புத்தியுள்ள ஆராதனையை எதிர்பார்க்கிறார்.

கடவுளுக்கு பிரியமான பரிசுத்த சரீரம்
ஜீவபலியாக (உயிருடன் பலியாக ஒப்புக் கொடுப்பது)
எதற்காக இது என்றால் கடவுளின் இரக்கத்தை முன்னிட்டு

இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை
இந்த உலகத்திற்கு ஒத்துப் போகிற வேஷம் கொள்ளாமல்
கடவுளின் நன்மை, பிரியம், பரிபூரணமுமான சித்தம்
இன்னதென்று பகுத்தறியத்தக்க வகையில்
நமது மனம் புதிதாகிறதினாலே (புதிதாகும்படியாக)
மறுரூபமாக வேண்டும்

தீத்து 3:6-7 நம்பிக்கையின்படி சுதந்தரராகத்தக்கதாக எதிர்பார்க்கிறார்.

எந்த நம்பிக்கை?

கடவுளின் கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டு நித்திய ஜீவன் உண்டாகும் என்கிற நம்பிக்கை.

அப்படி சுதந்தரராக என்ன செய்கிறார்?

நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் அந்தப் பரிசுத்த ஆவியை நம்மேல் சம்பூரணமாய் பொழிகின்றார்.

எந்தப் பரிசுத்த ஆவி?

நமது இரட்சிப்பில் புதிதாக்குதலைப் பெற்றுத் தந்த மறுஜென்ம முழுக்கினோடுகூட அளிக்கப்பட்ட பரிசுத்த ஆவி.

அந்த இரட்சிப்பு எவ்விதமாய் பெற்றோம்?

நாம் செய்த நீதியின் கிரியைகளின் நிமித்தம் நம்மை இரட்சியாமல் அவரது இரக்கத்தின்படி இரட்சித்தார்.

அவரது இரக்கத்தினால், கிருபையினால், விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம். நாம் இரட்சிக்கப்பட்டதே கனி கொடுப்பதற்காகத் தான்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{>

12. கனியினால் நித்திய வாழ்வு

நித்திய ஜீவனை அடையவும் கனிதர வேண்டும். ஆண்டவர் எதிர்பார்க்கும் மிகுந்த கனிகளில் இதுவும் ஒன்று.

லூக்கா 10:25-37

நியாயசாஸ்திரி இயேசுவை சோதிக்கும்படி நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி நான் என்ன செய்ய வேண்டும்?

நியாயசாஸ்திரி என்பவன் யார்?

சனகரிப் சங்கத்திலிருந்தவர்களுக்கும் நியாய சாஸ்திரிகள் என்று பெயர். பின்னாளில் இவர்கள் ஆலோசனைக்காரர் என்றும் அழைக்கப்பட்டனர். பரிசேயர்களுக்குள் இருப்பவர்கள் (மத்தேயு 22:34-35)

நியாயசாஸ்திரி அவரிடம் கேட்ட கேள்வியில் நித்திய ஜீவனை அடைய என்ன செய்ய வேண்டும் என்று கேட்கவில்லை. சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்றே அவன் நினைத்தான். சொந்தமாக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான்.

அடைவது என்பது சென்று சேர்வது என்று அர்த்தம். சுதந்தரித்துக் கொள்வது என்று இவன் கேட்டது விலைகொடுத்து வாங்குவதற்குச் சமம்.

நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறது என்ன என்று கேட்டார்.

உபாகமம் 6:5 நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக. அவன் இதனை பதிலளித்தான்.

நீ வாசித்திருக்கிறது என்ன என்று அவனிடம் திரும்பக் கேட்டார் இயேசு. அவன் முழசச்சிந்தையோடும் என்று புதிதாக ஒன்றைச் சேர்த்துக் கொண்டே சொல்கிறான்.

கனி

லேவியராகமம் 19:18 உன்னில் அன்புகூருவது போல் பிறனிலும் அன்புகூருவாயாக. நான் கர்த்தர். இதனை மறந்தவனாயிருந்தான்.

இச்சம்பவத்தில் நியாயசாஸ்தியால் கேட்கப்படும் இரண்டு கேள்விகட்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நான்கு கேள்விகளை பதிற்கேள்விகளாய்க் கேட்கிறார்.

நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?
நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறது என்ன?
நீ வாசித்திருக்கிறது என்ன?
எனக்குப் பிறன் யார்?
மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்?
உனக்கு எப்படித் தோன்றுகிறது?

சீஷரிடம் கிறிஸ்து நித்திய ஜீவனை சுதந்தரிப்பது பற்றி சொன்னது என்ன?

மத்தேயு 19:29 என் நாமத்தினிமித்தம் வீட்டை, சகோதரரை, சகோதரிகளை, தகப்பனை, தாயை, மனைவியை, பிள்ளைகளை, நிலங்களை விட்டவன் எவனோ அவன் நூறத்தனையாய் அடைந்து நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்.

சீஷர்களிடத்தில் நித்திய ஜீவனை எவ்விதமாக சுதந்தரித்துக் கொள்ள முடியும் என்றும் சொன்னார்.

மாற்கு 10:30
நித்திய ஜீவனை மறுமையிலே அடையலாம் என்று சொன்னார்

லூக்கா 18:29-30
நித்திய ஜீவனை அடையாமற் போவதில்லை என்று சொன்னார்

கனி கொடுப்பது கிரியை என்றால் அந்தக் கிரியைகட்கும் பழைய உடன்படிக்கைக்கும் சம்பந்தம் உள்ளதா? தற்போது நமக்கு உள்ள கிரியைகள் எப்படிப்பட்டவையாக இருக்க வேண்டும்? பவுலடிகள் சொல்வது என்ன?

- ❖ நியாயப்பிரமாணத்தின் கிரியை: கலாத்தியர் 2:15-16
- ❖ நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினால் அல்ல கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினால் நீதிமான்கள்
- ❖ நியாயப்பிரமாணம் நமக்கு உபாத்தி: கலாத்தியர் 3:23-24 நாம் உபாத்திக்கு கீழானவர்களல்ல கிறிஸதுவை பற்றும் விசுவாசத்தினால் கடவுளின் புத்திரர்
- ❖ நியாயப்பிரமாணத்தில் கீழ்ப்பட்டவர்: கலாத்தியர் 4:1-7
- ❖ நியாயப்பிரமாணத்திற்கு அடிமையாய் இராமல் புத்திரனாக கிறிஸ்து மூலமாய்த் தேவனுடைய சுதந்தரனாய்
- ❖ நியாயப்பிரமாணத்தில் நீதியில்லை: கலாத்தியர் 5:1-6
- ❖ நியாயப்பிரமாணத்தில் நீதிமான்களாக விரும்பினால் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுவீர்.

நீதிமான் யார்? கிறிஸ்து என்ன சொல்கிறார்?

லூக்கா 16:15-16 மனுஷர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள். கடவுளோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுவது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது.

ரோமர் 10:3-4

தேவநீதியை அறியாமல் தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தத் தேடுகிறபடியால் தேவநீதிக்குக் கீழ்ப்படியாதிருக்கிறார்கள். விசுவாசிக்கிற எவனுக்கும் நீதி உண்டாகும்படியாக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார்.

லூக்கா 10:25-37 சமாரியனின் கதை இயேசு கிறிஸ்து சொன்ன பன்னிரண்டாவது உவமையாக லூக்கா நற்செய்தி நூலில் குறிப்பிடப்படுகிறது.

இதில் கனிகொடுப்பவனை சமாரியனாக சித்திரித்துக் காட்டுகிறார் இயேசு. ஒதுக்கப்பட்டவர்களாக கருதுகிறீர்களே அவர்களும் கனிகொடுக்கிறவர்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லாமல் சொன்ன உவமை.

சமாரியன் என்பவன் யார்? வேதாகமம் அவனது பூர்வீகத்தை எவ்விதம் விவரிக்கிறது?

இஸ்ரவேலை ஆண்ட உம்ரி இராஜா கட்டிய பட்டணத்திற்கு சமாரியா என்று பெயர் 1 இராஜாக்கள் 17:24
எப்பிராயிம் மனாசே கோத்திரத்திரத்தார் வாழ்ந்த இடத்திற்கு குடியேறியவரே அசீரியா இராஜாவால் பல தேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட சமாரியர் என்று பெயர் பெற்றனர்.
இவர்கள் கலப்பினத்தவராக இருந்தனர் 2 இராஜாக்கள் 17:24
சமாரியர்கள் இஸ்ரவேலருக்கு அந்நியர்களாக கருதப்பட்டனர்.

லூக்கா 17:18 பத்து குஷ்டரோகிகளில் ஒருவன் தான் ஆரோக்கியமானதைக் கண்டு திரும்பி வந்து உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினான். தேவனை மகிமைப்படுத்த இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனும் திரும்பிவரக் காணோமே என்று கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

சமாரியனின் கனிதரும் நேசம் எவ்விதமாக இருந்தது?

கண்டவுடன் மனதுருக்கம் லூக்கா 10:33
கிட்ட வந்து பார்த்தது 10:34
காயங்களில் எண்ணெய் திராட்ரசம் வார்த்தது 10:34
பின்பு காயங்களைக் கட்டியது 10:34
சுயவாகனத்தில் ஏற்றிக் கொண்டது 10:34
சத்திரத்திற்கு கொண்டு போனது 10:34
அவனை அங்கு பராமரித்தது 10:34

சமாரியனின் கனிதரும் இரக்கம் எவ்விதமாக இருந்தது?

மறுநாள் வரை அவனுடன் இருந்தது 10.35
சத்திரக்காரனிடம் இரண்டு பணத்தைக் கொடுத்தது 10:35
அவனை விசாரிக்கும்படி சத்திரக்காரனை வேண்டியது 10:35
அதிகமானாலும் செலவழிக்கும்படி சொன்னது 10:35
அந்தப் பணத்தையும் திரும்ப வரும்போது தானே கொடுப்பதாக உறுதியளித்தது 10:35

கள்ளரிடம் அடிபட்டு குற்றுயிரும் கொலையுயிருமாய் இருந்தவனை கண்டும் கவனியாது சென்றது ஆசாரியனும் லேவியனும். ஆனால் அடிபட்டபவனைக் கண்டு உதவி, கர்த்தரின் பார்வையில் மிகுந்த கனி கொடுத்தவன் சமாரியன்?

இந்த மூவரில் எவன் அடிபட்டவனுக்கு பிறனாயிருந்தான்?

லூக்கா 10:36

எனக்குப் பிறன் யார் என்று கேட்ட நியாய சாஸ்திரியின் கேள்விக்கு இயேசு பதிலளிக்கவேயில்லை. நியாய சாஸ்திரி யாருக்குப் பிறனாக இருக்க வேண்டும் என்று கேள்வியினாலே பதிலளித்தார்.

பாதிக்கப்பட்டவனுக்கு எவன் பிறனாயிருந்தான் என்றே கேட்டார்?

பிறரை நேசிப்பதினால் பிறனல்ல, நமது நேசத்தை பிறன் அறியும்போது பிறனாகிறோம்!

கருணைக் காட்ட நாம் பிறனை தெரிந்து கொள்வதல்ல, நம் கருணையை அடைந்தவன் நம்மைப் பிறனாய் தெரிந்து கொள்வது!

நமக்குப் பிறன் யார் என்பது முக்கியமல்ல!

நாம் யாருக்குப் பிறனாயிருக்கிறோம் என்பதே கனி தரும் வாழ்வு!

கிறிஸ்து உவமைகளால் கற்றுக் கொடுத்தவை அனைத்துமே கனி கொடுப்பதற்காகவே.

கனியின்றி ஜெயம் இல்லை. கனிகொடுக்கிறவர் ஜெயம் கொள்ள முடியும். ஜெயம் கொள்ளுகிறவர்கள் என்றால் கனிகொடுக்காது ஜெயிக்க முடியாது. அது உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{>

13. கனியின் கிரீடங்கள்

ஜெயம் கொள்ளுகிறவருக்கு கிரீடங்கள் என்றால் யார் ஜெயிக்க முடியும்? ஜெயிப்பது என்றால் உலகத்தை நாம் ஜெயிக்க வேண்டும் என்றே பொருள். அப்படி ஜெயிக்க அவனுக்கு முதலாவது தகுதி என்ன?

1 யோவான் 5:5 இயேசு கடவுளின் குமாரன் என்று விசுவாசிக்கிறவனே அன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?

1யோவான் 5:1 இயேசுவானவரே கிறிஸ்து என்று விசுவாசிக்கிற எவனும் தேவனால் பிறந்திருக்கிறான். பிறப்பித்தவரிடத்தில் அன்பு கூருகிற எவனும் அவரால் பிறப்பிக்கப்பட்டவனிடத்திலும் அன்பு கூருகிறான். இவனே உலகத்தை ஜெயிக்க முடியும் என்றும் தோன்றுகிறதல்லவா?

1கொரிந்தியர் 15:55-57 மரணத்தின் கூர் பாவம். பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம் (சட்டம்). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயம். ஏன்? சட்டமாகிய அதை நிறைவேற்றி முடித்தவர் கிறிஸ்து. ஆனால் நாம் இப்பொழுது புதிய உடன்படிக்கைக்குரிய கிறிஸ்துவின் இரத்தத்தைப் பெற்று கழுவப்பட்டிருப்பதால் மரணத்தை வெல்லக்கூடிய பாக்கியத்தை பெற்றிருக்கிறோம். அது இரண்டாம் மரணத்தை ஜெயிக்கிற ஜெயம் என்பதை நாம் அறியாதவர்கள் அல்ல.

அந்த ஜெயமானது நம்மால் உண்டாவது அல்ல. அதனைக் குறித்து நாம் மேன்மை பாரட்ட முடியாது அப்படி மேன்மைப் பாராட்டவும் கூடாது.

சங்கீதம் 20:7-8 சிலர் இரதங்களைக் குறித்தும், குதிரைகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள். நாங்களோ கர்த்தருடைய நாமத்தைக் குறித்தே மேன்மை பாராட்டுவோம். அவர்கள் முறிந்து விழுந்தார்கள். நாங்களோ எழுந்து நிமிர்ந்து நிற்கிறோம். நெரடியான யுத்தத்தைக் குறித்து இவ்வசனம் குறிப்பிட்டாலும் நாம் திருஷ்டாந்தமாய் அறிவது என்ன? உலகத்தை ஜெயிக்கிற ஜெயத்திற்கு நாம் ஆவியில் பலப்படவும் நம்மை வழிநடத்தவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்குத் தேற்றரவாளராக அனுப்பப் பட்டுள்ள ஆவியானவர் துணை நிற்கிறார். ஆவியானவர் உடன் இல்லாமல் கனிகொடுக்கும் ஜெயவாழ்வு இல்லை.

உபாகமம் 20:4 உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடே கூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும். ஜெயம் கொள்ள பெலன் தேவை. பெலன் கொடுக்க கடவுள் நமக்குத் துணை நிற்கிறார். பெலனின்றி ஜெயமும், ஜெயமின்றி கனியும் இல்லை..!

ஜெயம் என்பது பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார். சகரியா 4:6 நம்மை வழி நடத்தி நமது வாழ்வில் நம்மை பெலப்படுத்துகிற கிறிஸ்து இருந்தால் எல்லாவற்றையும் செய்ய பெலன் நமக்குண்டு.

ஜெயம் கொள்ளுகிறவன் பரலோகத்திற்குச் செல்வான் என்பதை விளக்க கிறிஸ்து சொன்ன உவமையைச் சிந்தித்துப் பார்ப்போம்.

ஜெயித்தது லாசருவா ஐஸ்வர்யவானா?

மத்தேயு 16:19-31

உவமையில் கூட ஜெயிக்கப் போகிறவனையே ஆண்டவர் பெயர் சொல்லி அழைத்தார். ஐஸ்வரியவானின் பெயரைக் குறிப்பிடாமல் லாசரு என்று ஏழைக்குப் பெயர் சொன்னார். பெயர் சொல்லி அழைக்க அவரது கிருபையும் இரக்கமும் தேவைப்படுகிறது.

ஜெயமாக காண்பது எவை?

உலகத்தின் ஐஸ்வர்யமல்ல - பரலோகத்தின் நிச்சயம்
விலையேறப் பெற்ற இரத்தாம்பரமல்ல - தரித்திரம்
சம்பிரமான வாழ்க்கையல்ல - பருக்களுடனான வியாதி
மரித்து அடக்கம் பண்ணப் படுவதல்ல - தேவதூதர்களால் கொண்டு போய் விடப்படுவது
பாதாளத்தின் வேதனையல்ல - ஆபிரகாமின் மடி

ஐஸ்வரியவானின் இருதயத்தையும் ஏழையான லாசருவின் இருதயத்தையும் நன்கே அறிந்தவர் கர்த்தர். லாசருவின் சகிப்பினையும் அறிந்தார். இம்மையில் கிடைக்காத கிரீடம் மறுமையில் லாசருக்கு கிடைக்கும்படிச் செய்தார் கர்த்தர்.

கனி

சோதனையை சகிக்கிற (ஜெயிக்கிற) மனுஷன் பாக்கியவான். சகிப்பதும் ஜெயிப்பதாகும். பரீட்சைக்கும் சோதனைக்கும் அதிக வித்தியாசம் உள்ளது.

There is difference between test and temptation

பரீட்சை என்பது பரீட்சித்துப் பார்ப்பது. ஆங்கிலத்தில் டெஸ்ட் என்றால் பரீட்சை. ஊதாரணமாக, டெஸ் டியூப் என்பதை நாம் சோதனைக் குழாய் என்றே தமிழ்ப்படுத்துகிறோம். பரிசோதனைக் கூடம் என்ற சொல்லை டெஸ்ட் லேப் என்று அழைக்கிறோம். டெஸ்ட் பேப்பர் என்பதை சோதனை வினாத்தாள் என்கிறோம்.

கடவுள் கொடுப்பது பரீட்சை சோதனை அல்ல. மொழிபெயர்ப்பில் சில தவறுகள் நமது வேதாகமத்தில் கூட உண்டு. ஆபிரகாம் சோதிக்கப்படவில்லை, கர்த்தர் அவரைப் பரீட்சித்துப் பார்த்தார்.

ஆங்கில மொழிபெயர்ப்பில் சோதனை என்பதை டெம்ப்டேஷன் என்றே குறிப்பிடப்படுகிறது. சோதனை என்பது குணத்தை அறிய அல்லது உள்ளத்தை அறிய. சரீரத்தின் மூலம் ஆவியினை அறிவது. ஆவியின் மூலம் சரீரத்தை அறிவது. சோதனை என்பது கடவுளால் அல்ல கடவுளால் அனுமதிக்கப்படுவது. உதாரணம் யோபுவிற்கு வந்த சோதனை.

யாக்கோபு 1:12-14

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்.
அவன் உத்தமனென்று விளங்கின பின்பு
கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு
வாக்குத்தத்தம் பண்ணின
ஜீவகிரீடத்தைப் பெறுவான்

நீதிமொழிகள் 24:11-12

மரணத்துக்கு ஒப்புவிக்கப்பட்டவர்களையும், கொலையுண்ணப் போகிறவர்களையும் விடுவிக்கக் கூடுமானால் விடுவி.
அதை அறியோம் என்பாயாகில்
இருதங்களைச் சோதிக்கிறவர் அறியாரோ?
உன் ஆத்துமாவைக் காக்கிறவர் கவனியாரோ?

அவர் மனுஷருக்கு அவனவன் கிரியைக்குத் தக்கதாகப் பலனளிப்பாரோ?

பரலோகத்தில் அல்லது ஜெயம் கொள்ளுகிறவர்கள் அல்லது கிறிஸ்துவின் வருகையில் நாம் பெறவிருக்கும், ஐந்துவிதமான கிரீடங்களை புதிய ஏற்பாட்டில் பார்க்கிறோம்.

- அழிவில்லாத கிரீடம்
- மகிழ்ச்சியின் கிரீடம்
- நீதியின் கிரீடம்
- மகிமையின் கிரீடம்
- ஜீவகிரீடம்

இவைகள் விசுவாசிகளுக்கு அதாவது இரட்சிப்பைப் பெற்றுக் கொண்டு அதனைக் காத்துக் கொள்கிறவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்படும்.

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாகவும், இரட்சிக்கப்படுகிற நமக்கோ தேவ பெலனாக இருக்கிறது 1கொரிந்தியர் 1:18.

கிரீடம்: 'ஸ்டெ.:.பனோஸ்'. "ஸ்டீ.:.பன்" கிரேக்க மூலவார்த்தை. 'Stephanos' என்பதற்கு இராஜ முத்திரை அல்லது அடையாளம் என்று அர்த்தம்.

- பொதுவாக விளையாட்டுப் போட்டிகளில் அளிக்கும் பரிசு
- அல்லது வெற்றியாளரை கௌரவப்படுத்த வழங்குகின்ற அடையாளத்திற்கு இந்தப் பொருள் விளங்கும்.
- இங்கு உண்மையும், உத்தமுமாய் வாழ்ந்து கர்த்தருக்குள் நித்திரையடைந்து பரலோகத்திற்குள் பிரவேசிக்கும் பாக்கியம் பெற்றவர்களுக்கு கர்த்தரால் கொடுக்கப்படும் பரிசுப்பொருளாக இதனைப் புதிய ஏற்பாட்டில் நாம் காண்கிறோம்.
- 1கொரிந்தியர் 4:5

<u>அழிவில்லாத கிரீடம்</u> (ஜெயங்கொள்கிறவரின் கிரீடம்). தமது ஆவி ஆத்துமா சரீரத்தை அடக்கி ஆள்பவர், இச்சைகளை விலக்கி நிற்பவர்கள்.

கனி

1. 1கொரிந்தியர் 9:24-25 பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் அழிவுள்ள கிரீடத்தைப் பெறுவதற்கு தாங்கள் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாய் இருப்பார்கள்.
2. நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.
3. மத்தேயு 6:19 பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். திருடர் கன்னமிட்டுத் திருடவும், பூச்சியும் துருவும் கெடுக்கும் பொக்கிஷங்களை பூமியிலே சேர்த்து வைக்கவும் வேண்டாம்
4. 1பேதுரு 1:4-5 பரலோகத்தின் வாடாத சுதந்திரம்

<u>மகிழ்ச்சியின் கிரீடம்</u> (ஊழியரின் கிரீடம்) - சுவிசேஷகர்கள், பிரசங்கியார், உபதேசியர், ஆசிரியர் போன்றவர்கள்

1. 1தெசலோனிக்கேயர் 2:19 எனக்கு நம்பிக்கையும் சந்தோஷமுமாக விசுவாசிகளான நீங்கள் தான் மகிழ்ச்சியின் கிரீடமாயிருப்பீர்கள் என்று பவுலடிகளார் சொல்கிறார்.
2. யார், யாருக்கு? சுவிசேஷத்தை விதைத்தவர்கள், சபைகளை எழுப்பியவர்கள், ஆத்தும ஆதாயம் செய்தவர்கள், இயேசு கிறிஸ்துவின் வருகையின் போது, மகிமையும் சந்தோஷமும் அடையும்படியாக, விசுவாசிகளே மகிழ்ச்சியின் கிரீடமாக இருப்பார்கள்.
3. அது மாத்திரமல்ல, நாம் நமது வாழ்வில் அடைகின்ற, பெறுகின்ற மகிழ்ச்சியே நமக்கு கிரீடமாகத்தான் இருக்கும்.
4. பிலிப்பியர் 4:4 கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாய் இருங்கள் என்பதை மறுபடியும் சொல்வதாக அறிவுருத்துகிறார் பவுலடிகளார்.

<u>நீதியின் கிரீடம்</u> (விசுவாசிகளின் கிரீடம்) இயேசுவை ஏற்றுக்கொண்டு அவர்மேல் கிரியையுள்ள விசுவாசம் வைத்திருப்பவர்கள், கிறிஸ்துவின் வருகையின் நாளுக்காக காத்திருப்பவர்கள்

2 தீமோத்தேயு 4:8
அவர் பிரசன்னமாகுதலை விரும்பி நல்ல போராட்டத்தைப் போராடிய எனக்கு மட்டுமல்ல,

அப்படி போராடி ஓட்டத்தை முடித்து விசுவாசத்தை காத்துக்கொண்டு அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் தந்தருள்வார்.

எப்போது? அவர் வரும் நாளிலே! எப்படி வரும்போது? நீதியுள்ள நியாயாதிபதியாக வரும்போதே. ஆனால் அது தயாராக வைக்கப்பட்டுள்ளது என்பதை பவுல் அறிந்து கொண்டது எப்படி? நல்ல போராட்டத்தைப் போராடி வாழ்வில் விசுவாசத்தைக் காத்துக்கொண்டு முடித்ததால்

இரட்சகர் வர எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டும். கிறிஸ்து எங்கிருந்து வருவார் அறிவோமா? நம்முடைய குடியிருப்போ பரலோகத்தில் இருக்கிறது என்பதை விசுவாசித்து அறிந்தால் கடவுள் அங்கிருந்து நம்மை அழைத்துச் செல்ல வருவார் என்பதை அறியலாம். சுயநீதியை உடையவர்களுக்கு நீதியின் கிரீடம் கிடையாது. அது பெருமை, இருமாப்பை, தாழ்மையின்மையை கொடுத்து உலகத்தின் மேலே நம்மை நாட்டமுடையவராக்கும்.

லூக்கா 18:13-14 நீதிமானாக்கப்பட்டு வீடு திரும்பியது யாரென்று இந்த உவமையினால் அறிகிறோம்.

நாம் எப்படி இருக்க வேண்டும்?

பிலிப்பியர் 3:20 நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்றும் இரட்சகர் வர எதிர்பாத்துக் கொண்டிருக்கிறோம்.

அந்த எதிர்பார்ப்பின் காலம் தான் கனிகொடுக்கும் காலம். கனி கொடுப்பதில் பலன்களையோ பரலோகத்தில் சேர்த்துவைக்கிறோம். அதற்கு கொடுக்கப்படும் பரிசுகளே கிரீடங்களாகும். கனியில்லாமல் கிரீடமும் இல்லை.

<u>மகிமையின் கிரீடம்</u> (பெரியோரின் கிரீடம்) போதகர், தலைவர், ஆசிரியர், மூப்பர், மேய்ப்பரைப் போன்று வழிநடத்துகிறவர்கள்.

1பேதுரு 5:4 பிரதான மேய்ப்பர் கிறிஸ்து வெளிப்படும்போது மகிமையின் கிரீடம் பெறுவோம். மகிமை எனும் வார்த்தை

கடவுள் ஒருவருக்கே சார்ந்தது. கடவுளின் குணம், செயல் யாவும் அவரது மகிமையைக் குறித்தாகவே இருக்கும்.

1. அவரது சாயலும் மகிமை என்பதே.
2. யாத்திராகமம் 33:18 உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும் என்று மோசே வேண்டினார்
3. லூக்கா 9:29,32 மறுரூப மலையில், கிறிஸ்துவுடன் காணப்பட்ட மோசே எலியா இரண்டுபேரும் மகிமையோடே காணப்பட்டு அவருடனே சம்பாஷணை பண்ணினார்கள்.

   பேதுருவும் அவனோடிருந்தவர்களும் கிறிஸ்துவின் மகிமையையும் அவரோடே நின்ற அவ்விரண்டு பேரையும் கண்டார்கள்.
4. அப்போஸ்தலர் 7:55-56 தேவனுடைய மகிமையையும் தேவனுடைய வலது பாரிசத்தில் இயேசுவானவர் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான்.
5. ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டபோது, அவர் வானத்தை ஏறெடுத்துப் பார்க்கும்போது தேவனுடைய மகிமையைக் காண்கிறதாக வாசிக்கிறோம்

கர்த்தர் தமது மகிமையைக் குறித்து சொல்வது என்ன?

1. ஏசாயா 42:8
2. நான் கர்த்தர், இது என் நாமம். என் மகிமையை வேறு ஒருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்
3. அவர் மட்டுமே துதிக்குப் பாத்திரர் என்பதை அறிகிறோம்.
4. ரோமர் 8:18
5. இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல

கிரீடத்தை கொடுக்கப் போகிறவர் உலகில் எப்படி வாழ்ந்தார்?

1. இடமில்லா சத்திரம் தொடங்கி இடமளித்த கல்லறை வென்றார்
2. தமக்காக அற்புதங்களை செய்யாமல் மற்றவருக்காக கணக்கில் அடங்காமல் செய்தார்

3. தச்சனாக வாழ்ந்தார், குருவாக வெளிப்பட்டார்
4. உண்டார் நடந்தார் உறங்கினார் அழுதார்
5. இரங்கினார் கோபப்பட்டார் மன்னித்தார் மகிமை அடைந்தார்
6. Clarity from cradle to grave

<u>ஜீவ கிரீடம்</u> (இரத்த சாட்சியின் கிரீடம்) - கடவுளுக்காய் வாழ்ந்து இரத்த சாட்சியாய் மரிக்கிறவர்கள், கடவுளுக்காக உயிர்த்தியாகம் செய்கிறவர் மற்றும் உபத்திரவம் பாடுகளை அனுபவித்தவர்கள்.

1. வெளிப்படுத்தின விசேஷம் 2:10 நாம் மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவ கிரீடத்தைப் பெறலாம். இந்தக் கிரீடம் அனைவருக்கும் தான் ஆனால் உபத்திரவப்படுகிறவர்களுக்கு மேலும் சிறப்பாய் வழங்கப்படும். அப்படி உபத்திரவத்தின் பாடுகளைக் குறித்து எதற்கும் பயப்படாமல் இருந்தால் யார் வேண்டுமானாலும் இந்த கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.
2. வேதத்தின் அடிப்படையில் பார்த்தால், ஜீவன் என்கிற வார்த்தை கடவுளுடன் நாம் கொண்டுள்ள உண்மையான உறவைப் பொருத்தே உள்ளது.
3. ஜீவ அப்பமும் ஜீவத்தண்ணீரும் நானே என்று சொன்ன இயேசு கிறிஸ்து சொல்கிறார்
4. நல்ல மேய்ப்பனாகிய நானோ அவைகளுக்கு (எனக்கு செவி கொடுக்கும் ஆடுகள்) ஜீவன் உண்டாயிருக்கவும், அந்த ஜீவன் பரிபூரணப்படவுமே வந்தேன். யோவான் 10:10
5. நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் 1யோ 2:25

யாக்கோபு 1:12 ஜீவகிரீடம் அனைவருக்கும் உண்டு. அந்த அனைவர் யார்? சோதனையை சந்திக்கிறவர்கள், கர்த்தரிடம் அன்பு கூருகிறவர்கள். கர்த்தரிடம் யார் அன்பு கூற முடியும்? சோதனையை சகிக்கிற மனுஷனான பாக்கியவான். சகித்தால் மட்டும் போதுமா? உத்தமனென்றும் விளங்க வேண்டும்.

1யோவான் 5:3 அந்த அன்பினை கடவுளிடம் நாம் எப்படி வெளிப்படுத்துவது? அந்த அன்பை அவரிடம் எப்படி செலுத்தி அவருடைய கற்பனைகளைக் கைகொள்ள

வேண்டும். கற்பனைகள் எவ்விதம் இருக்கும்? அவைகள் பாரமானவைகள் அல்ல.

மத் 11:29-30 அவர் தமது கற்பனைகளை நுகம் என்கிறார். என் நுகம் மெதுவாயும், சுமை இலகுவாயும் இருக்கும் என்கிறார். நம் ஆத்துமாவிற்கு இளைப்பாருதல் கிடைக்கும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? அவரது நுகத்தை ஏற்றுக் கொண்டு அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டும். ஏன் அவரிடமே கற்றுக் கொள்ள வேண்டும்?

எரேமியா 6:16 வழிகளிலே நின்று பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடவுங்கள். அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாருதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்கிறார். நானே வழியென்று இயேசு கிறிஸ்து சொல்கிறார் யோவான் 14:6.

நமது இரட்சகரான இயேசு கிறிஸ்து சாந்தமும் மனத்தாழ்மையாய் இருக்கிறார். இளைப்பாருதல் என்பது ஓய்வும் சமாதானமும் கொள்வது. இன்னல், போராட்டம், துன்பம், தொல்லை, தோல்வி, சோதனை, கவலை போன்றவை சந்தித்தாலும், அவைகளிலிருந்து விடுதலை பெறுவது, அல்லது அதனோடு கொண்டுள்ள மகிழ்வும் சமாதானமும் இளைப்பாருதலும் ஆகும். அவர் உலகம் தராத சமாதானத்தை நான் தருவேன் என்றார். அதுவரை நமக்கொரு தேற்றரவாளனை கண்டித்த உணர்த்தி கனிகொடுக்க வைப்பார்.

நாம் முதலாம் மரணத்தை கிறிஸ்துவுக்குள் அடைந்தபின் மற்றுமொரு இளைப்பாருதலை அடைவோம். அந்த நாளை சந்திக்கும் வரை அல்லது அவரது வருகை வரை நாம் என்ன செய்ய வேண்டும்?

1. கிரீடத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்தக் கொள்ளாதபடிக்கு உனக்கு உள்ளதைப் பற்றிக் கொண்டிரு, வெளிப்படுத்தின விசேஷம் 3:11.
2. செய்கைகளின் பலனைப் பெற எச்சரிக்கை 2யோவான் 1:8 உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல் பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

3. பலனை அடைந்து தீர்ந்துவிடாதபடி இருக்க வேண்டும் மத்தேயு 6:2 தர்மஞ்செய்யும்போது மனுஷரால் புகழப்பட உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அப்படியாகச் செய்கிறவர்கள் தங்கள் பலனை அழைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

நமது பலனைப் பெற முதலில் பலன் கொடுக்கும் கனிகளைக் கொடுக்க வேண்டும். கனிகொடுக்கும் போது ஜெயம் கிடைக்கும். ஜெயம் கிடைப்போருக்கே கிரீடங்கள் கிடைக்கும்.

ஜெயம் கொள்ளுகிறவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள் உண்டு. ஆனால் அவைகள் அநேகமாக வெளிப்படுத்தின விசேஷத்தில் மட்டுமே சொல்லப்படுகிறது. ஏனென்றால் அவரது வருகைக்குப் பின்பே எல்லா பரிசுகளும்..!

வெளிப்படுத்தின விசேஷம் 2:7 2:11 2:17 2:27 3:5 3:12 3:21 21:7

1. ஜீவவிருட்சத்தின் கனியைக் கொடுப்பார்
2. இரண்டாம் மரணத்தில் சேதப்படுவதில்லை
3. மறைவான மன்னா, பெயரெழுதிய குறிக்கல், புதிய நாமம்
4. ஜாதிகளின் (தேசங்களின்) மேல் அதிகாரம்
5. ஜீவபுஸ்தகத்திலிருந்து நமது நாமம் கிறுக்கிப் போடப்படுவதில்லை
6. தேவனுடைய ஆலயத்தின் தூணாக்கப்படுவது
7. சிங்காசனத்தில் கிறிஸ்துவுடன் உட்காருவது
8. எல்லாவற்றையும் சுதந்தரித்து அவரது குமாரனாவது

ஜெயம் என்பது கடவுளுக்கு எதிராய் உலக காரியங்களை, அவர் நாமத்தின் நிமித்தம் நாம் அடையும் உபத்திரவங்களை ஜெயிப்பது. சோதனைகளை நாம் உபத்திரவங்களாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவை நிரந்தரமல்ல. அதனுடைய முடிவு என்ன? எதினால் எதற்காக அந்த சோதனை?

கனி

1பேதுரு 1:5
கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப் பட்டிருக்கும் இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினால் காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்த சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.

1பேதுரு 1:6
இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப் படுகிறீர்கள். என்றாலும் துன்பப்பட வேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக் காலம் பலவிதமான சோதனைகளிலே துக்கப்படுகிறீர்கள்.

1பேதுரு 1:7
அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

ஜெயம் கொள்கிறவன் யார்? எதை ஜெயிக்க வேண்டும்?

* 1யோவான் 4:7-8
* ஒருவரிலொருவர் அன்பாய் இருக்கக் கடவோம்.
* அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது.
* அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து
* அவரை அறிந்திருக்கிறான்
* அன்பில்லாதவன் தேவனை அறியான்
* 1யோவான் 5:4-5
* தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்
* நம்முடைய விசுவாசமே
* உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்

நமக்கு முன் உலகத்தை ஜெயித்தவர் என்ன சொல்கிறார்?

* யோவான் 16:33 உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன்
* 2கொரி 2:14 கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் வெற்றி சிறக்க பண்ணி எல்லா இடங்களிலேயும் அவரை

அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவன்

மத்தேயு 27:29 நாம் இவ்விதமாய் கிரீடங்களைப் பெற அவர் முள் முடியான கிரீடத்தை தனது சிரசில் அணிந்தார் என்பதை நாமறிவோம்.

- இந்த கிரீடங்களை நாம் என்ன செய்வோம் என்று ஒரு கேள்வி எழுகிறதல்லவா.
- வெளிப்படுத்தல் 4:10-11 தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து, கர்த்தாவே, தேவரீர், மகிமை, கனம், வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராய் இருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம் சித்தத்தினாலே அவைகள் உண்டாகி, இருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாய் இருக்கிறது.
- 1கொரிந்தியர் 15:55-58 ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப் பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

யாக்கோபு 1:14-15 ஜெயங்கொள்ளாதபடிக்கு யாரையும் சோதனையானது இழுப்பதில்லை

- இச்சையானது கர்ப்பந்தரிக்கிறது
- அந்த கர்ப்பத்திலிருந்து பாவம் பிறக்கிறது
- அந்த பாவம் பூரணமாகும்போது
- மரணத்தைப் பிறப்பிக்கிறது
- அந்த மரணம் இரண்டாம் மரணத்தை நிறைவேற்றும்

யோர்தானிலிருந்து வனாந்தரத்திற்கும், வனாந்தரத்திலிருந்து கலிலேயாவிற்கு எவ்விதம் இயேசு சென்றார்

இயேசுவானவர் சோதனைக்குள் பிரவேசித்த போது (லூக்கா 4:1) வனாந்தரத்திற்கு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து ஆவியானவராலே கொண்டு செல்லப்பட்டார். லூக்கா 4:14 ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயா திரும்பினார்

கனி

ஏசாயா 55:7 துன்மார்க்கன் தன் வழியையும் அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு கர்த்தரிடத்தில் திரும்பக் கடவன். அவர் அவன் மேல் மனதுருகுவார். நம்முடைய கடவுளிடத்திற்கே திரும்பக் கடவன். அவர் மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார்.

ஜெயங்கொள்ளுகிறவர் பாவத்தில் விழாமல் இருப்பதற்கு உத்தரவாதம் இல்லை. 1யோவான் 1:19 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்.

ரோமர் 8:38-39 கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிக்கமாட்டாது

- மரணம் : மரணபயம், மரணத்தினால் தப்பலாம் என்ற எண்ணம்
- ஜீவன் : சுயம், இன்றைய வாழ்வு, நிரந்தரம் என்ற எண்ணம்
- தேவதூதர் : நற்காரியங்கள், நல்ல சக்திகள்
- அதிகாரங்கள் : சத்ருவின் வல்லமை, உபத்திரவம், சோதனை
- வல்லமைகள் : அரசாங்கம், கடவுளின் ராஜ்யத்துக்கு எதிரான

ரோமர் 8:37 இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் இருக்கிறோம்

- நிகழ்காரியங்கள் : இன்று நடக்கின்ற நன்மை தீமை
- வருங்காரியங்கள் : நாளை என்ன எனும் பயம், சந்தேகம்
- உயர்வு : இன்றைய செல்வம், பதவி, புகழ்
- தாழ்வு : இன்றைய குறைவு, வறுமை, தனிமை
- வேறெந்த சிருஷ்டி : எதுவும், எந்த படைப்புகளும்

கனி கொடுக்கிறவர்களுக்கே ஜீவ விருட்சத்தின் கனி..! அந்த பாக்கியத்தைப் பெற கர்த்தரின் கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

வெளிப்படுத்தல் 22:14 ஜீவ விருட்சத்தின்மேல் அதிகாரம் உள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் (அநேக வாசஸ்தலம்) நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவரது கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

* ஜீவவிருட்சத்தின் கனி
* புதிய நாமம்
* நமது புதிய நாமம் அறிக்கையிடப்படும்
* கிறிஸ்துவின் சிங்காசனத்தில் அவருடன் உட்காரும் அருள்
* இரண்டாம் மரணமில்லை
* ஜாதிகளின் (தேசங்கள்) மேல் அதிகாரம்
* தேவனுடைய ஆலயத்தில் தூண்
* வெளிப்படுத்தல் 21:7 அவர் தேவன் நான் குமாரன்

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

14. கனியெனும் திருப்பணி

திருப்பணி – மனுகுலத்துக்கான சேவை

Mission – service to humanity

மனுக்குலத்துக்கான சேவையும் கனி கொடுப்பதே!

மனுக்குலத்துக்கான சேவை நீதிமானுக்குரியது. நீதிமான் யார் என்றால் வெள்ளாடும் செம்மறியுமாய் பிரிக்கும் போது செம்மறியாய் இருப்பவன். இடது புறம் நில்லாமல் வலது புறம் நிற்பவன். மிகச் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். கனி கொடுக்கிறவர்கள் வலது புறம் பிரித்தெடுக்கப்படும் செம்மறி ஆடுகளான நீதிமான்கள். மத்தேயு 25:40

ஏசாயா 42:6-7 நீர் குருடருடைய கண்களைத் திறக்கவும், கட்டுண்டவர்களைக் காவலிலிருந்தும், இருளில் இருக்கிறவர்களைச் சிறைச்சாலையிலிருந்தும் விடுவிக்கவும், கர்த்தராகிய நான் நீதியின்படி உம்மை அழைத்து, உம்முடைய கையைப் பிடித்து, உம்மைத் தற்காத்து, உம்மை ஜனத்திற்கு உடன்படிக்கையாகவும் ஜாதிகளுக்கு (தேசங்களுக்கு) ஒளியாகவும் வைக்கிறேன்.

1 கொரிந்தியர் 1:18-23

நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள். ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார். பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார்.

திருச்சபை என்பதன் கிரேக்க பதம் “எக்ளேசியா” (Eklaysia). “Ek”: “வெளியே”, “Laysia”: அழைக்கப்பட்டவர்கள். திருச்சபை என்பது கடவுளின், கடவுளுக்குப் பணியாற்ற வெளியே அழைக்கப்பட்டவர்கள். A called out community.

திருப்பணி என்பது திருச்சபைக்கு வெளியேயும் குறிப்பாக சமுதாயத்திற்கு உள்ளும் செல்ல வேண்டும். சமுதாயம் என்பது ஒருமைப்பாடு. ஒருமனத்தின் ஆவியில் சென்று பணிபுரிய வேண்டிய இடம். சமுதாயத்தில் அல்லது சமூகத்தில் பிரிவினையின் ஆவியிருந்தால் நாம் கிறித்தவர்கள் அல்ல. திருப்பணி எனும் கனிகொடுக்க தகுதியற்றவர்களாக இருப்போம்.

திருச்சபை தெருச்சபையாக மாறவேண்டும். அப்போதுதான் திருப்பணி மனுக்குலத்திற்கு சேவை செய்யும் விதமாகப் பயன்படும்.

திருப்பணி மனுக்குலத்திற்கு பயன்படும் வகையில் அமைய வேண்டுமானால் நாம் மூன்று காரியங்களை கருத்தில் கொள்ளவேண்டும்.

1. திருப்பணியில் முதன்மையாய் பங்கேற்பு
2. திருப்பணியில் முழுகிட பரிசோதிப்பு
3. திருப்பணியில் முழுமையாய் பங்களிப்பு

முதன்மையாய் பங்கேற்பு

திருப்பணி என்பதை நாம் ஏதோ சுவிசேஷம் சொல்வது மட்டுமே என்ற எண்ணத்தைக் கொண்டவராக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். டிராக்ட்ஸ் குடுக்கணும், தெருப்பிரசங்கம் பண்ணணும், போதிக்கணும், சாட்சி சொல்லணும், முழு நேரத்தையும் செலவிடணும், இப்படிப் பல கருத்துக்களுடன் இருக்கும்போது திருப்பணி மனுக்குலத்திற்கு சேவை செய்ய பயன்படும் விதத்தில் அமையாது.

இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் அவர் செய்த அற்புதங்கள் அனைத்துமே மனுக்குலத்திற்கு சேவை செய்யும் விதமாக அமைந்திருப்பதை நாம் வேதத்தில் பல இடங்களில் பாக்கிறோம். அற்புதங்களை செய்த ஆண்டவர் ஒருவரையும் தன்னை பின்பற்றும்படி வற்புருத்தவில்லை. அவர்களாகவே பின்சென்றார்கள் என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம்.

அப்படி நாமும் நமது திருப்பணியின் மூலமாக அவர்களை கிறிஸ்துவுக்குள்ளாக அழைக்கமுடியும். சமூக சேவையை

வலியுறுத்தும் வகையில் இயேசுகிறிஸ்து செய்த அற்புதங்களில் முதன்மையை கடைபிடித்தார். ஆண்டவர் ஆராதனை முடியும்வரை காத்திராமல் அந்நாளில் நன்மை செய்வதே பிதாவிற்கு விருப்பமான ஆராதனையாக இருக்கும் என்று துணிந்து ஓய்வுநாளில் கைசூம்பிய ஒருவனை குணமாக்கினார்.

மத்தேயு 12:9-14 அவர் பலரை பலமுறை ஓய்வுநாளில் குணப்படுத்தியுள்ளார். லூக்கா 13:10-17 லூக்கா 14:1-6 யோவான் 5:1-17

அதற்கு நாம் முதலில் திருப்பணியில் பங்கேற்கவேண்டும். எத்தனையோ சமயங்களில் பள்ளிகளில், கல்லூரியில், அலுவலகங்களில் பலவிதமான போட்டிகளில் பங்கேற்க முதலில் நமது பெயரை பெயர்பட்டியலில் கொடுத்துவிடுகிறோம். ஆனால் திருப்பணி என்று வரும்போது பலவிதமான தயக்கங்கள், சாக்குபோக்குகள் சொல்லி பின்வாங்கிப் போகிறவர்களாக இருக்கிறோம்.

நமது தகுதியினை நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறோம். மோசே கர்த்தரிடம் தனது பலவீனத்தை சொன்னபோது ஆண்டவர் ஏற்றுக்கொண்டாரா? இல்லை திக்கு வாயை குணப்படுத்தினாரா? அதுவும் இல்லை. அங்கே மோசேயை அந்த குறையோடு தான் திருப்பணிக்கு அனுப்பினார். திருப்பணிக்கு முதன்மையாய் பங்கேற்க வேண்டுமானால் கீழ்படிதலும் அவசியமாகிறது.

அதுமட்டுமல்ல, ஆண்டவர் முதற் பலன்களைத் தான் எதிர்பார்க்கிறார் என்று வேதத்திலே வாசித்திருக்கிறோம். மார்க்கெட்டுக்கு போகும் போது கடைசியாக எதை வாங்குவோம். தக்காளியைத் தானே? ஏனென்றால் அது நசுங்கிப் போய்விடும் என்ற பயத்தினால். ஆனால் திருப்பணி என்று வரும்போது நல்ல வயதான பின்பே பங்கேற்கும் மனப்போக்கில் இருந்து வருகிறோம். நாம் முதன்மையாய் பங்கேற்கவேண்டும்.

உடலால் மனதால் இந்த சமுதாயத்தில் நம் சக மனிதர்கள் காயப்பட்டு இருக்கிறார்கள். அவர்களை அணுகுவதும் திருப்பணிதான். ராமேஸ்வரத்திற்கு மிஷன்டிரிப்பிற்காக சென்றிருந்தேன். அங்கு தன்வாழ்க்கையை திருப்பணிக்காக

அர்ப்பணித்து கொண்டிருக்கும் எனது ஆவிக்குரிய அக்கா டாக்டர் மல்லிகா சிதம்பரம் அவர்களைச் சந்தித்தேன். அவர் ஊழியத்திற்கு முதன்முதலாக சென்றபோது டிராக்ட்ஸ்களை நோயாளிகளுக்கு நேரிடையாக கொடுக்காமல் அதனை மருந்துச் சீட்டாக உபயோகப்படுத்தியதாக சாட்சி சொன்னார். இன்றும் ராமேஸ்வரத்தில் கர்த்தரின் பெரிதான அழைப்பை ஏற்று, விதவைகள் திக்கற்றப் பெண்கள் மத்தியில் சிறப்பான ஊழியத்தை அவர் மேற்கொண்டு வருகிறார்.

அப்படியே திருப்பணி மனுக்குல சேவையாக மாறவேண்டுமானால் நாம் அதனை முதன்மையாக்கிப் பங்கேற்க வேண்டும்.

முழுகிட பரிசோதிப்பு

திருப்பணியில் நாம் மூழ்கிட வேண்டுமானால் நம்மை நாமே பரிசோதித்துப் பார்க்கும்படியான கட்டாயத்திலிருக்கிறோம். நமக்கு முதலில் தேவை முழுமையான மனமாற்றம். திருப்பணி மனுக்குலத்திற்கான சேவையாக இருக்க வேண்டுமானால் நாம் நம்மை தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஊருக்கு உபதேசமாக இல்லாமல் நாம் அதனைக் கடைபிடிக்கிறவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது. நாம் மனமாற்றம் பெறாமல் பிறரது மனமாற்றத்தை மட்டும் எதிாபார்ப்பது கிறிஸ்தவ போதனைக்கு எதிரானதாகும்.

1 கொரிந்தியர் 1:18-31 மனிதனின் சுயபெருமைக்குச் சிறிதும் இடமில்லை ஏனென்றால் மனிதனின் பலவீனத்தில்தான் கடவுளின் வல்லமை அதிகமாய் விளங்குகிறது.

பெருமை, வகுப்புவாதம், அடுத்தவரை அவமதித்தல், பாரம்பரிய பெருமை, தீண்டாமை, பிறர் திறமைகளை குறைத்து மதிப்பிடுதல் போன்ற செயல்களிலிருந்து நாமே மீட்பை பெறாமல் இருந்தால் திருப்பணிக்கு செல்ல தகுதியற்றவர்களாகி விடுவோம். ஒவ்வொரு நாளும் நம்மை நாமே பரிசோதித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். கனிகொடுக்க சுயபரிசோதனை மிக அவசியம்.

பரிசோதிப்பது என்றால் நம்மை நாமே எப்படி செய்துகொள்ள முடியும்? நமக்கு வாழ்வில் ஏற்படும் சூழ்நிலைகள் அந்த நல்ல வாய்ப்பினை கொடுத்துக் கொண்டே இருக்கும். பாஸ் பண்ணி விட்டேன் என்று எப்போழுது சொல்கிறோம். நாம் பரீட்சை எழுதினதற்கு அப்புறம் தானே?

ஒரு ஊழியக்காரர் பஸ்ஸில் போகும் போது பயணச் சீட்டைக் கேட்டு வாங்கினார். அப்போது மீதம் சில்லரை கொடுத்த பஸ் கண்டக்டர் ஐந்து ரூபாயை அதிகமாகக் கொடுத்து விட்டார். ஊழியக்காரருக்கு மனதில் சோதனையின் போராட்டம். அதை திருப்பிக் கொடுக்கலாமா வேண்டாமா? ஐந்து ரூபாய் தானே? எத்தனை நாட்கள் நாமும் ஏமாந்திருக்கிறோம்? என்ற சாத்தானின் உதவிக் கேள்விகளால் திருப்திபட்டவராய் அமைதியாக அந்த சிறிய பணத்தைக் கண்டக்டரிடம் திருப்பித் தராமல் இருந்து விடுகிறார்.

பரிசுத்த ஆவியானவர் கண்டித்து உணர்த்த ஆரம்பித்து விடுகிறார். தவறை உணர்ந்தவராகத் தான் இறங்க வேண்டிய இடம் வந்த போது கண்டக்டரிடம் ஐந்து ரூபாயைத் திருப்பித் தருகிறார். அப்போது அந்தக் கண்டக்டர் அவரிடம் சொன்னாராம். கிறித்தவர்கள் கடவுளுக்குப் பயந்தவர்கள் அவர்கள் தவறு செய்ய அஞ்சுவார்கள் என்று என் மனைவி சொல்வது உண்டு. அதை பரிசோதித்துப் பார்க்கத் தான் இப்படி நானாகவே ஐந்து ரூபாயை அதிகமாகக் கொடுத்தேன். என்னை மன்னியுங்கள் ஐயா, என் மனைவி சொன்னது சரிதான் என்றார்.

பஸ்ஸை விட்டு இறங்கியதும் அந்த ஊழியர் நடைபாதையில் அமர்ந்து கண்ணீர் விட்டு மனங்கசந்து தன்னைப் பாவத்தில் விழாதபடிக்குத் தப்புவித்த கர்த்தருக்கு நன்றி சொன்னார்.

கனி கொடுக்க முற்படுகையில் சோதனை வரும். கர்த்தருக்குக் கீழ்படியுங்கள் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். யாக்கோபு 4:7 எதிர்த்து நிற்பது என்றால் கர்த்தருக்கு நாம் கீழ்ப்படிந்திருப்பது என்பதே அதன் ஆழமான சத்தியம். கீழ்ப்படிவது என்பது கனிகொடுப்தற்கான ஆழமான வேர்..!

முழுமையாய் பங்களிப்பு

தன்னைத்தான் தாழ்த்தாமல் திருப்பணியினை நிறைவேற்ற முடியாது. தன்னைத்தான் தாழ்த்தாமல் திருப்பணியில் முழுமையாக பங்கு பெற முடியாது. பல எதிர்ப்புகளை அவமானங்களை சந்திப்பது தான் சமூக சேவை. மனுக்குலத்திற்கான சேவையை செய்த எத்தனையோ மகாத்மாக்காள் அவமானத்தை சந்தித்துள்ளதை நாம் அறிந்திருக்கிறோம். மதர்தெரசா வாழ்வில் நடந்த சம்பவம் நீங்கள் அறிந்த ஒன்றுதான்.

மதர்தெரசாவின்மேல் வெறுப்பும் காழ்ப்புணர்ச்சியும் கொண்ட ஒரு டீக்கடைக்காரன் அவரை அவமானப்படுத்த நினைத்து அவர்கள் தனது ஆசிரம குழந்தைகளுக்காக கையேந்தி நின்றபோது அவரது கையில் எச்சில் துப்பினானாம். அப்போது மதர்தெரசா என்ன சொன்னார் தெரியுமா? நன்றியப்பா, எனக்குக் கொடுத்து விட்டாய் என் ஆசிரமத்துப் பிள்ளைகளுக்கு என்ன கொடுக்கப் போகிறாய் என்று கேட்டார்கள்.

அதுதான் தாழ்மை. தாழ்மையினால் வந்த பொறுமை. ஐநா சபைக்கு அன்னையார் அழைக்கப்பட்டபோது உலகமே வியந்தது. அவருக்கு கிடைக்கப்பெற்ற மரியாதை என்ன என்பதை உலகமே அறிந்தது. அப்போதும் அந்த மீட்டிங் முடிந்தபோது அங்கு மேஜைகளில் சாப்பிட்டு மீதமாய் வைக்கப்பட்ட தட்டுகளிலிருந்த முந்திரி மற்றும் பிஸ்கேட்டுகளை தனது ஆசிரம பிள்ளைகளுக்கு எடுத்துச் செல்ல தனது பையில் போட்டுக் கொண்டதை கண்ட ஐநாசபை தலைவர்கள் வியந்து நின்றார்கள். தாழ்மை மனுக்குல சேவைக்கு அடிப்படை.

தாழ்மை என்பதும் கனிதரும் வாழ்வு.

நம்மை தாழ்த்தாமல் திருப்பணியினை முழுமையாக நம்மால் நிறைவேற்ற முடியாது.

நமது ஆண்டவரும் திருப்பணியில் நமக்கு முன்மாதிரியாக இருக்க என்ன செய்தார்? யோவான் 13:1-17 தந்தை அனைத்தையும் நம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதை இயேசு அறிந்து உடனே எழுந்து சீஷர்களின் பாதங்களை கழுவத்தொடங்கினார்.

யோவான் 13:3 தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரம் என்ன என்பதை அறிந்த உடனேயே, நினைத்த மாத்திரத்திலேயே தாழ்மையை அணிந்துகொண்டார்.

யோவான் 13:13-15 "போதகரும் ஆண்டவருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால்" நானே என்பதன் அர்த்தம் நமக்கு தெளிவாய் விளங்கினால் நாம் எம்மாத்திரம் என்பது நிச்சயம் விளங்கும். நான் செய்தது முன்மாதிரி என்பதை அவரே நமக்கு விளக்கியுள்ளார்.

தாழ்மை நமது திருப்பணிக்கு அவசியம். திருப்பணி மனுக்குல சேவைக்கு அடிப்படையாக கொள்ள வேண்டுமானால் தாழ்மை தேவை. அந்த தாழ்மையை பெற்றுக் கொள்ளும்போது நாம் அந்த திருப்பணிக்கு முழுமையாய் நம்மை அர்ப்பணிக்க முடியும்.

யோவான் 13:16-17

ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப் பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.

நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

அடுத்த கொடியில் பறிப்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

15. கனி தரும் வாழ்க்கை

கனிதரும் வாழ்க்கைக்கு ஒரு ஆவிக்குரிய சோதனை..!

நாம் நமது வாழ்வில் நமது சரீரம் சீராக உள்ளதா? நமது சரீரத்தில் குறை ஏதேனும் கொண்டு ஆரோக்கியத்திற்கு தடையாக உள்ளதா என்பதை பரிசோதித்துக் கொள்கிறோம். 'மாஸ்டர் ஹெல்த் செக் அப்' என்று அதற்கு பெயரும் வைத்திருக்கிறோம். அதற்கான கட்டணத்தில் தள்ளுபடியில் எங்கேனும் கொடுக்கப் படுகிறதா என்றும் சோதனை செய்து கொண்டு செல்கிறோம்.

Who is my Master? Jehovah Rapha is my Master! Which is my Master health check up and my Master's health check up to me?

என்னுடைய மாஸ்டர் ஹெல்த் செக் அப் எது? என் மாஸ்டர் யார்? யேகோவா ர.ஃபா எனது மாஸ்டர். என்னுடைய போதகரும் ஆண்டவருமான இயேசு கிறிஸ்து எனும் மாஸ்டர் (ரபி) எனது ஆவிக்குரிய சோதனையைக் குறித்து என்ன சொல்கிறார்? அந்த சோதனையை நாம் மேற்கொண்டு பார்த்தோமானால் நாம் நமது வாழ்வை, கனிதரும், சுகாதாரமான, ஆரோக்கியமான, வாழ்க்கையை வாழலாம்! பரிசோதனை செய்து கொள்ளலாமா? வசனங்கள் நமக்கான பரிசோதனைகளுக்கு விடையளிக்கும்.

என் ஜெப வாழ்க்கை ஒழுங்காக உள்ளதா?

மாற்கு 1:35 இயேசு அதிகாலையில் இருட்டோடே எழுந்து புறப்பட்டு வனாந்தரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார்.

லூக்கா 5:16 கிறிஸ்துவோ வனாந்தரத்தில் தனித்துப் போய் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்

நமக்கு ஜெபிப்பது எவ்விதம் என்று கற்றுக் கொடுத்த இயேசு கிறிஸ்துவே அதிகதிகமாய் ஜெபித்தவர் என்று வேதம் நமக்கு சொல்கிறது. அதிகாலையில் எழுந்து ஜெபித்தார் என்றும் நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். தனிமையில், வனாந்தரத்தில், மலையின் மேலேறி, ஜெபித்து வந்தார் என்பதை விவிலியத்திலே வாசிக்கிறோம்.

கனி

அப்போஸ்தலர் 3:1 ஜெப வேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்தில் பேதுருவும் யோவானும் தேவாலயத்துக்குப் போனார்கள்.

சீஷர்கள் நேரம் தவறாமல் தேவாலயத்திற்கு சென்று ஜெபித்தனர் என்பதற்கு சாட்சியான வசனங்கள் அநேகம் உண்டு.

யாத்திராகமம் 34:2

விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்.

சங்கீதம் 5:3

கர்த்தாவே காலையில் என் சத்தத்தைக் கேட்டருளுவீர். காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி காத்திருப்பேன்.

சங்கீதம் 57:8

என் மகிமையே விழி, வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள். அதிகாலையில் விழித்துக் கொள்வேன்.

சங்கீதம் 143:8

அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும். உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்க வேண்டிய வழியை எனக்குக் காண்பியும். உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்.

புலம்பல் 3:23

கர்த்தரின் கிருபைகள் காலைதோறும் புதியவைகள்.

எனது வேத தியானிப்பு சீராக உள்ளதா?

சங்கீதம் 1:3

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியை இலையுதிராதிருக்கிற மரம் அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்

எரேமியா 17:7-8

கர்த்தர் மேல் நம்பக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாகத் தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாயிருக்கிறதும்,

மழைத் தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கிறதுமான மரத்தைப் போலிருப்பான்.

எஸ்றா 7:10 கர்த்தருடைய வேதத்தை ஆரயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசகிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்.

லூக்கா 4:16 தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு அவர் வந்து, தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வுநாளில் ஜெபஆலயத்திலே பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார் இயேசு.

சங்கீதம் 1:2 கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.

எனது எண்ணங்கள் பரிசுத்தமாக உள்ளதா?

நீதிமொழிகள் 4:23 எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்.

மத்தேயு 15:18-19 வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வரும். அவைகளே மனிஷனைத் தீட்டுப் படுத்தும். எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைளும், கொலை

பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்.

எனது வார்த்தைகளில் கவனமாக உள்ளேனா?

யாக்கோபு 3:2-8 எபேசியர் 5:4

- சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷன்
- அவன் சரீரம் முழுவதையும் கடிவாளத்தினால் அடக்கிக் கொள்ளக் கூடியவன்
- கடிவாளத்தினால் குதிரையின் முழுச்சரீரத்தையும் திருப்ப முடிவது போலவே
- சிறிய சுக்கானால் பெரிய கப்பலையும் நாம் போகின்ற இடத்திற்கு திருப்ப முடிவது போலவே
- சிறிய நாவானது பெருமை பேசும் பாருங்கள்!
- சிறிய நெருப்பு காட்டைக் கொளுத்திவிடும்
- சிறிய நாவும் நெருப்புதான்
- முழுச் சரீரத்தையும் கரைபடுத்திவிடும்
- ஆயுள் சக்கரத்தை கொளுத்தி விடும் நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாக இருக்கிறது.

எபேசியர் 5:4 வம்பும் புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள். ஸ்தோத்திரஞ் செய்தலே தகும்.

மத்தேயு 12:36 மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்.

எனது உணவுகளில் கட்டுப்பாடுள்ளதா?

நீதிமொழிகள் 23:2 நீ போஜனப் பிரியனாயிருந்தால், உன் தொண்டையிலே கத்தியை வை. கனிகொடுக்கும் வாழ்வில் என் உணவிலும் கட்டுப்பாடு இருக்கும்.

1கொரிந்தியர் 6:12-13

எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு. ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும்

அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன்.

வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும். ஆனாலும் கடவுள் இதையும் அதையும் அழியப் பண்ணுவார்.

பிலிப்பியர் 3:18-19 கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞராக இருப்பவர்களின் முடிவு அழிவு. அவர்களுடைய தேவன் வயிறு. வயிறு கடவுளானால் சிலுவை பகையாகும்.

எனது வாழ்வு எளிமையாயிருக்கிறதா? எனது வாழ்வில் திருப்தி அடைந்துள்ளேனா?

1 தீமோத்தேயு 6:6-7

போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தி மிகுந்த ஆதாயம்.
உலகத்தில் ஒன்றும் கொண்டு வரவுமில்லை கொண்டு போவதும் இல்லை.

வெளிப்படுத்தல் 14:13 கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்களுடன் அவர்களுடைய கிரியைகள் கூடப் போகும்.

1 தீமோத்தேயு 6:8 உண்ணவும் உடுக்கவும் உண்டாகி இருந்தால் அது போதும் என்று இருக்கக்கடவோம்.

லூக்கா 14:11 தன்னைத் தான் உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப் படுவான். தன்னைத் தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

மத்தேயு 6:31-32 என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகள் எல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

பிலிப்பியர் 4:11-13 பவுலடிகளின் திருப்தியான வாழ்க்கைக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன?

நான் எந்த நிலையில் இருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக் கொண்டேன்.
தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்.
வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்.
எவ்விடத்திலும் எல்லாவற்றிலும்
திருப்தியாயிருக்கவும் பட்டினியாய் இருக்கவும்
பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டிருக்கிறேன்
என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே
எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு.

எனது மனைவியிடம் உண்மையாய் உள்ளேனா? எனது கணவனிடம் உண்மையாய் உள்ளேனா?

1கொரிந்தியர் 6:18-20

வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனம் செய்கிறவன் தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.

ரோமர் 13:13 களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும் உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம்.

மல்கியா 2:15-16 கடவுள் பரிபூரணமான ஆவியுடையவராக இருந்தும் அவர் ஏன் ஒருவனைப் படைத்தார் (ஆதாம்). தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதான். தள்ளிவிடுதலை கர்த்தர் வெறுக்கிறார்.

மத்தேயு 5:28 ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று.

1தீமோத்தேயு 3:2 கண்காணியானவன் ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனுமாய் இருக்க வேண்டும்.

ரோமர் 2:22 விபச்சாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ (கிறித்தவன்) விபச்சாரம் செய்யலாமா?

1கொரிந்தியர் 7:3-4 புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன். அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யகடவள்.
மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல. புருஷனே அதற்கு அதிகாரி. அப்படியே புருஷனும் தன் சுயசரீரத்திற்கு அதிகாரியல்ல மனைவியே அதற்கு அதிகாரி.

கடமை தவறாத தாயாக தந்தையாக உள்ளேனா?

1தீமோத்தேயு 3:4-5 தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கம் உள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாய் இருக்க வேண்டும்.

ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாது இருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்

உபாகமம் 6:6-7 நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக் கடவது.

நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற பொதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக் கொள்ளுகிற போதும் எழுந்திருக்கிற போதும், அவைகளைக் குறித்துப் பேசு

நீதிமொழிகள் 22:6 பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து. அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்.

எபேசியர் 6:4 பிதாக்களே நீங்கள் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல, கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

கொலோசெயர் 3:21 பிதாக்களே உங்கள் பிள்ளைகள் திடனற்றுப் போகாதபடி அவர்களுக்குக் கொபமூட்டாதிருங்கள்

சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுகிறேனா?

கனி

மத்தேயு 17:25-27 பூமியின் ராஜாக்கள் தீர்வையையும் வரியையும் தங்கள் பிள்ளைகளிடத்தில் வாங்காமல் அந்நியரிடத்தில் தான் வாங்குகிறார்கள். பிள்ளைகள் அதைச் செலுத்த வேண்டியதில்லை. ஆகிலும நாம் அவர்களுக்கு இடறலாயிராதபடிக்கு அதை எனக்காகவும் உனக்காகவும் அவர்களிடத்தில் கொடு.
ரோமர் 13:1-7

எந்த மனிதனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். கடவுளாலன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டு உள்ளது.

அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமித்திற்கு எதிர்த்து நிற்கிறான்.

நீ அதிகாரத்திற்கு பயப்படாமல் இருக்க வேண்டுமானால் நன்மை செய்.

நீங்கள் கோபாக்கினையின் நிமித்தம் மாத்திம் அல்ல. மனசாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும். இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்து வருகிற தேவ ஊழியக்காரராக இருக்கிறார்கள்.

பணவிவகாரங்களில் நான் எப்படி உள்ளேன்?

எபேசியர் 5:5 பொருளாசைக்காரன் தேவனுடைய ராஜ்யமான கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரம் அடைவதில்லை.

தீமோத்தேயு 6:10-11 பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தைவிட்டு வழுவி அநேக வேதனைகளால் தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு.

மாற்கு 10:21-22 உனக்கு உண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷமும் உண்டாயிருக்கும்.

சங்கீதம் 15:5 உம்முடைய கூடாரத்திலும் பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுகிறவன் யார்? உத்தமனாய் நடந்து நீதியை நடப்பித்து மனதாரச் சத்தியத்தைப் பேசுகிறவான் தானே. அவன் தன் பணத்தை வட்டிக்குக் கொடாமலும், குற்றமில்லாதவனுக்கு விரோதமாய் பரிதானம் வாங்காமலும் இருக்கிறான்.

2கொரிந்தியர் 8:20-21 ஊழியத்தினாலே சேர்க்கப்படும் மிகுதியான தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் குற்றப் படுத்தாபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

கர்த்தருக்கு முன்பாகமாத்திரமல்ல, மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்.

அப்போஸ்தலர் 20:33-34 பவுலடிகள் சொன்னது என்ன?

ஒருவனுடைய வெள்ளியை பொன்னை வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை. எனக்கும் என்னுடனே கூட இருந்தவருக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலைசெய்தது.

லூக்கா 6:30-35 கிறிஸ்து சொல்வது என்ன?

உன்னிடத்தில் கேட்கிற எவனுக்கும் கொடு.
உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகிறவனிடத்தில் அதைத் திருப்பிக் கேளாதே.
மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்.
திரும்பக் கொடுப்பார்கள் என்று நம்பி நீங்கள் கடன் கொடுத்தால் உங்களுக்குப் பலன் என்ன?
திரும்பக் கொடுக்கப்படும்படியாகப் பாவிகளும் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே?
கைம்மாறு கருதாமல் கடன் கொடுங்கள் அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.

கனி

எனது மந்தையின் மேல் அன்புள்ளவனா?

2கொரிந்தியர் 12:15 பவுலடிகளார் மந்தைக்காக செலவு செய்தார். 1கொரிந்தியர் 13:1-2 அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லாத சத்தமிடுகிற வெண்கலம்.

பேதுருவிடம் முதலில் மனிதர்களை பிடிக்கிறவனாக்குகிறேன் என்று அழைத்தார் ஆனால் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று கடைசியில் சொல்லி அனுப்பினார். இது நமக்கும் சொல்லப்பட்டது என்பதை உணர வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

மக்களைப் பயிற்றுவிக்க, அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க அர்ப்பணிப்புள்ளவனா?

மாற்கு 4:33-34 கேட்டறியும் திராணிக்குத் தக்கதாக. உவமைகளினாலே. தனித்திருக்கும்போது கற்றுத் தந்தார்.

லூக்கா 11:1,4 ஜெபம் பண்ணும் விதத்தை கற்றுக் கொடுத்தார்.

எபேசியர் 4:11-13 கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் பூரண புருஷராக வேண்டும்.

- 1பேதுரு 3:15
- உங்களிடத்தில் உள்ள நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்.
- லூக்கா 6:46
- அந்த மனுஷர் (இயேசு) பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை

ஏழைகள் மேல் இரக்கம் கொண்டு இருக்கிறேனா?

லூக்கா 6:36 உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறது போல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்.

அப்போஸ்தலர் 20:35 பலவீனரைத் தாங்கவும் வாங்குகிறதை பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தை

கலாத்தியர் 6:10 நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்.

நீதிமொழிகள் 19:17 ஏழைக்கு இரங்குகிரவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.

யாக்கோபு 2:15-16 ஒரு சகோதரனாவது சகோதியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள். குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? விசுவாசம் கிரியைகளில்லாது இருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும்.

எவரிடமும் எந்த வேற்றுமையும் பாராதவனா(ளா)?

ஏற்றத்தாழ்வு என்பது மாயை. நரகத்தில் அனைவரும் சமமாகவே நடத்தப்படுவார்கள்.

1தீமோத்தேயு 5:21 நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும் விசாரிக்குமுன் நிருணயம் பண்ணாமலும் இவைகளைக் காத்து நடக்கும்படி தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்.

2நாளாகமம் 19:6-7 நியாயம் விசாரிக்கிற விஷயத்திலே அவர் உங்களுடனே இருக்கிறார். உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்திலே அநியாயமும் முகதாட்சிணியமும் இல்லை, பரிதானமும் அவரிடத்திலே செல்லாது.

மத்தேயு 6:24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டை பண்ணுவான்.

மத்தேயு 5:45 அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதி உள்ளவர்கள்

மேலும் அநீதி உள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.

எபேசியர் 3:3 பிற இனத்தவர் சுவிசேஷத்தினாலே உடன் சுதந்தரருமாய், ஒரே சரீரத்திற்கு உள்ளானவர்களுமாய், கிறிஸ்துவுக்குள் அவர் பண்ணின வாக்குத்தத்தத்துக்கு உடன் பங்காளிகளுமாய் இருக்கிறார்கள் என்கிற இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார்.

சாதி இன மொழி ஊர் வெறி கொண்டவனா(ளா)?

கொலோசெயர் 3:10-11 தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.

அதிலே கிரேக்கன் என்றும் யூதன் என்றும் இல்லை, விருத்தசேதனம் உள்ளவன் என்றும் விருத்தசேதனம் இல்லாதவனென்றும் இல்லை, புறஜாதியான் என்றும் புற தேசத்தான் என்றுமில்லை, அடிமை என்றும் சுயாதீனன் என்றும் இல்லை. கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாய் இருக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 7:9-10 நான் பார்த்தபோது, இதோ சகல ஜாதிகளிலும் (தேசங்களிலும்) கோத்திரங்களிலும், ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்.

ஏற்றத்தாழ்வு, பாரபட்சம், பட்சபாதம் போன்று துர்க்குணம் கொண்டிருந்தால் கனிகொடுக்கிறவர்களாக இருக்க முடியாது. கனிகொடுப்பதற்கு ஆவியின் கனியை அடைந்தவர்களாக இருக்க வேண்டும். ஆவியின் கனியில் சாதி இன மொழி வேறுபாடுகளுக்கு இடமில்லை.

நமது பரிசுத்த வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்கள் சாதி, இனம், ஊர், மொழி, எனும் பிரிவினையை ஏற்கின்ற ஏற்றத்தாழ்வுக் கொள்கை கொண்டவர்களாக இருந்திருந்தால் இன்று நமக்கு வேதாகமமே கிடைத்திருக்காது.

- யாக்கோபு 1:17
- அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை
- ரோமர் 15:7
- தேவனுக்கு மகிமையுண்டாக, கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டது போல, நீங்களும் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- யோவான் 17:23
- ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாய் இருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும் நீர் என்னில் அன்பாயிருக்கிறது போல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன்.
- கலாத்தியர் 3:28
- யூதனென்றும் கிரேக்கன் என்றுமில்லை அடிமை என்றும் சுயாதீனனென்றும் இல்லை, ஆணென்றும் பெண்ணென்றும் இல்லை. நீங்கள் எல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்.
- ரோமர் 10:12
- யூதன் என்றும் கிரேக்கன் என்றும் வித்தியாசமே இல்லை. எல்லாருக்கும் கர்த்தரானவர் நம்மைத் தொழுது கொள்ளுகிற யாவருக்கும் ஐஸ்வரிய சம்பன்னராயிருக்கிறார்.
- அப்போஸ்தலர் 17:26
- மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணி பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.
- ரோமர் 2:11
- தேவனிடத்தில் பட்சபாதமில்லை.
- 2 கொரிந்தியர் 5:17
- ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாய் இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின.
- ரோமர் 3:29
- கடவுள் யூதருக்கு மாத்திரமா கடவுள். பிற இனத்தவருக்கும் கடவுளல் அல்லவா? ஆம் பிற இனத்தவருக்கும் அவர் கடவுள் தான்.
- ரோமர் 15:15

- பிற இனத்தவராகிய பலி, பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தம் ஆக்கப்பட்டு, கடவுளுக்குப் பிரியமான பலியாகும்படிக்கு, நான்(ம்) கடவுளுடைய நற்செய்தி ஊழியத்தை நடத்தும் ஆசாரியராக இருந்து பிற இனத்தவருக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியர்.

சுவிசேஷ ஊழிய வாஞ்சை உள்ளவனாய், உள்ளவளாய் இருக்கிறேனா?

1கொரிந்தியர் 9:16 சுவிசேஷத்தை நான் பபிரசங்கித்து வந்தும் மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை. அது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ.

யோவான் 10:16 இந்தத் தொழுவத்தில் உள்ளவைகள் அல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

மத்தேயு 9:37-38 அறுப்போ மிகுதி வேலையாட்களோ கொஞ்சம். அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்.

கலாத்தியர் 4:19 கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன்.

அர்ப்பணிப்பு உடையனாய் இருக்கிறேனா(ளா)?
மற்றவருக்கு கணக்கொப்புவிப்பவனா(ளா)?

ரோமர் 15:18,21 பிற இனத்தவரை வார்த்தையினாலும் செய்கையினாலும் கீழ்ப்படியப் பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும், தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக் கொண்டு நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல நான் துணிவதில்லை.

நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின் மேல் கட்டாதடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.

பிலிப்பியர் 4:8 உண்மை உள்ளைவைகள் எவைகளோ, ஒழுக்கம் உள்ளைவைகள் எவைகளோ, நீதி உள்ளவைகள் எவைகளோ, கற்பு உள்ளவைகள் எவைகளோ, அன்பு உள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தி உள்ளைவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சித்தித்துக் கொண்டிருங்கள்.

2கொரிந்தியர் 8:20-21 ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த தர்மப் பணத்தைக் குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப் படுத்தாதடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து, கர்த்தருக்கு மாத்திரமல்ல மனுஷருக்கு முதுன்பாகவும் யோக்கியமானதை செய்ய நாடுகிறோம்.

தவறுகளைத் திருத்துகிறவனா(ளா)? என் தவறையும் திருத்திக் கொள்கிறவனா? திருத்திக் கொள்பவளா? எனக்கு எதிராக எழும்பும் பேச்சுக்களுக்கு மௌனம் சாதிப்பவனா(ளா)?

- கலாத்தியர் 2:11-14 நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால், யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், பிற இனத்தவர் முறைமையாக நடந்து கொண்டிருக்க, பிற இனத்தவர் யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக் கட்டாயம் பண்ணலாம்?
- பிரசங்கி 4:13 ஆலொசனைக் கேளாத கிழவனும் மூடனுமாகிய ராஜாவைப் பார்க்கிலும் ஏழையும் ஞானியுமாகிய இளைஞனே வாசி.
- 1 பேதுரு 2:20-23 அவர் வையப்படும் போது பதில் வையாமலும், பாடுபடும் போது பயமுறுத்தாமலும் நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்.
- மத்தேயு 5:11 என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.
- லூக்கா 6:37 மற்றவரை குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். அப்பொழுது நீங்களும் குற்றவாளிகள் என்று தீர்க்கப்படாதிருப்பீர்கள். மற்றவர்களை ஆக்கினைக்கு உள்ளாகும்படி தீர்க்காதிருங்கள் அப்பொழுது நீங்களும் ஆக்கிளைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்.

- 6:41-42 நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன. முன்பு உன் கண்ணில் இருக்கிற உத்திரத்தை எடுத்துப் போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடு.

என் தாய் தகப்பனை கனம் பண்ணுகிறேனா?

- மத்தேயு 15:4 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும் தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்பட வேண்டும் என்றும் தேவன் கற்பித்திருக்கிறாரே.
- நீதிமொழிகள் 1:8 என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.
- எபேசியர் 6:3 உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாய் இருக்கிறது.
- உபாகமம் 27:16

சக ஊழியர்களின் மேல் அன்பு செலுத்துகிறேனா?

- யோவான் 15:15 இனி நான் உங்களை ஊழியக்காரர் என்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன் ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்.
- அப்போஸ்தலர் 20:37-38 அவர்களெல்லாரும் மிகவும் அழுது, என் முகத்தை நீங்கள் இனிப் பார்க்க மாட்டீர்கள் என்று அவன் சொன்ன வார்த்தையைக் குறித்து அதிகமாய்த் துக்கப்பட்டு, பவுலின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அவனை முத்தம் செய்து கப்பல் வரைக்கும் அவனுடனே கூடப் போனார்கள்.
- ரோமர் 15:7 கடவுளுக்கு மகிமையுண்டாக கிறிஸ்து நம்மை ஏற்றுக் கொண்டது போல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.
- யாக்கோபு 2:23 ஆபிரகாம் கடவுளை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற

வேதவாக்கியம் நிறைவேறிற்று. அவன் கடவுளுடைய சிநேகிதன் என்னப்பட்டான்.

அடுத்தவரின் ஊழியத்திற்கு ஒத்துழைக்கிறேனா?

லூக்கா 5:3-5 பேதுருவின் படவினை சற்றே தள்ளும்படி கேட்டுக்கொண்டு அந்தப் படகில் உட்கார்ந்து ஜனங்களுக்கு போதகம் பண்ணினார். பேதுருவுக்கும் வலை கிழிந்து போகத்தக்கதாக மீன்களைப் பிடிக்க உதவி செய்தார்.

கலாத்தியர் 2:7-9 விருத்தசேதனம் உள்ளவர்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி பேதுருவுக்குக் கையளிக்கப்பட்டது போல, விருத்தசேதனம் இல்லாதவருக்கு பிரசங்கிக்கும்படி அது எனக்கும் கையளிக்கப்பட்டது. யாக்கோபு கேபா யோவானும்... எனக்கும் பர்னபாவுக்கும் வலதுகை கொடுத்தார்கள்.

கடினமாக உழைக்கிறேனா?

1கொரிந்தியர் 15:10 நான் இருப்பது கடவுளின் கிருபையால். அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை. அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய் பிரயாசப்பட்டேன். ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச் செய்தது.

1கொரிந்தியர் 15:58 கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவராயும் அசையாதவராயும் கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

யோவான் 9:4 நான் என்னை அனுப்பினவரின் கிரியைகளைச் செய்ய வேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.

சுயத்தை வெறுப்பவனாக(ளாக) உள்ளேனா?

லூக்கா 9:23 ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத் தான் வெறுத்து. தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

யோவான் 3:30 கிறிஸ்து பெருகவும் நான் சிறுகவும் வேண்டும் என்று சொன்னது அவரைக் குறித்து சாட்சி கொடுத்த யோவான் ஸ்நானகன்.

இப்படி வாழ்ந்துவிட்டால் மட்டும் போதுமா? அவருக்காக என்ன செய்ய வேண்டும். அவர் செய்யச் சொன்னது என்ன என்பதையும் நான் அதைச் செய்கிறேனா என்பதையும் சோதித்துப் பார்க்க வேண்டும்.

அப்போஸ்தலர் 1:8 பரிசுத்த ஆவியைப் பெறுவது, பூமியின் கடைசிபரியந்தம் அவருக்கு சாட்சிகளாயிருப்பது.
ஆனால் அதற்கான பயணம் எருசலேமில் தொடங்கி
யூதேயாவில் தொடர்ந்து அதன் முழுவதும்
பின்பு சமாரியாவிலும்
அதற்கு பின்பே பூமியின் கடைசிபரியந்தம்

இதன் அடிப்படையில் எனது ஊழியம் இருக்கிறதா? நான் எவ்விதம் அதனைச் செய்ய வேண்டும் என்று கர்த்தராகிய கிறிஸ்து சொல்லிச் சென்றது என்ன?

மத்தேயு 28:19-20 புறப்பட்டுப் போவது, சீஷராக்குவது, ஞானஸ்நானம் கொடுப்பது, கட்டளைகளை உபதேசம் பண்ணுவது.

இதுவரை ஏட்டுக் கனிகளைப் பறித்துப் பார்த்தோம். இனி அதனை நம் இதயத்தில் ருசித்துப் பார்த்து அப்பியாசப் படுத்துவோம். கர்த்தரின் முதற்கனிகளாய் மாறுவோம். மாரநாதா வரை மாறாமல் நற்கனிகள் கொடுப்போம்.

நற்கொடியாய் நிலைத்து நிற்போம்..!

><}}}}*> 00000 <*{{{{><

முடிவில்லாமல் கனிகொடுக்க என் முடிவுரை

அன்புக்குரியவர்களே! இதுவரை அத்தியாயங்களை ஆழ்ந்து பொறுமையாக உள்வாங்கி அசைபோட்டுமிருப்பீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். கனிகொடுக்கும் வாழ்விற்கான ஒரு கருத்துப் பரிமாற்றத்தைத் தான் நாம் கண்டிருக்கிறோம். ஒரு நூலாக இருப்பினும், போதனை அல்லது பிரசங்கமாக இருந்தாலும் அவைகள் நமது வேத அறிவையோ வேதாகம ஞானத்தை விருத்தியடையச் செய்வதற்கு அல்ல என்பதை நாம் அறிந்தவர்களாக இருக்கிறோம்.

அந்த ஒரு தெளிவுறும் நிலையில், மேலும் ஒரு முடிவில் ஒரு ஆரம்பமாய் நாம் சற்று தியானிக்கவே இந்த முடிவுரை. நான் இனி என்ன செய்ய வேண்டும் எனும் ஒரு தீர்மானத்திற்கு நம்மை உத்வேகப்படுத்துவதாய் அமையும் என்ற எண்ணத்தில் என் கருத்தினைத் தொடருகிறேன்.

சங்கீதம் 19:14 கர்த்தர் யார்? நாம் யார்? நமக்கு அவர் யார்? என்ற எண்ணத்தை பிரதிபலிக்கத் தக்கதாய் உள்ள வசனமாய் நம்மை உணர வைக்க சங்கீதக்காரர் தாவீது குறிப்பிட்டு என்ன சொல்கிறார்?

இந்த வசனத்தில் நமது வேதம் நமக்குப் புலப்படுத்தும் ஆழ்ந்த சத்தியம் என்ன என்று வரிவரியாய் தியானிப்போம்! இதற்கு ஒத்த வேத வசனங்களில் நாம் காணுகின்ற கருத்து நம் சிந்தனையை மேலும், நமது கர்த்தரின் பெயரை, அவரது குணாதிசயம், மற்றும் அன்பை நினைப்பூட்டுகிறதாய் அமைந்துள்ளது.

அவர் என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தர்.

(1கொரிந்தியர் 10:4 எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடே கூடச் சென்ற ஞானக்கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே)

(1பேதுரு 2:4 விலையேறப் பெற்றதுமாயிருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும்)

கனி

என் வாயின் வார்த்தைகளும்

(யாக்கோபு 3:10 துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படலாகாது). என் வார்த்தை எவ்விதம் இருக்கவேண்டும்!

என் இருதயத்தின் தியானமும்

(சங்கீதம் 143:5 பூர்வநாட்களை நினைக்க வேண்டும். அவரது செய்கைகளை தியானிக்க வெண்டும். கிரியைகளை யோசிக்க வேண்டும்). இதுவே என் இருதயத்தின் தியானம்.

அவரது சமூகத்தில் பிரீதியாயிருக்க வேண்டும்

அவரது சமூகம் என்றாலே அவருக்கு முன்பாக என்று அர்த்தம். அவரது பிரசன்னத்தில் என்று பொருள். அவரது சமூகம் எதில் கிடைக்கும் என்றால், நமது ஆவிக்குரிய வாழ்வில் என்பது நமக்கு விளங்கும்! அவரோடு கொண்டுள்ள உறவு என்றும் விளங்கிக் கொள்ள முடியும்.

(ரோமர் 8:5-6 மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளை சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம் (பாவத்தினிமித்தம் மரணம்). ஆவியின் சிந்தை ஜீவன் சமாதானம் (நீதியினிமித்தம் ஜீவன்). அவரது சமூகம் நம்மைத் தொடர இவை தேவை.

என் வாழ்வு இப்படி இருக்கிறதா? அப்படி இருப்பதற்கு நான் முயற்சிக்கிறேனா? மேலும் என்னிடம் கர்த்தர் எவைகளை எதிர்பார்க்கிறார் என்பதை பட்டியலிட்டுப் பார்ப்போமா?

பிலிப்பியர் 1:21 கலாத்தியர் 2:20 அவரிடம் சரணடையும்படி!

ஏசாயா 43:10 அவரை அறிந்து விசுவாசிக்க!

மத்தேயு 22:37-40 அவரை நேசித்து மற்றவரையும் நேசிக்க!

சங்கீதம் 86:12 அவரை மகிமைப்படுத்தும்படி!

சங்கீதம் 37:5 எரேமியா 7:23 அவர்மேல் நம்பிக்கை வைத்து அவருக்கு கீழ்ப்படிய!

1தெசலோனிக்கேயர் 5:16-18 அவரிடம் பேசும்படியாக!

மத்தேயு 10:38 அவரைப் பின்பற்றி செல்ல!

எபிரேயர் 12:2 அவர் மேல் கண் நோக்கமாய் இருக்க!

மீகா 6:8 அவரைப் போல இரக்கத்தை விரும்ப!

1பேதுரு 3:8 அவரைப் போல மனதுருக்கம் கொள்ள!

நீதிமொழிகள் 16:13 நீதி பேசுகிறவர்களாய் இருக்க!

ரோமர் 15:6 கிறிஸ்துவைப் போல ஏகசிந்தை உடையவராய்!

நீதிமொழிகள் 4:23 நமது இருதயத்தைக் காத்துக் கொள்ள!

மத்தேயு 20:26 ஊழியம் செய்கிறவர்களாய் இருக்க!

1தெசலோனிக்கேயர் 5:18 அவரிடம் நன்றியறிதல் கொண்டு இருக்க!

மத்தேயு 10:8 உதாரத்துவ குணமுள்ளவர்களாய் இருக்க!

1தெசலோனிக்கேயர் 5:11 ஒருவரை ஒருவர் தேற்றுகிறவராய் இருக்க!

மத்தேயு 6:15 ஒருவரை ஒருவர் மன்னிக்கிறவராய் இருக்க!

சங்கீதம் 27:4 அவருக்கு காத்திருக்கிறவர்களாய் இருக்க!

1சாமுவேல் 12:24 உண்மையுள்ளவர்களாய் இருக்க!

நம்மைப் பதம்பார்த்த இந்தப் பட்டியல் நம்மை பரிதபிக்க வைத்திருந்தால் நாம் இன்னும் கனிகொடுப்பதில் பூரணப் படவில்லை என்று பொருள். நாம் பெறுகிற உபதேசங்கள் என்ன? நாம் உணர்கிற உபதேசங்கள் என்ன? நமக்குப் பிரியமான உபதேசங்கள் என்ன?

2 யோவான் 9-10 கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்து இராமல் மீறி நடக்கிற எவனும் கடவுளை உடையவன்

அல்ல. கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்து இருக்கிறவன் பிதாவையும் குமாரனையும் உடையவன்.

ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள் என்று யோவான் கண்டிப்புடன் அறிவுறுத்துகிறார்.

கனியைத் தேடுகிற கர்த்தர் சொன்னது என்ன?

லூக்கா 13:5-9

மனம்திரும்பாமல் போனால் கெட்டுப் போவீர்கள்

- தன் திராட்சத் தோட்டத்தில்
- அத்தி மரத்தை நட்டிருந்தார்
- கனியைத் தேடி வந்தார்
- மூன்று வருஷமாய் கனியைத் தேடி வருகிறேன்
- ஒன்றையும் காணாததால் வெட்டிப் போடு என்றார்
- இது நிலத்தையும் கெடுக்கிறது
- இந்த வருஷமும் இருக்கட்டும்
- நான் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன்
- கனி கொடுத்தால் சரி. கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப் போடலாம்.

கனியைத் தேடுகிறவரைச் சரியாய்த் தேடுகிறோமா? கனி கொடுப்பதற்கு அவரைக் கேட்கிறோமா? அவரது வார்த்தை மூலம் எருபோடுவதற்கு கதவைத் தட்டுகிறோமா?

கேளுங்கள் - தேடுங்கள் - தட்டுங்கள் (மத்தேயு 7:7)

A.S.K: Ask Seek Knock. We need to seek to ask and knock.

கேட்கவும், தட்டவும், தேட, வேண்டும்.

Hence we must know what to seek. We must seek the place to seek.

எதைத் தேடவேண்டும் என்பதை நாம் அறியவேண்டும். அதற்கு தேடவேண்டிய இடத்தைத் தேடவேண்டும்.

We must seek the door to knock

யோவான் 10:9 நானே வாசல் என்றார்.

நாம் தட்டவேண்டியக் கதவைத் தேடவேண்டும்.

அப்போஸ்தலர் 17:26-27 அவரைத் தடவியாகிலும் கண்டு பிடிக்கத்தான் நம்மை ஒரே இரத்தத்தினால் தோன்றப் பண்ணினார். முன் தீர்மானிக்கப்பட்ட ஆயுட்காலத்தை கொடுத்தது மட்டுமல்லாமல், நாம் எங்கே வாழவேண்டும் என்கிற எல்லைகளையும் குறித்து, அப்படிச் செய்தார்.

கண்டுபிடித்த நாமே தேடவேண்டும் என்றால், காணாத, மனம் குருடானவர்கள் தேட, நாம் என்ன செய்கிறோம்? என்ன செய்ய வேண்டும்? நற்செய்தி நமது தலையாயக் கனி!

2 தீமோத்தேயு 4:2,5,8

1. சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும்
2. ஜாக்கிரதாய் திருவசனத்தை பிரசங்கம்பண்ணி
3. நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி
4. கடிந்து கொண்டு புத்தி சொல்லு
5. மனத்தெளிவுள்ளவனாயிரு
6. தீங்கு அனுபவி

7. சுவிசேஷகனுடைய வெலையைச் செய்
8. உன் ஊழியத்தை நிறைவேற்று
9. நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறது
10. கிறிஸ்துவின் பிரசன்னமாக்குதலை விரும்புகிற யாவருக்கும் அதை தந்து அருளுவார்.

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காக, கிறிஸ்துவின் சரீரமான சபையானது பக்தி விருத்தி அடைய, சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசியாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார் (எபேசியர் 4:12-13).

நற்செய்தியை அறிவிப்பது நம் மேல் விழுந்த கடமை தான் என்பதை நாம் உணரும்பொது நான் மேற்கண்ட ஏதேனும் ஒரு ஊழியத்தில் என்னை இணைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? இப்படியாக இல்லாவிடினும் என் மேல் விழுந்த கடமையை ஆற்ற என் பிரயாசங்கள் பாரத்துடனும், தாகத்துடனும், என் இருதயத்தில் உந்துதலாய் உத்வேகம் பெற வேண்டாமா?

2தீமோத்தேயு 2:15

நான் வெட்கப்படாத ஊழியக்காரனாகவும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாகவும், என்னைக் கடவுளுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படியாகவும் ஜாக்கிரதையாயிருப்பேன் என்று உறுதியெடுத்து, நற்செய்தி எனும் நற்கனிகொடுக்கும் கனிகளாய் மாறி நம் ஆவிக்குரிய வாழ்க்கைப் பயணத்தைத் தொடருவோம்.!

ஆமென்!

என் பேனாவிற்கு மெய் ஊற்றியவர்கள்

மேலை நாட்டு இறைப்பணியாளர்கள், செல்வின் ஹியூக்ஸ், ரிக்வாரன், மேத்யூ ஹென்றி,

சகோ. ஆர்.ஸ்டான்லி, திரு. செல்வின் தங்கதுரை போன்ற

அநேக இறைச் செய்தியாளர்களின்

ஆய்வு எழுத்துகள்.

நான் கேட்ட, கற்ற, படித்த, தியானித்த

கடவுளின் வார்த்தைகள், இறை நூல்கள்,

இறை பத்திரிகைகள்.

எனது ஆவிக்குரிய நண்பர்கள், போதகர்கள், சகஊழியர்கள் பகிர்ந்த

வேதக் கருத்துகள்.

மற்றும்

ஊடகங்கள் – வலைதளங்கள்

><}}}}*> 00000 <*{{{{><

ஆசிரியரின் பிற நூல்கள்

- இளங்குயில்களின் இனிய பூபாளம் (1984)
- விசிறிக்கு வியர்க்கிறது (2005)
- நேசம் (திரைக்கதை வசனம் - 2013)
- விவிலிய ஒளியில் சித்தர் பாடல்கள் (2018)
- திரையில் பூத்த துளசிப் பூக்கள் (2019)
- திருவார்த்தைத் துலாபாரம் (2021)
- மார்ஸ் மேடை (2021)
- கனி (2021)

><}}}}*> 00000 <*{{{{><

அனைத்து நூல்களுக்கும்:

காப்புரிமை: ஜே ரமேஷ், நூலாசிரியர்

அலைபேசி: 9841053626

மின்னஞ்சல்: rameshaction@gmail.com

YouTube: IOJ TV

நூலாசிரியரைப் பற்றி...!

பெயர் : ஜே ரமேஷ் (J.Ramesh)
முழுப்பெயர் : ஜானி ரமேஷ் (Johnny Ramesh)
முழுநேர ஊழியம் : ஊடக ஊழியம் (Media Ministry)
பணி : நற்செய்தி திரைப்பட இயக்குனர் (Gospel Film Maker)

எழுதி இயக்கிய சுவிசேஷத் திரைப்படங்கள் :

பதினெட்டு தொலைக்காட்சிப் படங்கள்
(Written and Directed 18 Telefilms)
(நேசம், வேதா, வாசம், சாத்தானின் தந்திரங்கள், சகாயம், சத்தியத்தைத் தேடி, என் மகனே, ஒளியைத் தேடி, பயணிகள் கவனிக்கவும், புரட்டப்பட்ட கல், சாவி, உதயம், மாற்றம், அமாவாசை, ஜே, கண்டிட்டேனே, காத்தாடி, ஐந்தவித்தான்)

கல்வித் தகுதி :

இளங்கலை (மெய்ப்பொருளியல்) B.A. (Philosophy)
இறையியற் கல்வி :
பி.டி.எச் (B.Th. Sathiathin Vazhi Bible College, Affln. Jerusalem Bible College)

பிற ஊழியப் பொறுப்புகள் :

துணை ஆசிரியர் (சத்தியத்தின் வழி மாத இதழ் – Sub Editor)
பொதுச் செயலாளர், நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம் (NILT)
அருளுரையாளர் (Lay Preacher)
தென்னிந்தியத் திருச்சபை, சென்னைப் பேராயம்.

நான் இயேசுவிற்கு கடனாளி ஊழியங்கள் (நிறுவனர்)
I Owe Jesus Ministries - Founder

பிற ஊழியங்கள் :

இளைஞர்கள், குடும்பங்களுக்கு ஆலோசனை
Counselling
கன்வென்ஷன் கூட்ட செய்தியாளர்
Convention Speaker
கிராம ஊழியங்கள்
Outreach Ministry with the support of local Churches
நற்செய்தி திரைப்படங்கள் திரையிடல்
Screening Gospel Films
ஒரு நாள், மூன்று நாள் கருத்தரங்குகள் நடத்துவது
NILT Seminars



ஜே ரமேஷ்
98410 53626



IOJ TV- YouTube
Kindly subscribe and be blessed

கனி

இயேசு இரட்சிக்கிறார் ஊழியங்கள் வெளியீடு

Price Rs 200.00
ISBN 979-888521764-4